REGISTERED AS A CATHOLIC WEEKLY (P.197) Established 19 Feb. 1876

# பாதுகாவலன்

PATHUKAVALAN

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வாரஏடு

மலர் : 125
இதழ் : 04
விலை : ரூ.10
ஈஸ்டர் சிறப்பிதழ்
15-04-2001
பக்கங்கள் : 16

# உயிர்ப்பு விழா சிறப்பிதழ் 2001




## அரசு தம் நல்லெண்ண நடவடிக்கையை காட்டவேண்டும்

### ஆயரின் ஈஸ்டர் செய்தி

ஆண்டவர் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு, எனும் மறைநிகழ்ச்சிகளை நினைவுகூரும் பாஸ்கா பெருவிழாக் காலம் உலகெங்கிலும் வாழும் கிறிஸ்தவ மக்களுக்கு மிகவும் முக்கியமான காலமாகும்.

கிறிஸ்தவ மக்களுக்கு மிகவும் முக்கியமான இந்தப் பெருவிழாக் காலத்திலேயே தமிழ் புத்தாண்டு காலமும் அமைகின்றபடியினால் இக் காலம் இருபகுதியினருக்குமே ஒரு முக்கியமான காலமாகும்.

இந்த சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த காலத்திலே இவ் ஆண்டு என்றுமில்லாதவாறு சமாதான முன்முயற்சிகள் நடைபெறுவது மிகவும் வரவேற்கத்தக்கதே. மிகநீண்ட காலமாக முடிவெதையும் காணாது நீண்டு கொண்டு போன இக் கொடிய போர் முடிவுக்கு வராதா என்று ஏங்கிய நல்மனது கொண்டபலரின் ஏக்கங்களும் வேண்டுதல்களும் இக் காலத்தில் நிறைவுபெற வேண்டுமென்பதையே நாம் பெரிதும் விரும்புகின்றோம்.

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இப்போது இவ் ஆண்டை சமாதான ஆண்டாக பிரகடனப்படுத்தியிருப்பதும் தமிழீழ விடுதலைப் புலிகள் இவ் ஆண்டில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு கடந்த வருட டிசெம்பர் மாதம் 24ம் நாள் நள்ளிரவு தொடக்கம் ஒரு தலைப்பட்ச போர் நிறுத்த அறிவிப்பை செய்து அதனை மூன்று தடவைகள் நீடித் திருப்பதும் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதில் இரு தரப்பினருக்கும் இருக்கின்ற அடிப்படை ஆசையையே காட்டுகிறது.

மிக நீண்டகாலமாக ஒருவரையொருவர் நம்பாமல் ஒருவர் மேல் ஒருவர் போர் வன்முறை களையும் நீண்ட பகைமை உணர்வின் செயற்பாடுகளையும் செய்து கொண்டு வந்தபின்னர் திடீரென ஓரிரவில் நம்பிக்கையையும் சமாதானத்தையும் அன்புறவையும் ஏற்படுத்துவதென்பது இலகுவான காரியமல்ல.

மிக நீண்டகாலமாகவே மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்தின் வழியாகவே இலங்கை மண்ணில் அமைதியும் சமாதானமும் பிறக்க ஏதோ ஒரு வகையில் வழியுண்டு என நாம் வலியுறுத்திக் கொண்டே வந்துள்ளோம். இப்போது நோர்வே நாட்டு சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் இடைவிடா முயற்சியாலும் சர்வதேச சமூகத்தின் தொடர் அழுத்தத்தினாலும் நம்பிக்கையின் ஒளிக்கீற்றுக்கள் தெரிகின்ற வேளையில் இந்த சந்தர்ப்பத்தை எந்த வகையிலும் இழந்துவிட வேண்டாம். இலங்கை மண்ணுக்கும் மக்களுக்கும் நிரந்தர பேரழிவையும் அனர்த்தத்தையும் விளைவிக்க வழிகோல வேண்டாம் என்று மனிதாபிமானத்தின் பெயரால் மீண்டும் ஒரு தடவை மிக உரத்து வலியுறுத்த விரும்புகிறோம்.

எமது புத்தாண்டு செய்தியிலே பேச்சுவார்த்தைக்காக கிடைத்த ஓர் இறுதி சந்தர்ப்பம் இதுவாகும், என விடுத்த வேண்டுகோளுக்கு மீண்டும் இங்கு அழுத்தம் கொடுக்க விரும்புகிறோம்.

ஒருவரையொருவர் குற்றம் சாட்டி ஒருவரின் மேல் ஒருவர் நம்பிக்கை கொள்ளாமல் ஏமாற்று யுக்திகள் வழியாக சமாதான முயற்சிகளை பின்னடையச் செய்யும் நடவடிக்கைகளை இருபகுதியினரும் அறவே வெறுத்து ஒதுக்க வேண்டும் என்று மிகவும் கனிவுடன் வேண்டுகிறோம்.

விடுதலைப் புலிகள் சமாதானத் தீர்வில் தமக்குள்ள உறுதியை வெளிப்படுத்தி ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண இணக்கம் தெரிவித்து தமது நல்லெண்ண நடவடிக்கையாக ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை மூன்று தடவைகள் நீடித்து தெற்கு சிவிலியன்கள் மீதான தாக்குதல்களை விலக்கி கைதிகளையும் தடுத்துவைக்கப்பட்டோரையும் விடுதலை செய்துள்ளவேளையில் அரசும் தம் நல்லெண்ண நடவடிக்கையை உடன் காட்டவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றோம்.

ஜனாதிபதி ஐரோப்பிய நாடுகளின் தலைநகரங்களுக்கு விஜயம் செய்து சமாதானத் தீர்வில் உறுதியாக இருப்பதாக ஒருபுறம் தெரிவித்த அதேவேளையில் மறுபுறம் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கும்படி கோரி தனிமைப்படுத்த விரும்புவது வருத்தத்துக்கும் கண்டனத்துக்கும் உரியது.

இனியும் காலந் தாழ்த்தாது உடனடியாக நடவடிக்கையில் இறங்கவும் நல்லதொரு எதிர்காலத்தை உருவாக்கவும் வேண்டிய ஒரு நல்ல சந்தர்ப்பத்தை கைநழுவவிட வேண்டாம் என இது விடயமாக சம்மந்தப்பட்ட அனைவருக்கும் அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம்.

இயேசு உயிர்த்த பின்னர் சந்தித்த மனிதர்கள் எல்லோருக்கும் உங்களுக்கு சமாதானம் என்ற வாழ்த்தையே தெரிவித்தார். இந்த சமாதான வாழ்த்து ஆழமானது. எம் மனங்களில் உள்ள பகைமை, குரோத உணர்வுகளை களைந்து எமக்கு மாறுபட்டவர்களை புரிந்துணர்வோடு ஏற்று, மன்னித்து அனைவரையும் சகோதரராய் ஏற்பதுதான் ஆண்டவர் இயேசு அருளிய அமைதி. இவ்வகை அமைதி எங்கள் மண்ணிலும் நீண்டுநிலைக்க ஆசிக்கின்றோம்.

*மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை*
*யாழ். ஆயர்*

# ஈஸ்டர் வாழ்த்துக்கள்

# HAPPY EASTER

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மில்லேனியக் குருக்கள் யாழ். திருச்சபைக்கு நால்வர்

**யாழ். மறைமாவட்டத்திற்கு இறைவன் அருளால் நான்கு புதிய குரவர்கள் இவ் ஆண்டில் திருநிலைப்படுத்கப்படவுள்ளனர்.**

**அருட்சகோதரர்கள் எயின்சிலி றொஷான், றோய் பேடினன், அலெக்ஸ்ஸி அருட்செல்வன், ஆகிய மூவரும் எதிர்வரும் மே மாதம் ஏழாம் திகதி யாழ். ஆயரால் யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் குருக்களாக திருநிலைப்படுத்தப்படவுள்ளனர். அருட்சகோதரர் ஜோசவ் ஜெயசீலன் எதிர்வரும் மே மாதம் 26ம் திகதி புதுக்குடியிருப்பு சூசையப்பர் ஆலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளார். இவர்கள் நால்வரும் யாழ். ஆயரினால் கடந்த ஆண்டு ஐப்பசி மாதம் 26ந் திகதி திருத்தொண்டராகப் திருநிலைப் படுத்தப்பட்டனர்.**

**மில்லேனியத்தின் புதிய குருக்கள் இவர்கள் நற்பணி புரிய பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.**



அருட்சகோதரன்
செ. எயின்சிலி றொஷான்

இவர் ஆனைக்கோட்டை புனித அடைக்கலநாயகி ஆலய பங்கைச் சேர்ந்த திரு. ஞானப்பிரகாசம் செபஸ்தியாம் பிள்ளை– மோசஸ் அருள்மணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன்.

இவர் தமது ஆரம்பக் கல்வியை பொல்காவல தமிழ் வித்தியாலயத்திலும், இடைநிலை உயர் தொடர் உயர் கல்வியை யாழ். மத்திய கல்லூரியிலும் கற்றுத்தேர்ந்தார்.

பாடசாலைக் கல்வியின் பின் இறை அழைத்தலை தம் வாழ்வில் உணர்ந்துகொண்ட இவர் 1991ம் ஆண்டு மாசிமாதம் 2ம் நாள் தமது ஆரம்ப குருத்துவ பயிற்சிக்காக தம்மைப் புனித மடுத்தீனார் குருமடத்தில் இணைத்துக் கொண்டார்.

1992ல் கொழும்புத்துறை புனித சவேரியார் குருமடத்தில் இணைந்து கொண்ட இவர் தமது மெய்யியல், இறையியல் கல்விகளை கற்றுத்தேர்ந்து தமது உயர் குருமட பயிற்சியை நிறைவு செய்தார். மெய்யியல் இறையியலில் இளமானிப் பட்டங்களை பெற்றுக்கொண்டவர்.

இவர் திருத்தொண்டராக கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்திலும், யாழ். மரியன்னை பேராலயத்திலும் பணி புரிந்தார். *ஆனையூர் திருச்சபையின் முதல் குருமணி இவர் என்பது குறிப்பிடத் தக்கது.*



அருட்சகோதரன்
செ. றோய் பேடினன்

இவர் கரம்பொன் புனித செபஸ்ரியார் ஆலயத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.யோசப் செபஸ்ரியன் ஆசீர்வாதம் பெலிக்ஸ் தம்பதிகளின் புதல்வன்.

இவர் தமது ஆரம்பக் கல்வியை புனித சிறிய புஷ்ப மகளிர் மகாவித்தியாலயத்திலும் இடைநிலைக்கல்வியை புனித. அந்தோனியார் கல்லூரியிலும் உயர் கல்வியை புனித. புத்தரிசியார் கல்லூரியிலும் கற்றுத்தேர்ந்தார். 1989ல் புனித மாட்டீனார் குருமடத்தில் சேர்ந்த இவர் அங்கு தனது ஆரம்ப குருத்துவ பயிற்சியை நிறைவுசெய்து 1992ல் புனித சவேரியார் குருமடத்திலும் இணைந்து மெய்யியல், இறையியல் கல்விகளை கற்றுத்தேர்ந்து தமது உயர் குருமட பயிற்சியை நிறைவு செய்தார். மெய்யியல் இறையியலில் தமது இளமானிப் பட்டங்களைப் பெற்றுக் கொண்டவர். இவர் திருத்தொண்டராக இளவாலைப் பங்குகளிலும், குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திலும் பணியாற்றினார்




அருட்சகோதரன்
அலெக்சிஸ் அருட்செல்வன்

இவர் நவாலி புனித பேதுருவானவர் ஆலய திருச்சபையைச் சேர்ந்த பிரகாசம் சிலுவைராசா குருசுமுத்து செபமாலையம்மா தம்பதியின்ரின் மகனாவார்.

இவர் தமது ஆரம்பக் கல்வியை நவாலி புனித. பீற்றர் பாடசாலையிலும் இடை நிலைக் கல்வியை புனித. ஹென்றியரசர் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி களிலும், உயர்கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.

இறை அழைப்பை உணர்ந்து கொண்ட 1987ம் ஆண்டு புனித மாட்டீனார் குருமடத்தில் குருத்துவ ஆரம்ப பயிற்சிக்காக தம்மை இணைத்துக்கொண்டார். 1992ம் ஆண்டில் தமது உயர் குருமடப் பயிற்சிக்காக கொழும்புத்துறை புனித. சவேரியார் குருமடத்தில் இணைத்துக்கொண்ட இவர் மெய்யியல், இறையியலில் இளமானிப் பட்டம் பெற்றார்.

இவர் திருத்தொண்டராக யாழ். மரியன்னை பேராலயத்திலும், சுன்னாகம் புனித அந் தோனியார் ஆலயத்திலும் பணிபுரிந்தார். *இவர் நவாலி திருச்சபையின் முதல் குருமணி என்பது குறிப்பிடத்தக்கது.*



அருட்சகோதரன்
ஜோசப் ஜெயசீலன்

இவர் வசாவிளான் புனித உத்தரிய மாதா ஆலய பங்கைச் சேர்ந்த திரு. சிங்கராசா ஜோசப் அருள்நாயகத்திற்கும் திருமதி ஞானப்பிரகாசம் மேரி றோசலீனுக்கும் மூன்றாவது மகனாகப் பிறந்த அருட்சகோதரன் ஜோசப் ஜெயசீலன் அவர்கள் எதிர்வரும் வைகாசிமாதம் 26ந்திகதி (சனிக்கிழமை) முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் யாழ். ஆயர் அவர்களினால் இறைவனின் பணிக்குருவாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளார்.

இவர் தமது ஆரம்பக் கல்வியை வசாவிளான் றோ.க. த. க. பாடசாலையிலும், இடைநிலைக்கல்வியை வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திலும், இளவாலை புனித. ஹென்றியரசர் கல்லூரியிலும் கற்று, பின் உயர் கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார்.

1989ம் ஆண்டு தனது ஆரம்ப குருத்துவப் பயிற்சியை புனித மடுத்தீனார் சிறிய குருமடத்தில் ஆரம்பித்து, தனது உயர்குருமட பயிற்சியை 1992ல் கொழும்புத்துறை புனித சவேரியார் குருமடத்தில் மெய்யியல், இறையியலில் கல்விகளில் இளமானிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். திருத்தொண்டராக மானிப்பாய் புனித. அந்தோனியார் ஆலயத்திலும், பருத்தித்துறை புனித. தோமையார் ஆலயத்திலும் பணியாற்றினார்.

## ஆனைக்கோட்டைப் பங்கில் திருப்பாலத்துவ சபையினரின் ஒன்றுகூடல்

கடந்த 18–03–2001 ஞாயிறு அன்று ஆனைக்கோட்டை, தேவர்கட்டு, நவாலி ஆகிய பங்குகளைச் சார்ந்த திருப்பாலத்துவ சபையினரால் இணைந்து, தேவர்கட்டு திரு இருதயநாதர் ஆலயத்திலே ஓர் ஒன்றுகூடல் இடம்பெற்றது.

அன்று, காலை பத்து மணியளவில் திருப்பாலத்துவ சபையினர் இயேசுவின் திருப்பாடுகளை சிலுவைப்பாதையூடாக நடித்தது குறிப்பிடத் தக்கது. இவர்களின் தத்துவமான நடிப்பு அனைவரின் உள்ளத்தையும் கொள்ளை கொண்டது. சின்னஞ் சிறுபாலர்களின் கவர்ச்சி மிக்க நடிப்புக்களின் ஊடாக அவர்களது ஆற்றல்கள், திறமைகள் பாராட்டுதற்குரியதாகும். இந்நிகழ்ச்சி தவக் காலத்திற்கு மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளது.

அதனை தொடர்ந்து பன்னிரண்டு மணியளவில் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. வழிபாட்டினை பாலர் சபையினர் முன்னின்று நடாத்தினர். ''சின்னஞ் சிறிய மறைத்தூதர்களாகிய நீங்கள் சிறிய செயல்களின் வழியாக இயேசுவுக்குச் சாட்சியாக விளங்க வேண்டும்'' இவ்வாறு மறையுரையில் ஆனைக்கோட்டைப் பங்குத்தந்தை அ. ப. அந்தோனிப்பிள்ளை அடிகளார் குறிப்பிட்டிருந்தார்.

பிற்பாடு சிறார்கள் மத்தியில் பகிர்தலுடன் கூடிய மதிய உணவும் மகிழ்ச்சியுடன் பரிமாறப்பட்டது. இதனைத் தொடர்ந்து சிறுவர்களின் மனத்திற்கு மகிழ்ச்சி அளிக்கப் பல கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. பின்பு தேநீர் அனுசரணையுடன் பிற்பகல் 5.00 மணிக்கு யாவும் இனிதே நிறைவெய்தியது.

அமைதியும், அழகும் ஒருங்கே அமையப் பெற்ற இவ்விடம் ஆண்டவனின் பிரசன்னத்தை மிகைப்படுத்திக் காட்டியது உவப்பானதாகும். இவ்வாறான ஒன்றுகூடல்கள் பங்குகளிலே வதியும் திருப்பாலத்துவ சபையினரின் நெருக்கமான உறவுகளுக்கும் அன்புப் பகிர்வுகளுக்கும் நல்லதோர் வழியாகும். திருப்பாலத்துவ சபையினரின் ஊக்குவிப்பாளர் அனைவரின் நெறிப்படுத்தல் இந்நிகழ்ச்சி சிறப்பான முறையில் நடாத்துவதற்குத் தூண்டுதலாக அமைந்தது எனலாம்.

எனவே இந்நிகழ்வுகளை இலைமறைகாயாக இருந்து, பலவிதத்திலும் பற்பல உதவிகளைப்புரிந்த எம் ஆனைக் கோட்டைப் பங்குத்தந்தையர்க்கு, இதயம் கலந்த எம் நனறிப் பெருக்குகளை கூறிக் கொள்கின்றோம்.

*தவம் குருசுமுத்து*
*நவாலி*

## பொதுநிலையினர் கருத்தரங்கு

மேற்படி கருத்தரங்கு 24.03.2001 சனிக்கிழமை யாழ்ப்பாணம் மறைக்கல்வி நடுநிலையத்தில் பொதுநிலையினர் ஆணைக்குழுவின் தலைவர் அருள்திரு R.H. சகாயநாயகம் தலைமையில் இடம்பெற்றது. யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழுவும், அன்பியக் குழுமமும் இணைந்து இக்கருத்தரங்கை நடாத்தியது ஒரு சிறப்பம்சமாகும். இதில் யாழ். மறைமாவட்டத்தின் ஆலய சபைகள், மேய்ப்புப்பணிச் சபைகளின் செயலாளர்கள், பொதுநிலையினர் ஆணைக் குழுவின் உறுப்பினர்களுமாக 41 பேர் கலந்து கொண்டனர்.

தலைவர் தமது தலைமையுரையின்போது ஆலய சபையின் செயலாளர்கள் பங்குகளில் பொதுநிலையினரை ஊக்குவிப்பவர்களாக செயற்படவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். அடுத்து பொதுநிலையினர் திருச்சபையின் முதுகெலும்பு ( அடிநாதம் ) என்ற பொருளில் ஆணைக்குழுவின் மூத்த உறுப்பினர் ஆசிரியர் அணைக்குழுவின் மூத்த உறுப்பினர் ஆசிரியர் திரு A.S. அகஸ்ரின் சிறப்புரை ஒன்றை வழங்கினார். தொடர்ந்து அருள் திரு. ப. இருதயதாஸ் ''இன்றைய கருத்தரங்கு ஒரு புதிய மாற்றம் – அதாவது பங்கேற்கும் திருச்சபையின் உருவாக்கத்தில் ஆலயசபைகளின் செயலாளர்கள் முக்கிய பங்கு வகிக்க வேண்டியவர்கள் அவர்கள் இன்று தொடப்பட்டுள்ளார்கள்'' என்று தமது உரையின் மூலம் பங்குபற்றியோர் மத்தியில் பொதுநிலையினர் செயற்பாடுகள் பற்றி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தினார். ''பங்கேற்கும் திருச்சபை'' என்ற மையக்கருத்தின் உரைகளையும் பட்டறையையும் அருள்திரு ப. இருதயதாஸ், அருள்திரு ஆ. யேசுரட்ணம் ஆகியோர் நெறிப்படுத்தினார்கள்.

கலந்துரையாடலின்போது பங்குரீதியாக ஆலய சபைகளினதும், மேய்ப்புப் பணிச்சபைகளினதும் அங்கத்தவர்களினதும் அங்கத்தவர்களுக்கு அவ்வப் பங்குகளில் பணிபுரிய முன்வந்துள்ள அன்பிய பங்கு ஊக்குவிப்பாளர்களுக்கும் அன்பியப் பயிற்சிப் பட்டறை நடாத்தப்பட வேண்டும் என்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஈற்றில் பொதுநிலையினர் ஆணைக்குழுவின் செயலாளர் திரு.பெ.பிரான்சீஸ் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசினாலும் எதிர்க்கட்சியாலும் புலிகளாலும் மேற்கொள்ளப்படும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையையும் சர்வதேச சமூகத்தினரால் மேற்கொள்ளப்படும் 3ஆம்தரப்பு மத்தியஸ்த்தையும் வரவேற்கின்றோம்

## புதிய நூற்றாண்டினுள் பயணம் செய்தல் (Journey in-to the New Millennium)

### இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் புத்தாயிரமாண்டு திருமுகத்தில் ஆயர்கள்

புதிய நூற்றாண்டினில் நுழைவது பற்றிய திருமுகம் ஒன்றினை இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையானது கடந்த டிசம்பர் 25ம் திகதி வெளியிட்டது. இதனுடைய ஆங்கில தமிழ் பிரதிகள் தற்போது வெளியாகியுள்ளன. இறைவனின் பணியினை பகிர்ந்துகொள்ளுதல், வாழ்க்கையில் தூய்மை, தேசிய பரச்சினை., தேசிய மேய்ப்புப் பணி மகாநாடு, அசிப்பாவும் புதுப்பித்தலும், புதிய மறைக் கல்வி, அரச பாடசாலைகள், குடும்பங்களின் மேய்ப்புப் பணி, நற்செய்தி அறிவிப்பு ஒன்றிப்பு, கலந்துரையாடல், சமூக சிந்தனை, குருக்களும் துறவியர்களும் என்ற தலைப்பக்களில் வெளியிடப்பட்ட மேற்படி திருமுகத்தில் தேசிய பிரச்சினை என்ற தலைப்பிலேயே மேற்படி கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானத்தின் கருவிகளாக (மத். 5:9) இறைவன் தரும் அழைப்பிற்கு செவிமடுக்க வேண்டும் எமது சக்திக்கு உட்பட்ட வகையில் எம்மால் செய்யக்கூடிய அனைத்தையும் செய்து சமாதான முயற்சிகளை ஊக்குவிப்பதன் வழியாக அரசியல் தீர்வினை அடைய நாம் உழைக்க வேண்டும் என்ற கருத்துப்பட எழுதப்பட்ட மேற்படி பகுதியிலே 1994ம் ஆண்டு இலங்கை தேசத்தை மீளக் கட்டியெழுப்பல் என்ற தலைப்பில வெளியிடப்பட்ட திருமுகத்தின் சில கருத்துக்களை திரும்பவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். அவை :

1. அனைத்து தரப்பினரும் நம்பிக்கை வைக்கக்கூடிய மூன்றாம் தரப்பு மத்தியஸ்த்தத்துடன் விடுதலைப் புலிகள் உட்பட பிரச்சினையில் சிக்கியுள்ள அனைத்துத் தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்துவதுடன் மூலமே தீர்வினை அடைய முடியும்.

2. போரினாலும் வன்முறையினாலும் சட்டத்தையும் நீதியையும் அடைய முடியும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாததும் ஒழுக்க முறைப்படி கண்டனத்துக்குரியதுமாகும்.

3. அனைத்து இன குழுக்களையும் சம அந்தஸ்துடையவர்களாக மதிக்கும் ஒரு அரசியல் நிலைகொண்ட தீர்வே காணப்பட வேண்டும். அரசியல் யாப்பில் எந்த விசேட சலுகைகளும் எந்தக் குழுவினருக்கும் வழங்கப்படக் கூடாது.

4. நீதியான நிலையான சமாதானம் ஐக்கிய இலங்கையின் உள்ளேயே காணப்பட வேண்டும். இருப்பினும் தன்னை நிர்வகிக்க கூடிய சுயாட்சி வடக்கு கிழக்கிற்கு வழங்கப்பட வேண்டும்.

5. விசேடமாக வட–கிழக்கு வாழ் மக்களின் ஆசை, அபிலாசைகளை கவனத்திற் கொண்ட அரசியல் தீர்வானது தெற்கு வாழ் அரசியல் குழுக்களின் கருத்தொருமைப்பாட்டில் உருவாக்கப்பட வேண்டும்.

6. சமதான முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமானால் பேச்சுவார்த்தைக்கான நிலைகள் உருவாக்கப்பட வேண்டும். இதற்கு இருதரப்பினரும் யுத்த நடவடிக்கைகளை குறைத்துக் கொள்ள வேண்டும். வடகிழக்கு வாழ் மக்கள் மேல் விதிக்கப்பட்டுள்ள உணவு மருந்து மீதான தடை நீக்கப்படுவதோடு கிழக்கிலிருந்து வடக்கிற்கும் வடக்கிலிருந்து கிழக்கிற்கும் பிரயாணம் செய்யக் கூடிய வசதிகள் செய்யப்படுவதோடு அரசியல் கைதிகளும் தடுத்துவைக்கப்பட்டோரும் இருதரப்பினாலும் விடுவிக்கப் பட வேண்டும்.

எல்லா விசுவாசிகளையும் சமாதானத்துக்காக இடைவிடாது செபிக்கும்படி இந்த செபங்களை இலங்கை நாயகியின் பரிந்துரையாலும் பாதுகாவலாலும் எம் நாட்டிற்குக் கிடைக்க வேண்டுமென நாம் வேண்டுவோம்.

## எமது எதிர்கால விசுவாச வித்துக்கள் சிறுவர்களே!

### திருப்பாலத்துவ சபை ஒன்றுகூடலில் கே. ஜேம்ஸ் சிங்கராஜர் அடிகள்

இன்றைய சிறுவர்களே நாளை சமுதாயத்தின் விசுவாச வாழ்வைப் பேணும் வித்துக்களாக மிளிர்கின்றனர். ஆகவே இவர்களின் ஆரம்ப வாழ்விலிருந்தே திருச்சபையால் போதிக் கப்படும் விசுவாச உண்மைகளைப் பாரம்பரியமாகப் பாதுகாப்பதற்கு பெற்றோர்கள், பெரியோர்கள் மிகுந்த அக்கறை கொள்ள வேண்டும். ஏனெனில் கள்ளம் கபடமற்ற நல்ல விளைநிலங்களாகிய சிறுவர்களின் உள்ளத்தில் அடிப்படையிலேயே விசுவாசம் என்னும் நல்விதை விதைக்கப்ப டுமிடத்தே நாளை சமூகம் விசுவாச விழுதுகளைத் தாங்கிய விருட்சமாகப் பரிணமிக்கமுடியும். உலகியலின் நவீனத்துவ வளர்ச்சி ஒருபுறத்தின் நன்மை பயப்பதாக அமைந்தாலும் மறுபுறத்தில் அவை விசுவாசவாழ்வுக்கு அச்சுறுத்தலாகவும் அழிவை ஏற்படுத்தக் கூடியனவாகவும் உள்ளன. இன்றைய சிறுவர்கள் வேறான நவீனத்தூடே வளர்க்கப்பட்டு வருவதால் நன்மை தீமைகளின் மத்தியில் விசுவாச வாழ்வை தம்மிலே உருவாக்கி சான்றுபகர திருப்பாலத்துவ சபை பெரும் ஊடகமாக விளங்குகின்றது. உலகளாவிய விசுவாச சபையாக விளங்கும் அதில் அங்கத்தினராக இருப்பது பெரும் பேறான தொன்றாகும் என 25.02.2001 அன்று புனித யாகப்பர் ஆலய திருப்பாலத்துவ சபைச் சிறார்களின் ஒன்றுகூடல் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கே. ஜேம்ஸ் சிங்கராயர் அடிகள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இளவாலை மறைக் கோட்ட முதல்வர் உரையாற்று கையில் பாலக இயேசுவில் விளங்கிய இறைஞானம், அறிவு, ஆன்மீகமுதிர்ச்சி இன்றைய சிறுவர்களிலும் விளங்க வேண்டுமெனில் பெரியோர்களின் முன்மாதிரிகையான விசுவாச வாழ்வே அதற்கு வழி வகுக்கும். இவற்றினூடாக அர்ப்பணிப்பும், தியாகமும், பிறரன்பும் கொண்ட உள்ளங்கள் சிறுபராயத்திலிருந்தே உருவாக்கப்படுமிடத்துநாளைய சமுதாயம் விசுவாச உறுதிப்பாடுடைய இறையரசின் மதிப்பீடுகளை ஒவ்வொரு பங்குத் திருச்சபையிலும் வளர்க்கக்கூடியதாக இருக்கும் என்றார்.

*எஸ். எம். வுளோறன்ஸ்*

## ‘வியாகுலப் பிரசங்கம்’ ஒலிப்பதிவு நாடா

தவக்காலத்தை முன்னிட்டு யாழ். திருமறைக் கலாமன்றத்தால் வியாகுலப் பிரசங்கம் 7ம், 8ம் பிரசங்கங்கள் அடங்கிய இரண்டு புதிய ஒலிப்பதிவு நாடாக்கள் கடந்த பெப்ரவரி மாதம் 28ம் திகதி விபூதிப் புதனன்று மன்ற கலைத் தூது மணி மண்டபத்தில் வெளியீடு செய் யப்பட்டது.

இதன்போது திருமறைக் கலாமன்றத்தின் (1) எட்டாவது நாடகப் பயிலகத்தின் ஆரம்ப வைபவம் (2) இவ்வாண்டு மன்றத்தால் மேடையேற்றப் படவுள்ள திருப்பாடுகளின் காட்சியில் பங்கேற்கவுள்ள கலைஞர்களுக்கான பிரதி வழங்கும் வைபவம் (3) கடந்த மாதத்தில் மன்றத்தால் நடாத்தப்பட்ட இரு நாள் நாடகப் பட்டறையில் கலந்து கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் உட்பட நான்கு நிகழ்வுகள் ஒருங்கே இடம் பெற்றன.

இந் நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் ஜே.பி.ஈ. செல்வராஜா அடிகளாரும், சிறப்பு விருந்தினராகக் பருத்தித்துறையைச் சேர்ந்த மூத்த கலைஞர் இரா. பஞ்சலிங்கமும் கலந்து உரையாற்றினார்கள். மன்ற மூத்த கலைஞர் ஜி.பி. பேர்மினஸ் இந் நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்கினார்.

வரவேற்புரையை ம. சாம் பிரதீபனும் நாடகப் பயிலக அறிமுக உரையை தை. கண்ணனும் திருப்பாடுகளின் காட்சி பற்றிய அறிமுக உரையை ஜே. ஜோண்சனும் நன்றியு ரையை கி. செல்மர் எமிலும் வழங்கினார்கள்.

இந் நிகழ்வுகளை மன்ற மூத்த கலைஞர் ஜி.பி. பேர்மினஸ் தலைமை தாங்கி நடர்ததினார்.

## அச்சுவேலியில் புனித சூசையப்பரின் திருசொரூபம் திறந்துவைக்கும் நிகழ்வு

அச்சுநகர் மண்ணின் பாதுகாவலர் புனித சூசையப்பரின் திருச்சுரூபம் அச்சு வேலி புனித சூசையப்பர் ஆலயத்தை நோக்கி வரும் சங் கானை வீதியில் மாசித் திங்கள் 24ம் திகதி மாலை 3.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

பங்குத்தந்தை செப நேசரட்ணம் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் ஜே.பி.ஈ. செல் வராஜா அடிகளுடன் பருத் தித்துறை மறைக்கோட்டக் குருமுதல்வர் இருதயதாஸ் அடிகளாரும் கரவெட்டிப் பங்குத்தந்தை இயேசுரட்ணம் அடிகளார், அருள் சகோதரிகள், பங்குமக்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

*அச்சுவேலி நிருபர்*

## மூன்றாவது மாத யுத்த நிறுத்த நீடிப்பை பயன்படுத்தவும் ஜனாதிபதியிடம் யாழ் ஆயர் கோரிக்கை

அண்மையில் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஜனாதிபதிக்கு அனுப்பிய அவசர செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகள் நோர்வே சமாதானத் தூதர் வழியாக சமாதானத் தீர்வில் தமக்குள்ள உறுதியை வெளிப்படுத்தியதோடு ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வினைக் காணவும் சம்மதம் தெரிவித்துள்ளனர். அத்தோடு ஒரு தலைப்பட்சமான தமது யுத்த நிறுத்த அறிவிப்பை மூன்றாவது மாதமாக நீடித்துமுள்ளனர். தெற்கிலுள்ள சிவிலியன்கள் மீது தாக்குதல்களையும் தவிர்த்து வந்துள்ளனர். தமது காவலில் இருந்த கைதி கள் சிலரைக்கூட அண் மையில் விடுவித்துள்ளனர். ஆனால் நல்லிணக்கம் ஏற்படுத்துவதற்கான செயல்களில் அரசு ஈடுபடுவதை காணமுடிய வில்லை. மார்ச் 15ஆம், 22ஆம் திகதிகளில் சிறீலங்கா விமா னப்படையின் சுப்பர் சொனிக் ஜெட் விமானங்கள் முல்லைத்தீவில் குண்டுகளை வீசியுள்ளன. இதனால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பலியாகியுள்ளனர் என்று தெரிவித்த யாழ். ஆயர் எதிர் காலத்தில் மனித அழிவு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் என விமானப்படைக்கு உத்தர விடும்படி நீதி மற்றும் சமாதானத்தின் பெயரால் உங்க ளைக் கேட்டுக்கொள்கின் றோம். இது சமாதான நடவ டிக்கைகளுக்கு அத்தியா வசியமானது என மேலும் தெரிவித்துள்ளார்.

அரச பயங்கரவாதமே விடுதலைப் புலிகளை இப் பாதையை தேர்ந்தெடுக்க வைத்தது என்ற உண்மையை மறந்துவிட்டு வெளியுறவு அமைச்சர் கதிர்காமருடன் சேர்ந்து நீங்கள் புலிகளை பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கும்படி சகல அரசுகளையும் கோருகின்றீர்கள்.

## கண்டி தேசிய குருமடத்தின் புதிய அதிபர்

கண்டி தேசிய குருமடத்தின் அதிபரான மேரியஸ் பீரிஸ் அடிகளார் கொழும்பு மறைமாவட்டத்தின் துணை ஆயராக நியமிக்கப்பட்டுள்ளார். இதனால் கண்டி தேசிய குருமடத்தின் புதிய அதிபராக அருள்திரு வலன்ஸ் மெண்டிஸ் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ் சிங்கள குருக்களைப் பயிற்றுவிக்கும் தேசிய குருமடமாக மேற்படி குருமடம் விளங்கியதும் 1983ம் ஆண்டு நாட்டு நிலைமைகளோடு தமிழ் குருமட மாணவர்கள் யாழ். நகரில் தம் குருத்துவக் கல்லூரியை ஆரம்பித்ததும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வது நானல்ல!

## சிலரது வாழ்விலே உயிர்த்த கிறிஸ்து



காலைக் கதிரவன் தன் பொற்கதிர்களைப் பரப்பி உலகினை ஒளிவெள்ளத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தான். அப்பொழுது காவேரிக் கரையிலே நடந்துகொண்டிருந்த என்னையும் அவன் கவரத் தவறவில்லை. அந்த நீர் பரப்பின்மீது அவன் புரிந்த நர்த்தனங்களைக் கண்ட நான் அது என்ன பளிங்குக் கல்லா? இல்லை பவளப் பாறையா? என்று வியந்த வண்ணம் நடந்து கொண்டிருந்தேன். ஆனால், என்முன்னே ஒருவன் கற்சிலையாகவே நின்று அச் சிற்றலைகள்ளையும் அதற்கப்பாலும் மாறிமாறி உற்று நோக்கிக் கொண்டிருந்தான். ஆர்வ மிகுதியால் நானும் சிறிது நின்று உற்று நோக்கினேன், ஒன்றும் புரியாமையால் அவனிடம் வினவினேன். ''என்ன பார்க் கின்றாய்'' என்று. அதோ அந்தப் பாதையைப் பார்! அதன் வழியே இரண்டு மான்கள் வருகின்றன. ஆவலுடன் நீரைப் பருகுகின்றன. ஆனால் அந்தோ! அருகிலிருக்கும் புதரை அவைகள் கவனிக்கவில்லை. அங்கே ஒரு சிறுத்தை அவைகளை முறைத்துப் பார்த்துக் கொண்டே இருக்கின்றது.'' என்று அவன் ஆர்வத்துடன் விளக்கினான். ''எனக்கு ஒன்றும் தெரியவில்லையே'' என்று பரிதாபமாக அவனைப் பார்த்தேன். அவன் சிரித்துக்கொண்டே கூறினான். ''நாளைக்கு இந்நேரம் வாருங்கள் என்னுடைய வரைபடத்தாளில் அவற்றைக் காண்பீர்கள்'' என்றான். அவனுடைய ஓவியக் கண்களை மெச்சியவண்ணம் என் பயணத்தைத் தொடர்ந்தேன்.

சற்று நேரத்திற்கெல்லாம் இன்னுமொரு மனிதன் ஒரு மரத்தடியில் சாய்ந்து நின்றுகொண்டு அந்த ஆற்றில் குமிழியிட்டு ஓடும் நீரையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான். அவனையும் அணுகிக்கேட்டேன். ''என்ன பார்க்கின்றாய்?'' என்று அவன் என்னை ஏறெடுத்தும் பாராது இந்த ''எழிலரசி தன் குமிழிச்சிரிப்பினை அள்ளக்காத்திருக்கும் தன் உள்ளங்கவர்ந்த காதலனாம் கடலரசனை நோக்கி ஓடுவது கண்டு தேவலோகப் பெண்கள் மலர்மாரி பொழிவதை நீர் காணவில்லையா?'' என எதிர்க்கேள்வி விடுத்தான். அந்த மரத்திலிருந்து உதிரும் மலர்களுக்கு இவ்வளவு மதிப்பை அளிப்பது நீரா, அல்லது இந்தக் கவிஞனின் அறிவுக் கண்களா என்று வியந்த வண்ணம் அவனை விட்டு அகன்றேன்.

என்னே விந்தை! இன்னுமொரு மனிதன் அங்கே எதையோ கண்டுவிட்டுப் புன்னகை பூத்து நிற்பதைக் கண்டேன். என் ஆர்வத்தை அடக்க முடியாமல் அவனையும் கேட்டேன் ''என்ன கண்டாய்?'' என்று, அவன் தன் கண்களை என் பக்கம் திருப்பி ''இந்தக் காவேரித்தாய் இன்றுதான் என் வயிற்றில் பாலை வார்த்தாள். என் வயலிலே இவள் செய்யப் போகும் மாற்றத்தை என் கண்முன்னே காண்கின்றேன். இப்பொழுதுதே என் களஞ்சியங்கள் எல்லாம் நிறைந்து விட்டது போன்ற திருப்தி எனக்கு ஏற்படுகின்றது'' என்றான்.

அவனது பதிலைக் கண்டு வாயடைத்து நின்ற என்னைக் கோவில் மணியோசை தட்டி எழுப்பியது. திருப்பலிக்கு நேரமாகியதைக் கண்டு விரைந்து நடந்தேன். ஆனால் என் சிந்தனை மட்டும் ஆற்றங்கரையை விட்டு அகல மறுத்தது. நானும் இன்று இயேசுக் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவைக் கொண்டாடுகின்றேன். இரவெல்லாம் கண் விழித்து திருப்பலியிலே பங்கு கொண்டேன், இப்பொழுதும் திருப்பலிக்குச் செல்கி றேன். ஏன்? சிந்திக்கவேண்டிய கேள்வியாக என் மனத்தில் பட்டது. நான் மட்டுமா? என்றொரு குறுக்குக்கேள்வி, ஆற்றிலே ஓடுகின்ற நீர், கலைஞனுக்கும், கவிஞு னுக்கும், உழவனுக்கும் வெவ்வேறு எண்ணங்களைக் கொடுத்திருக்குமானால் உயி ருள்ள கடவுளின் மகனின் உயிர்ப்பு ஏன் பலருக்கும் பல சிந்தனைகளைக் கொடுக்க முடியாது. அந்த காவேரிப் பெண் தாகம் தணிக்கும் ஊரணியாகவும், கன்னிப் பெண்ணாகவும், கவின்மிகு தாயாகவும் தோன்றுவாளானால் கருணைக்கடவுள் எத்தனை எத்தனை விதங்களில் காட்சியளிக்க வேண்டும்? சிந்தனையைச் செயற்படுத்த விரும்பினேன். சில நண்பர்களை நோக்கி கேள்வியைத் தொடுத்தேன். *''கிறிஸ்துவின் உயிர்ப்பிலே என்ன கண்டாய்?'' அவர்கள் பதில்கள் அனுபவ மணிகள். நீங்களும் சுவைக்க விரும்புகின்றீர்களா? இதோ—*

கிறிஸ்து இயேசுவின் நற்செய்தி பரவ வேண்டும். உயிர்த்த இயேசுவின் மாட்சிமை விளங்கவேண்டும் என்பதற்காகத் தங்களையே தியாகம் செய்த எத்தனையோ தியாக மணிகளைக் காண்கிறோம். அப்படிக் கிறிஸ்துவுக்காக தன்னையே அளித்துவிட்ட அருள்சகோதரி ஒருவர் புன்னகை தவழ என் கேள்விக்குப் பதிலளித்தார்கள். ''இயேசுவின் சிலுவைப்பாடுகளும் மரணமும் சிலருக்குப் பயனற்ற செயலாகத் தோன்றக்கூடும். உண்மையான ஆன்மீக வாழ்வில் கடவுளுடன் இணைந்து வாழ அனைவருக்கும் துணை நிற்கின்ற செயலைக் கிறிஸ்து செய்துள்ளார்.

நான் சிறுமியாக இருந்தபோது இயேசுவின் சாவைப்பற்றி எங்கள் பங்குத் தந்தை ஆற்றிய மறையுரை என் நினைவுக்கு வருகின்றது. அப்பொழுது கிறிஸ்துவின் இறப்பு ஓரளவு வெறுப்பாக என் நெஞ்சில் நிழலாடியது. வயதில் மூத்த பெரியவர்கள், உடல், தீமையை உண்டாக்கும் பொருள் செத்தபின் உயிர் உடலைவிட்டுப் பிரிந்து சென்றுவிடும் என்று சொல்லி வைத்தார்கள். ஆகவே ஆன்மா அழியாது உடல் அழியும் என்று நினைத்திருந்தேன். உயிர்ப்பு என்பது உடல் தன்மையை வென்ற செயல், சாவின் மீதான வெற்றியன்று என்று அக்காலத்தில் கருதினேன் மனம் முதிர்ச்சி பெற்ற பிறகு உண்மையை உணர்ந்தேன்! உண்மைக் கிறிஸ்தவ சகோதரி என்ற முறையில், இயேசு ஒருவரே சாவை வென்ற ஒப்பற்ற வீரர் என்று இன்று உணர்கிறேன்.

இயேசுவின் உயிர்ப்போடு ஆன்மீகத்தொடர்பு கொள்ளும் போது பிறக்கும் இன்பம் எல்லையற்றது வார்த்தை வருணனைக்கு அப்பாற்பட்டது. அப்படிப்பட்ட இன்பம் நான் என் சோதனைகள்ள தனிமையில் கிறிஸ்துவின் துணையோடு வெல்லும்போது ஏற்படும்! சரியான பாதையில் நடக்கிறோம் என்ற உணர்விலே அத்தகைய இன்பம் பிறக்கும். உயிர்ப்பின் செல்வாக்கு அவ்வப்போது தோன்றி மறையும், இது சிலநேர நிகழ்ச்சியன்று. தொடர்ந்து நடைபெறும் இயக்கம் என்றே சொல்லவேண்டும்.

கிறிஸ்து உயிர்ப்பின் செல்வாக்கு என் வாழ்வில் எத்துணை விளைவுகளைச் செய்திருக்கின்றது என்பது இன்னும் அநுபவப் பூர்வமாக உணரவேண்டிய சுகாநுபவமாக இருக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டுதலும், உறுதிப்படுத்துதலும், சுகமாக்குதலும் வாழ்வில் தொடர்ந்துவரும். கிறிஸ்துவின் மீதுள்ள நம்முடைய நம்பிக்கைக்கு அடித்தளம் உயிர்ப்பில்தான் அடங்கியிருக்கின்றது. கடவுளுக்கும் மனிதனுக்குமுள்ள உறவின் அடையாளம் உயிர்ப்பின் நிகழ்ச்சி! சாவைப் பற்றிய அச்சம் எனக்கு இனியில்லை! ஏனெனில் சாவு வாழ்க்கையின் முடிவு ஆகாது! ஆனால் வேறொரு அன்பு வாழ்க்கைக்கு, ஆனந்த வாழ்க்கைக்கு இந்தப் புதிய மாறுதல் துவக்கம் மட்டுமே!'' என்று ஒரே மூச்சில் உயிர்த்த இயேசு தன் மூச்சிழையிலே கலந்திருக்கின்றார் என்று மகிழ்ச்சியோடு கூறிவிட்டார்கள். நானும் திறந்த வாயை மூடாமல் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு ஒரு சலாம் போட்டுவிட்டு வந்து விட்டேன். ஆனால் அதன் பிறகுதான் என் மூளை வேலை செய்ய ஆரம்பித்தது. போயும், போயும் ஒரு கன்னியரை மட்டும் கேட்டுவிட்டுத் திருப்தியடைந்து விட்டோமே, அவர்களைத்தான் நான்கு சுவற்றிற்குள் அடைத்துவிட்டதே இந்தச் சமூகம்! அவர்களுக்கு இயேசுவை விட்டால் வேறு கதியில்லை. அவர்கள் வேறு என்ன பதிலைத்தான் தரமுடியும்?

''என்னப்பா டிராபிக் பொலிஸ் மாதிரி நடுரோட்ல நின்னுட்டே! ஏதாவது பகல் கனவு காண்கிறாயா?'' முதுகில் விழுந்த அடியைத் துடைத்துக்கொண்டே திரும்பிப் பார்த்தேன். என்னுடைய பழங்கால நண்பர் ஒருவர் சிரித்துக்கொண்டே என்னருகில் நின்றார். அவர் கேட்ட கேள்வியை மறந்துவிட்டேன். ஆனால் என் கேள்வி தலை தூக்கியது, கல்லூரிக்குள் எல்லாம் புகுந்து வந்தவராயிற்றே. அதனால் துணிந்து ஒரு போடு போட்டேன். இவ்வளவு நாட்களாய் கிறிஸ்தவன் என்று கூறிக்கொண்டு வாழ்ந்துவிட்டீர். கிறிஸ்துவின் உயிர்ப்பிற்கும் உம் வாழ்க்கைக்கும் ஏதாவது தொடர்பு உண்டா?'' என்றேன். அவர் முகம் வாடிவிட்டது! ''என்னப்பா இப்படிக் கேட்கிறாய்''? என்றார். அப்பொழுதுதான் என் தவறு புரிந்தது. ''இல்லை, இல்லை உண்மையா கத்தான் கேட்கிறேன். உம் வாழ்வில் ஏதாவது அனுபவம் இருந்தால் சொல்லேன்'' என்று அவரைச் சமாதானப்படுத்தும் முறையில் கேட்டேன். அவரும் தன் வாழ்க்கைச் சித்திரத்தை சித்தரித்தார்.

அன்றொருநாள் ஞாயிற்றுக்கிழமை. இருள் சூழ்ந்த உலகை ஒளிமயமாக்க எண்ணங்கொண்டு, கீழ்வானில் தன் பொன்னிறக் கிரணங்களை பூமியின்மீது பரப்பிக் கொண்டிருந்தான் கதிரவன். அந்த இளங்காலை வேளையில் வீதியில் விளையாடிக்கொண்டிருந்த என்னை அழைத்தபடி ஓடோடியும் வந்தாள் என் அன்னை. ''மகனே நேரமாகிவிட்டது வா! நமதாண்டவர் உயிர்த்துவிட்டார், கோவிலுக்குப் போய் அவரைக் காண்போம்'' என்றாள்.

எனக்கு அப்போது ஆறு வயதிருக்கலாம். என் அன்னையின் வார்த்தைகளை நம்பினேனா, இல்லையா என்று என்னால் உறுதியாக இன்று கூறமுடியவில்லை. என் தாயின் வார்த்தைகளை அலசி ஆராய்ந்து உண்மை என்னவென்று அறியும் என் இளமை அப்போது இடம் தரவில்லை. ஆனால் பிற்காலத்தில் பள்ளிப் பருவத்தில் அதை நினைத்துப் பார்த்தபோது எனக்கு வியப்புத்தான் மேலிட்டது. எங்கோ உள்ள யூதேயா மலைநாட்டில் இயேசு இறந்தபின், உயிர்த்தார் என்று வழக்கத்திற்கு மாறான நிகழ்ச்சியை எதிரே பார்த்ததுதோல என் தாய் அன்று கூறினாள். எவ்வளவு நம்பிக்கை! எதை வேண்டுமானாலும் ஏற்றுக்கொள்ளலாம் ஆனால் உயிர்ப்பு என்பது உலகில் நடவாதொன்று அல்லவா? இறந்தவர் மீண்டும் உயிர்பெற்றதாக வரலாறு ஒன்றும் கிடையாதே! என்று அன்று எண்ணினேன் நான். ஆனால் முகம்மது நபிகள் நாயகமும், புத்தரும் கூட உயிர்பெற்றதாக வரலாறு கூறாத நிலையில், கிறிஸ்துதான் புதிய வரலாறு படைத்திருக்கின்றார் என்பதை வெகு சீக்கிரத்தில் நான் ஆதார பூர்வமாக உணர்ந்தேன். அதுமட்டமல்ல, கிறிஸ்துவின் உயிர்ப்புத்தான் கிறிஸ்தவர்களுக்கு அவர்மீது கொண்ட விசுவாசததின் ஆணிவேர் என்பதையும் நான் என் மாணவப் பருவத்திலேயே அறிந்துகொண்டேன்.

உலகை உய்விக்க வந்த உத்தமர் இயேசுபிரானின் உயிர்ப்புத்தான் அவரின் சீடர்களுக்கும், பிற்கால கிறிஸ்தவர்களுக்கும் பெரும் விசுவாசத்தையும், உறுதியையும் அளித்தது. கிறிஸ்தவம் உண்மைச் சமயம் என உலகம் உணரச் செய்தது. இந்த உண்மைக்காக எண்ணிலடங்கா கிறிஸ்தவர்கள் தங்கள் உயிரைத் துச்சமென மதித்து வேதசாட்சிகளாக மறைந்த உண்மைகளை நாம் எண்ணுகையில் இன்று இருபதாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்களின் விசுவாசம் எந்த அளவிற்கு மங்கிக் கிடக்கின்றது என்று எண்ணும்போது, நாம் எவ்வளவு விசுவாசமற்றவர்களாக வாழ்கின்றோம் என்பதை உய்த்துணரலாம்.

புனித முடியப்பர் கல்லாலெறியப்பட்டு யெருசலேம் நகர் வீதிகளில் இரத்தம் உறைந்த நிலையில் உயிர்துறந்தபோது அவர் இதழ்களில் விரிந்த புன்னகையின் பொருள்தான் என்னே! ''என் இறைவனைப்போல அவலமாக மரிக்கிறேன். ஆனால் மீண்டும் ஒருநாள் அவரைப்போலவே உயிர் பெறுவேன், நித்திய வாழ்வு பெறு வதற்காக'' என்று அவர் கூறவில்லையெனினும், எண்ணியிருக்கவேண்டும். அந்த எண்ணங்களின் பிரதிபலிப்பாகத்தான் அவர் இதழ்களில் மலர்ந்த இளம் புன்னகை மாற்றுரு எடுத்திருக்க வேண்டும்'' என்றார்.

வேதசாட்சிகளுக்கும், கிறிஸ்துவின் உயிர்ப்புக்கும் இவ்வளவு தொடர்பா என்று நான் எண்ணி அவர் கூறியதைக் கேட்டு அசந்து விட்டேன். ''அடேயப்பா! திருச்சபை சரித்திரமும் புனிதர்களின் வரலூாறும்கூட உங்களுக்குக் கல்லூரியில், B.A பாடத்துடன் சொல்லிக் கொடுக்கின்றார்களா?'' என்றேன். அவர் அடக்கமாக ''அங்கே பாடப்புத்தகமாக வைத்திருந்தால் நான் அனேகமாக இந்தச் சரித்திரங்களை வெறுத்து ஒதுக்கியிருப்பேன்'' என்று மொழிந்தார். அதற்குமேல் கல்லூரி வாழ்க்கையைப் பற்றிக்கேட்டால் நான் கேட்ட காரியத்தை மறந்து விடுவார் என்று எண்ணி அதற்கு முற்றுப்புள்ளியிட்டேன். பின் அவரை நோக்கி ''அது சரி உன் வாழ்க்கையில் கிறிஸ்துவின் உயிர்ப்புப் பற்றி ஒன்றும் கூறக் காணோமே!'' என்றேன்.

''நன்றாகக் கேட்டாய், இனிமேல்தானே கதையே ஆரம்பமாகிறது. தான் உயர்நிலைப்பள்ளியிலும், தூய வளனார் கலைக்கல்லூரியிலும் பயின்று வந்த காலமெல்லாம் கிறிஸ்துவின் உயிர்ப்பு என் நெஞ்சில் நீங்காத நினைவாய் நிலை பெற்றிருந்தது. பசியைப்பற்றி நான் அறிந்து கொண்டதை விட பசியே என்னை அதிகம் அறிந்துகொண்ட அந்நாட்களில் பிறரால் பழிக்கப்பட்டு, வஞ்சிக்கப்பட்டு, வெறுமையாக்கப்பட்டு கொல்லப்பட்ட நமதாண்டவர் வெற்றி வீரராய் உயிர் பெற்றதுபோல் நாமும் இந்த துன்பங்களிலிருந்து விடுதலைபெறுவோம் என்ற எண்ணம் என் சிலுவைகளை ஆண்டவரோடு சுமந்துசெல்ல உதவியது. இத்தகைய என் எண்ணங்களுக்கும், என் தூய வாழ்விற்கும் ஒரு சிறந்த வடிவம் கொடுத்து ஆண்டராகிய இயேசுக் கிறிஸ்துவின் உயிர்ப்புத்தான்.

நான் தூயவளனார் கலைக்கல்லூரியின் இரண்டாவது மாடியின் படிகளில் தவறி விழுந்தபோதும், வாழ்க்கையில் வழுக்கிவிழுந்தபோதும், தேர்வில் தவறியபோதும், மீண்டும் எழுவோம் என்ற நம்பிக்கைக்கு ஒரு முன்மாதிரிகையாகத்தான் நமது

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மறைமாவட்ட மறையாசிரியர்களின் (3மாத) பணியின் பங்களிப்புகள்

செல்வி எஸ். இராஜேஸ்வரி
(மறைக்கல்வி நிலையம்)

சென்று போதியுங்கள் என்ற இயேசுவின் பணிப்புரைக்கேற்ப திருமுழுக்கு அருட்சாதனத்தால் திருச்சபையின் பணியிலே பங்கெடுத்துப் பணியாற்றப் பணிக்கப்பட்டுள்ளோம். அதிலும் ஒருபடி மேலாக மறை ஆசிரியர் பணிக்கு பயிற்சி பெற்றவர்கள் பங்கிலும், சமூகத்திலும் தனிவாழ்விலும் குடும்பத்திலும் குல விளக்குகளாக இறைபணியாளர்களாக உயர்ந்த பணிபுரிய உரிமையும் கடமையும் பெற்றுள்ளனர்.

2ம் வத்திக்கான் சங்க ஒளியிலே பொது நிலையினரின் சிறப்பான பணி வலியுறுத்தப்பட்டுள்ளது. அன்றியும் கத்தோலிக்க பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டமையால் சமய பாடங்களில் கவனக்குறைவும், அக்கறையுமற்ற காலக்கட்டத்தில் மறைக்கல்வி பணியின் மகத்துவமும், அவசியமும் இன்னும் அதிகமாகத் தேவைப்பட்டது.

இந்நிலையில் யாழ். மறைமாவட்டம் முன்வந்து மறைப்பணியில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்குப் பயிற்சிகொடுத்து உருவாக்கி ஊக்குவிக்க மறை ஆசிரியர் பயிற்சியை ஆரம்பித்தது. 1971 இல் ஆரம்ப பயிற்சி புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. தொடர்ந்து இளவாலை, மயிலிட்டி ஆகிய இடங்களில் மறையாசிரியர் பயிற்சி நடைபெற்று ஏறக்குறைய 1973இல் 300 மறையாசிரியர்கள் மறைக்கல்விப் பணி புரிய காலடி எடுத்து வைத்தனர்.

1974இல் ஆயர் இல்லத்தில் பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டதும் வருடாவருடம் இலங்கையின் எல்லா மறைமாவட்டங்களில் இருந்தும் பயிற்சியாளர் ஒன்றிணைந்து யாழ். மறைகல்வி நிலையத்தில் பயிற்சி பெற்று வெளியேறினர். நாட்டின் பிரச்சினை காரணமாக வெளி மறைமாவட்ட மறை ஆசிரியர் பயிற்சி தடைப்பட்டது. இற்றைவரை ஏறத்தாழ 1000 மறையாசிரியர்களுக்கு மேல் பயிற்சி பெற்று பங்குகளில் பாட சாலைகளில் வெளிநாடுகளிலும் பணியாற்றுகின்றனர்.

இவர்களது பணியின் பங்களிப்பானது பரந்து விரிந்து நிறைந்த பயனளிக்கும் ஊடகமாக வரவேற்கப்படுகின்றது. தம் பங்குகளில் பங்குத்தந்தையோடு தோளோடு தோள்கொடுத்து உதவுவதோடு, பங்குகளில் ஞாயிறு மறைக்கல்வி புகட்டுதல், திருப்பலி திருவழிபாடு நற்செய்தி வழிபாடுகள், திருவருட்சாதன (நற்கருணை, பச்சாத்தாபம், உறுதிப்பூசதல், திருமணம்) ஆயத்தங்கள் செய்தல், அன்பியக் குழும வழிபாடுகள், இல்ல வழிபாடுகள் ஆகிய பல்கோணப் பரிணாமப் பணிகளிலே இன்முகத்துடனும், சேவை மனப்பபான்மையுடனும் பணிபுரிகின்றனர்.

மறையாசிரியர் சங்கமாக 1973இல் சிறியளவில் இவர்கள் ஒன்றிணைந்து பணிகளைப் பரிமாறி, ஒன்றிப்பும் ஐக்கியமும் பரஸ்பர உறவும் பெற்றுள்ளனர். மாதம் ஒருமுறை பின் இருமாதங்களுக்கு ஒருமுறை மறை ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டம் (தாய்ச்சங்கம்) மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்று வருகின்றது. பங்குகளிலே பங்குரீதியான முறையிலும் மாதமொருமுறை ஒன்றுகூடி பணிகள் பாட ஆயத்தங்கள் பற்றி கலந்துரையாடி பணியாற்றுகின்றனர்.

இச்சங்கத்தின் வளர்ச்சியிலே 1976 – 86 ஆண்டுகள் ''மறையாசிரியர் பொற்காலம்'' எனக் கூறப்படுமளவிற்கு பணிகள் பரந்து பரவலாக ஒன்றிணைந்து பங்குத் தளங்களிலே தனியாகவும் கூட்டுமுயற்சிகளாகவும் மேற்கொள்ளப்பட்டன.

கோப்பாய், நாவாந்துறை, யாழ்ப்பாணம் (பங்குகள்) மாதகல், தாழையடி, மானிப்பாய். ஊர்காவற்றுறை, சேந்தான்குளம், ஆனைக்கோட்டை, பண்டத்தரிப்பு, நெடுந்தீவு, முகமாலை (முகமாலைப்பங்கைப் பொறுத்தவரை 2மாதம் ஏழு மறையாசிரியர் தங்கியிருந்து பங்கின் முன்னேற்றப்பணிகளில் பங்கெடுத்தனர்) ஆகிய பங்குகளில் அருட்சாதனப் (நற்கருணை, உறுதிப்பூசுதல்) பாசறைகளை நடாத்தி வினாவிடைப் போட்டிகள், விளையாட்டுக்கள், நாடகங்கள் மூலம் பாசறைப் பயிற்சியில் சிறார்கள் வளர்ச்சியடையவும் மறையறிவு பெறவும் பக்குவப்படுத்தினர்.

அன்றியும் கிளிநொச்சி அகதி முகாமில் இருவாரங்கள் தங்கியிருந்து, மறை அறிவுடன் குடும்ப வாழ்வுக்கும், வழிபாட்டிற்கும் சமூக அறிவுக்கும் ஒற்றுமை புரிந்துணர்வுடன் வாழும் நல்வாழ்விற்கும், இறையுறவும் சகோதர அன்பும் நிலவும் சமூக வாழ்விற்கும், வலுவூட்டுவதுடன் அவர்களுக்கு கலை நிகழ்ச்சிகளால் அவர்கள் கவலையை மறக்கச் செய்தனர்.

கைதடி அகதிமுகாமிலும் ஒருநாள் நிகழ்ச்சியை மேற்கொண்டனர். செபவழிபாடு, பாடல்பயிற்சி, கலந்துரையாடல் இவைகளோடு கலை நிகழ்ச்சிகளும் நடத்தி அவர்களது துயர்துடைத்தனர்.

1986இல் ஏறக்குறைய யாழ் மறைமாவட்ட பங்குகளில் மறைப்பணியாற்றும் 300மறை ஆசிரியர் ஒன்றுகூடி சங்க 10ம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடி விழா நினைவு மலரையும் வெளியிட்டனர்.

இன்று நாட்டுப்பிரச்சினையாலும் இடம் பெயர்வுகளினாலும் மறையாசிரியர் பல வேறு இடங்களில் பரவலாக வாழ்வதனால் ஒன்றிணைந்து பணியாற்றும் வாய்ப்பு அருகிவருகின்றது. இந்நிலையிலும் பங்குப் பணிகளில், மறைக்கல்விப் பணிகளில் பங்குரீதியாக மறையாசிரியர் ஊக்கத்துடனும், ஆர்வத்துடனும், சேவை மனப்பான்மை, அர்ப்பணிப்புடனும் பணியாற்றுவது போற்றத்தக்கதே.

இன்று அன்பின் பணியாளனாக, அமைதியின் உறைவிடமாக, சமாதானத்தின் தூதுவனாக, ஒற்றுமையின் விளைநிலமாக, இறை அறிவொளியேற்றும் சுடர் விளக்காகத் திகழ்வது இறை மைய - மனித மைய மறைக்கல்வியே.

எனவே மறைக்கல்வியை ஆர்வமுடன்
கற்போம்! கற்பிப்போம்!!
வாழ்வோம்!!! வாழ்விப்போம்!!!!
பயன்பெறுவோம்!!!!!

# மறையாசிரியரின் அழைப்பும் பணியும்

ம. மரிய ஜெஸ்ரீனா, முகமாலைப் பங்கு

மறையாசிரியர் இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்ட கருவிகள். இறைவனின் ஆசி பெற்றவர்கள் மறையாசிரியர்கள். பொதுநிலையினர்களுள் இவர்கள் ஆற்றல் மிக்கவர்களாக ஆசீர்வதிக்கப்பட்டுள்ளார்கள். அழைப்பு என்பது எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அது ஒரு சிலருக்கு மட்டுமே கொடுக்கப்படுகின்றது. அழைப்புக்கள் பலவிதமாக காணப்படுகின்றது. இறைவன் தமது நற்செய்திப் பணிக்கென பல்வேறுபட்ட சூழ்நிலைகளில் பல்வேறு இடங்களில் இருந்து பல்வேறுபட்ட உள்ளங்களை அழைக்கிறார். அந்த வகையில் இவ் மறையாசிரியர் அழைப்பு ஒவ்வொருவரது ஆற்றல் திறமைகளையும், உள்ளங்களையும் தலைமைத்துவப் பண்பையும் அறிந்து கொடுக்கும் ஒருவித விசேச அழைப்பாகும்.

*''கருப்பையில் இருந்தே ஆண்டவர் என்னைத் தம் ஊழியனாக உருவாக்கினார்''* (எசா. 45:9) இவ் அழைப்பிற்கு ஏற்ப எம்மை அர்ப்பணிக்க வேண்டும். அழைக்கப்பட்டோர் பலர் ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்டோரோ சிலர் இவ் ஆழமான உண்மையை எமது உள்ளங்களில் இருத்தி நாம் பெற்றுக்கொண்ட இவ் உன்னதமான அழைப்பிற்காக இறைவனுக்கு நன்றி கூறவேண்டும். *பல்வேறு விதமான பங்குகளில் இருந்தே பலதரப்பட்ட சூழ்நிலைகளோடு வார்த்தையில் வடிக்கமுடியாத இடம் பெயர்வுகளோடு இவ் இறைவனின் அழைப்பிற்கு ஆம் என்று பதிலளித்து அழைக்கப்பட்ட செயலை நினைந்து மகிழ்கின்றோம்.* இவ் அழைத்தல் வாழ்வு இறைவன் எனக்குச் சுமத்தும் பாரச் சுமையல்ல, எனது பணி மாறாக மனமுவந்து எம்மைத் தியாகம் செய்ய வேண்டும். பணி வாழ்வில் எத்தனையோ தடைக்கற்கள் எம்மை நோக்கி வீசப்படும் அவற்றைத் துணிவுடன் எதிர்கொள்ளவேண்டும். அவற்றை எதிர்த்துப் போராட வேண்டும்.

ஒரு மறையாசிரியர் தனது விசேட அழைப்பிற்கு ஏற்ப தன்னகத்தே பல நற்பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும். அன்பு, கீழ்ப்படிதல், ஒற்றுமை, புரிந்து கொண்டு ஏற்றுக்கொள்ளல், சேவை மனப்பாங்கு, விட்டுக்கொடுத்தல் போன்ற கிறிஸ்தவ விழுமியங்களைத் தம்மிலே தாங்கியவர்களாக மிளிரவேண்டும். *இத்தகைய ஓர் அனுபவத்தை பெற்று மகிழவே குழும வாழ்விற்கு மறையாசிரியர்கள் உட்படுத்தப்படுகின்றார்கள்.* தாம் பெற்றுக்கொண்ட அனுபவத்தையே சமூகத்திலே வாழ்ந்து காட்டப்போகிறார்கள். இவர்களின் சிறப்பு நல்லதொரு கிறிஸ்தவ சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதாகும். பணிவாழ்வு என்பது எல்லோராலும் வாழமுடியாத ஒன்றாகும். பணி செய்யும் போது எத்தனையோ எதிர்ப்புக்கள், சவால்கள், உளத்தாக்கங்கள் ஏற்படும். இவை அனைத்தையும் பொறுமையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் இறைவன் எம்மை நேரிய வழியில் நடத்திச் சென்று ஒரு மகிழ்ச்சி நிறைந்த அனுபவத்தை அருள்வார்.

''பிறர் உங்கள் மீது இல்லாதது பொல்லாதது கூறி வீண்பழி சுமத்தும் போது நீங்கள் பேறுபெற்றவர்கள்'' இயேசுவே திருவாய் மொழிந்திருக்கிறார். அதற்கிணங்க எம் வாழ்வை மாற்றியமைத்து எமது வார்த்தையால் மட்டுமல்ல வாழ்வாலும் வாழவேண்டும். ஆகவேதான் இயேசு கூறினார் ''நான் உங்கள் பாதங்களைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் ஒருவருடைய பாதங்களை கழுவவேண்டும்'' இயேசு பணிவிடை புரியவே வந்தார். நாமும் இவ்வாறான பணிக்கே எம்மை அர்ப்பணிக்க வேண்டும் எமது அழைப்பின் பணி யாது எனில் முதலிடத்தை நாடாது எம்மை தாழ்த்தி அடுத்தவருக்குரிய இடத்தை விட்டுக்கொடுத்து வாழ வேண்டும் என்பதாகும். *போர்க்கால சூழ்நிலையில் எமது பணி இன்றியமையாததாகும். ஏற்றத்தாழ்வுகள் போட்டி மனப்பான்மைகளை நீங்கி, மன்னித்து, மறந்து, பகிர்ந்து வாழ எம்மை நாமே உருவாக்கிக் கொள்ள வேண்டும். நான் உருவாகி மற்றவர்களை உருவாக்குவதே மறையாசிரியரான எமது பணியாகும்.* குழுமமாக வாழ்ந்து மற்றவர்களுடைய இன்ப துன்பங்களில் கலந்து கொண்டு அவர்களிடையே காணப்படும் தேவையை அறிந்து எம்மால் முடிந்தவரை உதவ முன்வருவது எமது கடமையாகும். நாம் பெற்றதை மற்றவர்களுடன் பகிர்ந்து வாழும்போதே அது வெற்றியளிக்கிறது. எமது பணி வாழ்வால் சமூகத்தை மலர வைக்கவேண்டும் நான் என்ற குறுகிய வட்டத்தை விட்டகன்று நாம் என்னும் பரந்த சூழலில் அமையப்படவேண்டும். எமது பணித்தளங்கள் வெவ்வேறாக இருந்தாலும் நாம் இறையேசுவின் நற்செய்திப்பணி ஒன்றையே செய்கிறோம் என உணர்ந்தவர்களாய் சொந்த இடங்களில் எவரும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. என்ற கூற்றுக்கிணங்க எங்கு சென்றாலும் இறைவன் வார்த்தையை எடுத்துரைப்பதே மேல், நீங்கள் என் சாட்சிகளாய் இருப்பீர்கள் என இயேசு உலகின் கடை எல்லைவரை என்று காட்டுகின்றார். எங்கு சென்றாலும் எமது இறுதி நோக்கு இறைவனை கண்டடைவதே ஆகும். எனவே *மறையாசிரியராக அழைக்கப்பெற்று, ஆசிபெற்ற நாம் அழைக்கும் இயேசு அமைக்கும் பாதையில் அனைவருமே சென்றிடுவோம் எமது பணியும் இயேசுவிற்கு சான்று பகர்வதாக ஆகட்டும்.*

## மறையாசிரியர் ~ குழுவாழ்வு

எங்கிருந்தோ வந்தோம்
யாரென்றறியோம் நேற்றுவரை
இணைந்தோம் அன்பதினிலே
தெரிந்தோம் எம்மவரை ஆழமாய்
எங்கே இருவர் கூடியுள்ள இடத்தில்
வீற்றிருப்பான் மாபரன் கிறிஸ்து
என்று ஆரம்பித்த நம் பயிற்சியை
துடிப்புடன் வாழ தொடங்கினோம்
பணிதனை பாருக்குப் பறைசாற்ற
இணைந்தோம் இறைவனில்

ஆதிக்கிறிஸ்தவர் அன்று
அவனியில் வாழ்ந்த வாழ்க்கை
நாதியற்ற நம்மவர்க்கு நல்லதொரு
எடுகோள் ஆகும்.

சாதித் தடிப்புடையோர்
சதிகாரர் சண்டாளர்
நீதிநெறியில் திருந்தி வாழ
அன்பியம் ஓர் அருமருந்து


அதிகார நெறியினை அகற்றிடுவோம்
அனைவரும் ஒன்று சேர்ந்திடுவோம்
உயர்வு தாழ்வினை அகற்றிடுவோம்
அயர்வு நீக்கியே எழுந்திடுவோம்
ஒருவருக்கொருவராய் வாழ்த்திடுவோம்
ஒற்றுமை தன்னைப்பேணிடுவோம்
புத்துயிர் பெற்றிட விழித்திடுவோம்
புண்ணியம் செய்து மகிழ்ந்திடுவோம்.

நற்செயல் நாமும் செய்வதனால்
அன்பியமாய் நாம் ஆகிடுவோம்
அன்புதான் கிறிஸ்து
அன்பியம்தான் கிறிஸ்தவம்
என்பதையே உணர்ந்து
செயற்பட விழைவோம்
உலகையே
இறைவன் பாதம்
பணியினால் சேர்ப்போம்

*செல்வி அ. எ. பிரமிளா*
*மறையாசிரியர் பயிற்சியகம் – 2001*
*கார்மேல் கன்னியர் மடம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதவார வழிபாடுகள் பற்றி ஒரு விளக்கம்



## குருத்து ஞாயிறு

### திருப்பலிக்கு முன்னுரை

இன்று நாம் புனித வாரத்தின் முதல் நாளாகிய குருத்து ஞாயிறுக்குள் நுழைகின்றோம். நம் ஆண்டவராகிய இயேசுவின் ஜெருசலேம் நோக்கிய வெற்றிப் பயணம் நமக்கு இன்று நினைவுபடுத்தப்படுகின்றது. இது தவறுகளை இனம் காட்டி உரிமைகளை நிலைநாட்ட தன்னை முழுதும் பலியாக ஒப்புக்கொடுக்கப்போகும் ஒரு செம்மறியின் தியாகப் பயணம். மக்கள் ஒலிவக் கிளைகளை ஏந்தியவர்களாக தெருவெங்கும் அணிதிரண்டு நிற்கின்றனர். இது விடுதலை நாயகனை எதிர்கொண்டு புதிய ஆன்மீகம் படைத்த கூட்டம். எனவே நம் ஒவ்வொருவரின் உள்ளமும் குருத்தோலை யைப் போல உயர வேண்டும். நாம் செப தான தரும ஒறுத்தல் முயற்சிகளோடு மட்டும் நின்று விடாமல் நம் வாழ்க்கையின் வடிவங்களும் புதுப்பிக்கப்பட்டு புனித காலம் எம்மை புனிதர்களாக மாற்ற வேண்டும். இந்த புதிய காலத்தில் இயேசுவின் புதிய சமத்துவமும் சகோதரத்துவமும் நம்மிடையே உருப்பெற நம் இதயங்களைத் திறந்து விட்டு இயேசுவின் பின் செல்வோம். இன்றைய வழிபாடு இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 1) குருத்தோலைப் பவனி 2) திருப்பலி

### குருத்தோலை மந்திரித்தலும் நற்செய்தி வாசகமும்

தாவீதின் மகனுக்கு ஓசன்னா என்ற பாடலைத் தொடர்ந்து குருவானவர் இன்றைய விசேட திருச்சடங்கின் ஆழமான கரத்தை இறைமக்களுக்குக் கூறி பின்னர் குருத்தோலைகளை மந்திரிப்பார். பின் குருவானவர் திருப்பலிப் புத்தகத்திற்கு தூபமிடுவார். அதனைத் தொடர்ந்து இயேசுநாதர் ஜெருசலெம் நகரில் மாட்சிமையின் மன்னராக பவனி வந்த நிகழ்ச்சியை நற்செய்தியிலிருந்து வாசிப்பார்.

### குருத்தோலைப் பவனிக்கு முன்னுரை

இன்று ஆண்டவர் இயேசு கழுதைக்குட்டியின் மீது பவனி வந்ததை நாம் நினைவு கூறுகின்றோம். பாலஸ்தீன நாட்டிலே போர்க்காலங்களில் குதிரைகளைப் பயன் படுத்திய அரசர்கள் அமைதியான காலத்தில் கழுதையின் மீது பவனி வருவது அன்றைய வழக்கம். கழுதை அமைதியின் அடையாளமாக சமாதானத்தின் அறிகுறியாக காணப்பட்டது. எனவே ஆண்டவர் இயேசுவும் துன்புறும் ஊழியனாக சமாதானத்தின் அரசனாக அமைதியின் தூதுவனாக சாந்தமே உருவாக தன்னையே தாழ்த்திப் பவனி வருகின்றார். இயேசுவை மெசியாவாக ஏற்றுக்கொண்ட மக்களும் அதற்குச் சான்றாக தம் கைகளில் குருத்தோலைகளை ஏந்தியவாறு ஓசன்னா பாடி ஆர்ப்பரிக்கின்றனர். குருத்தோலை வெற்றியின் ஆரவாரத்திற்கு அறிகுறியாகும். இயேசு உயிர் பெற்றது போல் தாங்களும் உயிர்க்கப்படவேண்டும் என்பதற்காக ஆதிக்கிறிஸ்த்தவர்கள் தங்கள் கல்லறைகளில் குருத்தோலைகளை வைத்தனர். எனவே இயேசுவின் பாடுகளில் நாங்களும் பங்கு பெறுவதன் மூலமாக அவரோடு உயிர்க்க முடியும் என்ற ஆழமான விசுவாசத்துடன் குருத்தோலைகளை கையில் ஏந்தியவாறு பவனியாக ஆலயம் செல்வோம். பீடப்பணியாளர்கள் திருச்சிலுவையுடன் முன் செல்ல அதனைத்தொடர்ந்து குருவும் இறைமக்கள் நாமும் செல்வோம்.

### ஆலயம் சென்றடைந்ததும் விளக்கம்:-

இப்போது இன்றைய வழிபாட்டின் இரண்டாம் பகுதியாக திருப்பலி ஆரம்ப மாகின்றது. ஆண்டவர் இயேசு அரச மாட்சிமையோடு ஜெருசலேம் சென்றதுபோல நாமும் இந்த தேவாலயத்திற்குள் காலடி எடுத்து வைத்துள்ளோம். இன்றைய திருப்பலி வாசகங்கள் அனைத்தும் இயேசுவின் திருப்பாடுகளை எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

### முதல் வாசகம் :- எசாயா 50:4-7

இறைவாக்கினர் எசாயா நூலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதலாம் வாசகம் துன்புறும் ஊழியனைப் பற்றி கூறுகின்றது. இயேசு தனக்கு அடிப்போருக்கு தன் முதுகையும் தன் தாடியைப் பிடுங்குவோருக்கு தாடையை ஒப்புவித்தும் நிந்தனை செய்வோருக்கும் காறி உமிழ்வோருக்கும் தன் முகத்தைக் கொடுத்தும் தன் தந்தையின் திருவுளப்படி துன்பங்களை ஏற்று செயற்படுவதை செயற்படவிருப்பதை இறைவாக்கினர் எசாயா கூறுகிறார்.

### இரண்டாம் வாசகம்:- பிலிப்பியர் 2: 6-11

திருத்தூதரான தூய பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில் ஆண்டவர் இயேசு தன்னையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை தனதாக்கி மனித உருவேற்று தன்னையே தாழ்த்தி சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்கு கீழ்ப்படிந்ததை கூறுகின்றார். தந்தையாம் இறைவனும் அவருக்கு எப்பெயருக்கும் மேலான பெயரை அருளி உயர்த்தினார். எனவே பாடுகளே உயிர்ப்புக்கும் மகிமைக்கும் வழி சமைப்பதை நாம் காணலாம்.

### நற்செய்தி வாசகம்:- லூக்கா (22:14-33:56-சுருக்கம் 23:1-49)

இயேசுவின் திருப்பாடுகளின் வரலாறு இன்று லூக்கா நற்செய்தியிலிருந்து எடுக்கப்படுகின்றது. இது தூபம், மெழுகுவர்த்தி, வாழ்த்துரை இன்றி சிலுவை அடையாளம் வரையாமல் வாசிக்கப்படும். தன்னையே தந்தையின் திருவுளத்திற்கேற்ப முற்றுமுழுதாக அர்ப்பணித்து இயேசுவைப்போல நாமும் நம்மையே இறைவனுக்கு அர்ப்பணிப்போம். நற்செய்தியில் இயேசு உரத்த குரலில் கூறி உயிர்துறந்தார் என்று வாசித்ததும் அனைவரும் முழந்தாளிட்டு சிறிதுநேரம் மௌனமாக செபிப்போம்.

### குருத்து ஞாயிறுக்கு ஆயத்தம் செய்ய வேண்டியவை:-

பவனி புறப்படும் இடம்:-

ஆலயத்திற்கு வெளியே ஓரிடத்தில் அலங்கரிக்க வேண்டும். பவனி புறப்படும் இடத்திலிருந்து ஆலயத்தின் வாயில்வரை குருத்தோலைகளால் அலங்கரிக்கலாம்.

பொருட்கள்:-

வெள்ளைத்துணி விரிக்கப்பட்ட மேசை, திருப்பலிப் புத்தகம் பவனிக்கு பாவிக்கும் சிலுவை, நெருப்புடன் தூபக்கால், சாம்பிராணி மெழுகுவர்த்தியுடன் இரண்டு தண்டுகள், தீர்த்தச் செம்பு, சிவப்பு நிறத் திருப்பலித் திருவுடைகள், குருத்தோலைகள்.

திருப்பீடம் :

வழமைபோல பீடம் அலங்கரிக்கப்பட்டிருக்கும். திருப்பலிக்கு தேவையான அனைத்துப் பொருட்களும் ஆயத்தப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும் குருவும் ஏனைய இருவருமாக மூவர் நற்செய்தி வாசகத்தை வாசிப்பர்.

## புனித வியாழன்

### திருப்பலிக்கு முன்னுரை:

புனித வாரத்தின் பெரிய வியாழனாகிய இன்று நம் தாய்த் திருச்சபையானது மூன்று முக்கியமான நிகழ்வுகளை நினைத்து கொண்டாடுகின்றது. அவை 1. ஆண்ட வர் அன்பினை தம் மக்கள் மீது எடுத்துக்காட்டும் பாஸ்கா விழாவும் 2. இந்த அன்பை அடையாளங்கள் வழியாக எடுத்துக்காட்டிய நற்கருணை விழாவும் 3. இந்த நற்கருணை உலகில் நிலையான இடத்தைப்பெற்று நிலைத்திருக்க அதற்கென பணி யாளர்களை குருக்களை ஏற்படுத்திய குருத்துவ விழாவுமாக அமைகின்றன. இன் றைய நாள் குருத்துவத்தின் பிறந்த நாள் பணியாளன் பரிசேயனாக காணப்படாத தலைவன் அதிகாரங்களையும் அதர்மத்தையும் ஆணவத்தையும் அகற்றி பணிவிடை புரியும் பணியாளனாக மாறுகின்ற நாள். ஆண்டவர் இயேசு நற்கருணையில் தன்னை உடைத்தது போல அவரின் பிள்ளைகளாகிய நாம் அனைவரும் எங்கள் வாழ்க்கையை மற்றவர்களுக்காக உடைக்க விசேட அழைப்பை பெறுகின்ற நாளாக இது அமைகின்றது.

இன்றைய வழிபாடு நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது 1) வார்த்தை வழிபாடு 2) பாதம் கழுவும் அன்புச் சடங்கு 3) நற்கருணை வழிபாடு 4) நற்கருணைப் பவனியும் ஆராதனையும்

### முதலாம் பகுதி வார்த்தை வழிபாடு

**i) முதல் வாசகம் வி.ப. (12: 1-8,11-14)**

விடுதலைப் பயண நூலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகம் இஸ்ராயேல் மக்களின் பாஸ்கா விழா பற்றி அழகாக எடுத்துக் கூறுகின்றது. பாஸ்கா என்றால் கடந்து செல்லுதல் என்பது பொருள். இந்தப் பாஸ்கா உணவானது பாவத்திலிருந்து நம் அனைவரையும் மீட்டு புதிய வாழ்விற்கு அழைத்துச் செல்லும் இயேசுக் கிறிஸ்து ஏற்படுத்திய நற்கருணைத் திருஉணவிற்கு முன்னடையாளமாக விளங்குகின்றது. நாம் எமது பாவ வாழ்விலிருந்து விடுதலைபெற்று அருள்வாழ்விற்கு கடந்து செல்ல இவ் வாசகம் அழைத்து நிற்கின்றது.

**ii) இரண்டாம் வாசகம்:- (1கொரி. 11: 23-26)**

ஆண்டவர் இயேசுவே நம் அனைவரினதும் மெய்யான பாஸ்கா விருந்து. இவர் எமக்காக தன்னையே தியாகப் பலியாக்கினார். எனவே இந்த நற்கருணை விருந்தில் பங்குகொள்ளும் நாம் அனைவரும் அவரின் மரணத்தை நம்வாழ்வில் அறிக்கையிட வேண்டியதன் அவசியத்தை தூயபவுல் கொரிந்திய மக்களுக்கு எழுதிய முதல் திருமுகத்தில் எடுத்துக்காட்டுகின்றார்.

**iii) நற்செய்தி வாசகம் (யோவான் 13:1-5)**

இன்றைய நற்செய்தி வாசகம் இயேசு தன்னுடைய சீடர்களின் பாதங்களை கழுவிய நிகழ்ச்சியை எடுத்துக்காட்டி நற்கருணையையும் பிறர் அன்பையும் ஒருபோதும் பிரிக்கமுடியாது என்பதை எமக்கு உணர்த்தி நிற்கின்றது. இயேசுவின் சீடர்களாகிய நாம் ஒவ்வொருவரும் என்ன செய்யவேண்டும் என்பதை தன் சொல்லாலும் செயலாலும் அவர் எமக்கு எடுத்துக்காட்டியுள்ளார்.

### இரண்டாம் பகுதி : பாதம் கழுவும் சடங்கு

அன்றைய பாலஸ்தீனாவில் வீட்டுக்கு வருகின்ற விருந்தாளிகளின் பாதங்களைக் கழுவிய அவர்களை வீட்டுக்கு அழைத்து வருகின்ற பணியானது அந்த வீட்டின் அடிமையினாலேதான் செய்யப்பட்டு வந்தது. ஆனால் ஆண்டவர் இயேசு அடிமையின் தன்மை பூண்டு மனிதனின் பாவத்திற்கும் பாவநாட்டத்திற்கும் காரணமான கால்க ளிலிருந்து தனது பணியினை ஆரம்பிக்கின்றதை நாம் பார்க்கின்றோம். இந்த அற்புத செயலால் தன் பணியை உறுதிப்படுத்தி தான் பணிவிடை பெறவல்ல மாறாக பணிவிடை புரியவே வந்தேன் என்பதை செயலினால் நிரூபிக்கின்றார்.

இன்றைய இந்த சடங்குமூலமாக தன் சீடர்களுக்கு பணிவு, தாழ்ச்சி என்னும் புதிய அறநெறிகளை பயிற்றுவித்து ஆண்டவர் இயேசு எம்மையும் பிறர்மட்டில் பணி விடைபுரிய தயாராகும்படி அழைப்பு விடுக்கின்றார். அத்தோடு மட்டும் நின்றுவிடாது *நான் செய்தது போல நீங்களும் செய்யுங்கள்* என்று கூறி அன்புக் கட்டளையை அவர்களுக்குக் கொடுத்தார். எனவே ஆண்டவரின் இரத்தத்தினாலும் ஆவியினாலும் ஆட்கொள்ளப்பட்ட தூய வாழ்வாக மாறி புதிய பல பணிவாழ்வை நாமும் தொடங்க ஆண்டவரை மன்றாடுவோம்.

### மூன்றாம் பகுதி நற்கருணை வழிபாடு

### நான்காம் பகுதி நற்கருணைப் பவனியும் ஆராதனையும்

ஆண்டவர் இயேசுவின் இறைபிரசன்னத்தை அன்பின் சின்னமாக, வெளிப்பாடாக வெளிப்படுத்தி நிற்பதுதான் இந்த நற்கருணை. இந்த நற்கருணை புதிதாக தயார் செய்யப்பட்ட திருப்பீடத்தினை நோக்கி பவனியாக எடுத்துச் செல்லப்படுகின்றது. எல்லோரும் கைநெகிழ்ந்த நிலையில் ஆண்டவர் இயேசு தனிமையில் காணப்படுவதை நினைவுபடுத்த திருப்பலி நிறைவேற்றிய பீடம் வெறுமையாக்கப்படுகிறது.

*(தொடர்ச்சி 11 பக்கம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வாரி அர்ப்பணித்தார்

இது
கல்வாரிமலைச்
சிகரம்!

இதில்
மாண்டுபோனது
ஒரு
மனித இதயத்தின்
ஜீவன்!

இந்த
ஜீவன்
பாவிகளை மீட்கவந்த
தோழன்!

இந்த
தோழனின் தோள்களில்
ஆடியது
எம்
பாவங்கள்!

எம்
பாவங்கள்
சேர்ந்துதான்
சிலுவை
ஆனது!

அந்த
சிலுவை
ஜீவனின்
புயங்களை
காயம்
செய்தது!

அந்த
ஜீவனின் சோகக்கதை
தான்
கல்வாரிக்
காவியம்!

***உயிரோவியன்***
***பளை***

கல்வாரியில் இரத்தம் சிந்தி
என் பாவங்களை துளைத்து
சிலுவை பாடுகளின் போது
கொள்கொதாவினில் கோர
சிலுவையை சுமந்து அர்ப்பணித்தார்
காடி கசந்திடவும்
நாடி தளர்ந்திடவும்
சிரசில் முள்ளின் மகுடம் சூட்டி
அடித்ததிலும் வாடி தவித்து அர்ப்பணித்தார்
எமக்கு கோடி கோடியாய் இன்பத்தை
அள்ளித்தர சிலுவையிலே அர்ப்பணித்தார்
காறி உமிழும் போதும், புனித
பாதங்களுக்கு ஆணி துளைக்கும் போதும்
உந்தன் ஒளியை அர்ப்பணித்தீர்
உந்தன் ஆறுதல் வார்த்தை
உந்தன் புதுமைகள் அனைத்தும்
எனக்ககாக, எமக்காக அர்ப்பணித்தீர்
உந்தன் உயிரையே அர்ப்பணித்தீர்!

***எனஸ்டா சில்வியா***
***பண்டாரவளைப் பங்கு***



## உயிர்த்திடும் உத்தமனே

**சாவை வென்ற சத்தியனே**
**சாதனை படைத்த நித்தியனே**
**உம் உயிர்ப்பினிலே எம்**
**உள்ளங்களைப் புதுப்பியும்**

**மனித மனங்கள் மலர்ந்திட**
**எம் இதயங்களில் உயிர்த்திடும்**
**சொல் செயல் சிந்தனைகளை**
**வல்லவக் கடவுளே நல்லதாக்கும்**

*ஜோ. ஜெஸ்ரின்*
*கொழும்புத்துறை*

## ஜெயிப்போம்!

உண்மை நெறியுரைக்க
பாவத் தீ அணைக்க
பாரிலுள்ளோரை அணைக்க
பிரிந்த உறவிணைக்க
சரிந்த நீதி நிலைநாட்ட
சத்திய வேதம் தழைக்க
நித்திய வாழ்வளிக்க
யுத்தசத்தம் ஒழிக்க
நித்தம் துன்புறுவோர் துயர்துடைக்க
முன்னொரு நாள்வந்து
சிலுவை தனைச் சுமந்து
விண்ணேகும் வழி அமைக்க
கருணை யேசு கல்லறை
கல்நெஞ்சரை விட்டெழுந்தார் – இன்று
ஊரிழந்து உறவிழந்து
உரிமைகளும் இழந்து
இழப்புக்களை சொந்தமாக்கி
இறப்புக்குள் வாழ்வோராய்
தீபங்கள் பல எரிந்தும்
காணவில்லை அமைதியென
கண்ணீரில் வாழும் எமக்கு
இன்றொரு நாள் இறைமகனார்
இறப்பை வென்று
உயிர்தெழுந்தார் அமைதிதர
உண்மை விசுவாசம்
உயிர்ப்பில்வைத்து உறவோடு
ஊரோடு உருக்கமாய்
உயிர்த்த பரன் அருள் பெற்று
ஜெயிப்போம் எம் வாழ்விலிருந்து

*P.A.J.தாஸ், O.M.I., சூசையப்பர் குருமடம்*
*கொழும்புத்துறை*

## அன்பாய் உன்னையும் அழைக்கிறார்

*கொல்கொத்தா மலையும் தெரியுது பார்*
*கொலைகள் பலவும் நடக்குது பார்*
*பாவிகள் கொலைக் களமதைப் பார்*
*பரமன் மாந்தரை மீட்பதைப் பார்!*

*சிலுவைகள் அங்கு தெரியுது பார்*
*சிந்தும் குருதியும் பெருகுது பார்*
*சிந்தை மனிதர் கொடுமையைப் பார்*
*சீலன் இயேசுவை அறைவதைப் பார்!*

*பலியாய் பரமன் துன்புறுவதைப் பார்*
*பகைஞர் பார்த்து நகைப்பதைப் பார்*
*தாகம் என்று கூறுவதைப் பார்*
*தந்தையின் பெயரால் மன்னிப்பதைப் பார்!*

*கன்னி மரியை தேற்றுவதைப் பார்*
*கள்வனை விண்ணகம் அழைப்பதைப் பார்*
*ஆவியை தந்தையிடம் கையளிப்தைப் பார்*
*அன்பாய் உன்னையும் அழைப்பதைப் பார்!*

*V. P. தனேந்திரா*
*அரியாலை*

## உயிர்த்துவிட்டார் உவகைகொள்!

பக்தன் உன் பாவமதைப் போக்கிட
பரமனாம் கிறிஸ்து அவர்
சிறப்புடனே சிலுவையைவென்று
உயிர்த்துவிட்டார் உவப்புடனே!

யுத்தமது பொங்குகின்ற பூவுலகில்
நித்திய நரகத்தின் தண்டனைக்கெம்மைத்
தப்பித்துவிடவே
சத்தியராம் கிறிஸ்து அவர் – இறை
சித்தமதை ஏற்று சிலுவைகளை வென்றே
உயிர்த்துவிட்டார் உவப்புடனே்

விந்தையுள்ள பூலோகமதில்
நிந்தை பலபட்டும் – அவர்
சிந்தையே கலங்கிடாது
தந்தையின் சித்தத்தைச் சிரந்தாங்கி
சிலுவைகளை வென்று
உயிர்த்துவிட்டார் உவப்புடனே

மனித மாண்புகள் சிதைக்கப்பட்டு
அநீத சாட்சிகளால் மனித உயிர்
மதிப்பிழந்து போகின்ற இப் பாருலகில்
நியாயத்தின் தேவன் அவர்
அநியாய சிலுவைகளை வென்றே
உயிர்த்துவிட்டார் உவப்புடனே

**- இளவையூர் விமல் -**

## பயணம்



இது
சாத்தானின்
இலட்சியப்
பயணம்!
மனிதனின்
கனவுகள் இன்னும்
பலிக்கவே
இல்லை!
அவன்
கனவுகள்தான்
பலிக்கப்
போகிறதே
சாத்தான்
தன்தோள்களில்
உலகைத்
துக்கிக்
கொண்டது!
மனிதன்
உலகம் போனால்
தான் வாழ
வழியில்லை
என்று
தானும்
அந்த உலகத்தின்மேல்
ஏறிக்
கொண்டான்!
ஆனால்
சாத்தானின்
இலட்சியப்
பயணம்
சொர்க்கத்தை
நோக்கி அல்ல! நரகத்தை
நோக்கி!

**உயிரோவியன்**
**புலோப்பளை மேற்கு, பளை**

## மறுவாழ்வு

மனிதப்பிறப்பு என்பது வாழ்வின் ஒத்திகை
மரணம் என்பது மறுவாழ்வின் தொடக்கம்
இறையேசு மனிதனாக இப்பூவுலகில் அவதரித்து
மனிதரால் மனிதருக்காக மரித்தார் - இறை

மாட்சிமையால் உன்னதர் உயிர்த்துள்ளார் - எம்மை
ஆட்சிபுரியும் இறை அரசர் அவரேதான்
அன்பின் அன்பனாக நல்ல நண்பனாக - இதய
ஆலயத்தில் இறைவாழ்வின் மன்னனாக

மனித உள்ளத்தில் மூவொருதேவனாய் உயிர்த்துள்ளார்
மறுவாழ்வின் மைந்தன் உன்னை அழைக்கின்றார்
பாவத்தை விட்டு வாருங்கள் எம் பரமனிடம்
பரலோகத்தில் வீற்றிருக்கும் தந்தை அருள் புரிவார்

காதுகளில் அவர் குரல் ஒலி கேட்கும்
கண்களால் அவர் சாயலைக் காணமுடியும்
விசுவாச அன்பு நம்மிடம் மலரவேண்டும்
விண்ணக மீட்பின் அருள்ஒளி வீசும்

*ஜோ. ஜெஸ்ரின் கொழும்புத்துறை*

## திறந்துபார்!

*கடவுள்*
*இருக்கிறான்*
*உனக்குள்!*

*ஆனால் நீ*
*கடவுளைத் தேடினேன்*
*காணவில்லை*
*என்றாய்!*

*கடவுள்*
*கல்லுக்குள் இருக்கிறான்*
*என்று நீ*
*கல்லையடித்து*
*உடைக்காதே!*

*கடவுள்*
*மரத்துக்குள்*
*இருக்கிறான்*
*என்று நீ*
*மரங்களைக் கொத்தி*
*பிளக்காதே!*

*உன்*
*உள்ளத்தை துடைத்து நீ*
*திறந்துபார்*
*அவன்*
*இருப்பான்!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைஇரக்கப் பக்தி ஏப்ரல் மாதம் 22ம் திகதி உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுகிறது

**''மனுக்குலம் அழிவுப்பாதையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. அந்த அழிவுப்பாதையில் இருந்து அதைக் காப்பாற்றுவதற்கு மனிதர்களை இறை இரக்கத்திடம் அழைத்து வாரும்''**

இறைவனுடைய இரக்கத்தைப் வேண்டி வழிபடுவது இறைஇரக்க வழிபாடு ஆகும். இவ்வழிபாடு திருச்சபையில் பலகாலமாக இருந்து வந்துள்ளது. எனினும் கடந்த நூற்றாண்டில், 2ம் உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலக்கட்டத்தில் போலந்து நாட்டில் செய்யப்பட்டு வந்த இறைஇரக்க வழிபாடு தற்போது உலகெங்கிலும் பரவி உள்ளது. இவ் வழிபாட்டுடன் தொடர்புடையதாக நமதாண்டவர் அழிவுறும் மானிட சமூகத்துக்குக் கொடுத்துள்ள வாக்குறுதிகளை புனித பவுஸ்தினாவின் கையேட்டுக் குறிப்பில் வாசிக்கின்ற பொழுது இறையிரக்க வழிபாட்டின் தனித்துவம் நனி துலங்கும்.

## போலந்துநாட்டு மரிய பவுஸ்தீனாவுக்கு இறைஇரக்க காட்சிகள்

போலந்து நாட்டில் உள்ள கிறாக்கோ என்னும் இடத்தில் இருக்கும் ஒரு கன்னியர் மடத்தில் வாழ்ந்து கொண்டிருந்த மரிய பவுஸ்தினா கொவால்ஸ்கா என்னும் அருட்சகோதரிக்கு இயேசு காட்சிகள் கொடுத்து வந்தார். 1931ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ந்திகதி அவர் அவ் அருள்சகோதரிக்கு முதல் முறையாகக் காட்சி கொடுத்திருந்தார். அவ் அருள்சகோதரி 05.10.1938 இல் இறக்கும் வரை அவர் அவளுக்குக் காட்சிகள் அளித்து வந்தார். அக்காட்சிகளின் போது இயேசு மனுக்குலம் அழிவுப்பாதையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது என்றும் அந்த அழிவுப்பாதையில் இருந்து அதைக் காப்பாற்றுவதற்கு மனிதர்களை இறை இரக்கத்திடம் அழைத்து வரும்படியும் கூறியிருந்தார். அத்தோடு இறை இரக்கப் பக்தி வழிபாட்டுக்குரிய செபங்களையும் முறைகளையும் அவர் அவ் அருள்சகோதரிக்கு கற்பித்திருந்தார்.




மேலும் உயிர்ப்பு ஞாயிறுக்கு அடுத்துவரும் ஞாயிறு இறைஇரக்கப் பெருவிழாவாக கொண்டாடப்பட வேண்டும் என்றும் கூறியிருந்தார். இவ்விழாவை கொண்டாடும்படி இயேசு பவுஸ்தினாவிடம் பதினான்கு தடவைகளுக்கு மேலாகக் கூறியிருந்தார்.

''உயிர்ப்பு ஞாயிறிற்கு அடுத்துவரும் ஞாயிறு இறைஇரக்கப் பெருநாளாக இருக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.'' (பவுஸ்தினாவின் கையேட்டுக் குறிப்பு 570).

''ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காக நான் பெரும் துன்பத்துக்குள்ளாகி இருந்தும் அவைகள் அழிந்துகொண்டு போகின்றன. அவைகளுக்கு ஈடேற்றத்திற்கான கடைசி நம்பிக்கையை அளிக்கின்றேன். அது தான் எனது இறை இரக்கப் பெருவிழா'' (கையேட்டுக் குறிப்பு 796)

இப்படியாக இயேசு பவுஸ்தினாவிடம் பலமுறை வலியுறுத்திக் கூறியுள்ளார். 1993.04.18இல் முத்திப்பேறு பெற்ற பட்டம் வழங்கப் பெற்றிருந்த அருள்சகோதரி பவுஸ்தினா, 2000ஆம் ஆண்டின் உயிர்ப்பு ஞாயிறிற்கு அடுத்த ஞாயிறாகிய ஏப்பிரல் மாதம் 30ம்திகதி ஒரு புனிதராகப் பிரகடனப்படுத்தப்பட்டார். வத்திக்கானில் சம்பேதுருவானவர் சதுக்கத்தில் நடைபெற்ற அவ் வைபவத்தின் போது திருத்தந்தை இரண்டாவது அருள் சின்னப்பர் திடீரென்று அன்றிலிருந்து உயிர்ப்பு ஞாயிறிற்கு அடுத்த ஞாயிறு இறைஇரக்க ஞாயிறாக வழங்கப்பெறும் என்ற செய்தியை வெளியிட்டார்.

அவ் அறிவித்தலைத் தொடர்ந்து திருச்சபையின் இப்படியாக அறிவித்தல்களை உத்தியோக பூர்வமாக வெளியிடும் இறைவழிபாட்டினதும் தேவதிரவிய அனுமானங்களின் கட்டுப்பாடுகளுக்கும் பொறுப்பாக உள்ள சபை உயிர்ப்பு விழாவுக்கு அடுத்த ஞாயிறு இறைஇரக்க ஞாயிறாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று அதன் தலைவர் கருதினால் ஜோர்ஜ் ஆப்துரோ மெடினா எஸ்ரவெஸ் அவர்களின் கையெழுத்துடன் 03.05.2000 திகதி இட்டு ஒரு கட்டளையைப் பிறப்பித்திருந்தது. அக்கட்டளை திருத்தந்தையின் உத்தரவுப்படி 23.05.2000 இல் திருச்சபையின் உத்தியோக ஏட்டில் வெளியிடப்பட்டு அனைத்து உலகுக்கும் உறுதிப்படுத்தப்பட்டது.

இயேசு விரும்பிய இறைஇரக்க ஞாயிறு சில ஆண்டுகளாக உலகில் சில ஆலயங்களில் கொண்டாடப்பட்டு வந்ததாயினும் இவ்வாண்டிலிருந்தே அது திருச்சபையின் அங்கீகாரத்துடன் முதல் முதலாக அனைத்து கத்தோலிக்க ஆலயங்களிலும் உத்தியோகபூர்வமாகக் கொண்டாடப்படுகின்றது. இவ்விழாவானது திருச்சபையினால் ஏற்படுத்தப்பட்ட புத்தாயிரமாம் ஆண்டின் முதல் புதிய விழாவாகவும் அமைகின்றது.

இவ்விழா திருச்சபையினால் எற்படுத்தப்படுவதற்கு உலகெங்கிலுமுள்ள இறை இரக்கப் பக்திக்குழுக்களினதும் பக்தர்களினதும் மன்றாட்டுக்களும், உழைப்புக்களும் மிகுந்த உதவியாக இருந்தன என்பதில் ஐயமில்லை. இம் முயற்சியில் இலங்கையின் பங்களிப்பும் குறைந்ததே அல்ல என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## யாழ்ப்பாணத்தில் இறைஇரக்க வழிபாடு

1987இல் யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதிப்படை தங்கியிருந்த பொழுது ஏற்பட்ட கெடுபிடிகளிலிருந்து விடுபடுவதற்காக திரு X.R. பிரான்சிஸ் என்பவர் தனது மனைவியாருடனும் வேறு சிலருடனும் அரியாலையில் இருந்த புனித யூதாததேயு ஆலயத்தில் இறைஇரக்கப் பக்தி வழிபாட்டைச் செய்து வந்தார். அதன் பின்பு 1989இல் அவர் யாழ். அருள்ஆச்சிரமத்தில் அவ் வழிபாட்டை அங்கிருந்த அருட்தந்தையாரின் ஆதரவுடன் தொடங்கினார். அங்கு அவ்வழிபாடு பெருகி, வடகிழக்குப் பகுதிகளுக்கெல்லாம் பரவியது. அப்பொழுது யாழ். ஆயராக இருந்த மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை இவ்வழிபாடு பற்றிய செபப் புத்தகத்தை வெளியிடுவதற்கு அனுமதி அளித்திருந்ததோடு இவ்வழிபாடு பரவுவதற்கு வேண்டிய ஊக்கத்தையும் வழங்கியிருந்தார். திருகோணமலை-மட்டுநகர் ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையும் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப் ஆண்டகையும் தத்தமது மறை மாவட்டங்களில் இப்பக்தி வழிபாடு வளருவதற்கு ஆதரவும் ஊக்கமும் அளித்தனர்.



## கொழும்பிலும் மலையகத்திலும் இறைஇறை இரக்கப் பக்தி வழிபாடு

1991இல் திரு. பிரான்சீஸ் அவர்கள் அப்பக்தி வழிபாட்டை கொழும்புக்குக் கொண்டு வந்தார். அவ் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அவர் அவ் வழிபாட்டை கொழும்பு கொச்சிக்கடையிலுள்ள புனித வியாகுலமாதா ஆலயத்தில் அப்பொழுது அங்கு பங்குத்தந்தையாக இருந்த றெஜினோல்ட் அடிகளின் அனுமதியுடனும், ஆதரவுடனும் ஒருசில பக்தர்களுடன் தொடங்கினார். இன்று அவ் வழிபாடு பல நூற்றுக்கணக்கான பக்தர்களுடன் அவ் ஆலயத்தில் தற்போதைய பங்குத்தந்தையான ஆனந்தன் பெர்ணான்டோ புள்ளே அடிகளின் ஊக்குவிப்புடன் நடைபெற்று வருகின்றது.

அதற்கு அடுத்த ஆண்டில் கொழும்பு புனித. லூசியாள் பேராலயம், வேளாங்கண்ணி ஆலயம், என்று பல ஆலயங்களிலும் இவ் வழிபாடு திரு.பிரான்சீஸ் அவர்களால் தொடங்கப் பெற்றது. அவரும் மனைவியும் 1994 இல் வெளிநாடு சென்றதன் பின்பு அவருடைய பணியை திரு. மரியதாஸ் சிவப்பிரகாசம் அவர்கள் ஏற்று, கொழும்பிலும், நீர்கொழும்பிலும் 20 ஆலயங்களில் மற்றும் காலி மறைமாவட்டத்தில் தெனியாய, எட்டியாந்தோட்டை, மஸ்கெலியா, மட்டகலை, டிக்கோயா, நோர்வூட் தலவாக்கலை, நாவலப்பிட்டி முதலான மலையகப் பகுதிகளில் நூறுக்கும் மேற்பட்ட தோட்டங்களிலும் ஆலயங்களிலும் இறை இரக்கப் பக்தி பரவும் வண்ணம் குழுவின் பணியை முன்னெடுத்துச் சென்றார். இக்குழுவின் பணி படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டு கொண்டு வந்தமை, அமெரிக்காவில் மசாச்சுஸெட்ஸிலுள்ள ''ஜோன் போல் II இறையிரக்க நிறுவனத்தால்'' வெளியிடப்படும் இறையிரக்கப் பக்திக் குழுக்களின் சர்வதேச விபரக்கொத்தில் இலங்கையின் பெயரும் இடம்பெறக் காரணமாயிற்று.

– வழிபாட்டு செபப் புத்தகத்தில் திருத்திய ஒரு பதிப்பு வெளியிட வேண்டி இருந்தபொழுது தற்போதைய யாழ். ஆயராகிய மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் இறைஇரக்கப் பக்திக் குழுவுக்கு பல ஆலோசனைகள் வழங்கி அனுமதியும் அளித்திருந்தார். கொழும்பில் இறைஇரக்கப் பக்திக் குழு செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு கொழும்பு மறைமாவட்ட பேராயர் மேதகு நிக்லஸ் மார்க்கஸ் ஆண்டகை பெரிதும் ஊக்கமும், உற்சாகமும் அளித்து வந்துள்ளார்.

– திருச்சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்ட இறை இரக்க ஞாயிறு இவ்வாண்டு ஏப்பிரல் மாதம் 22ந்திகதி உத்தியோகபூர்வ முறையில் முதல் முறையாக உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுகிறது.

– பெரிய வெள்ளிக்கிழமை தொடங்கி இறையிரக்கச் செபமாலை– நவநாளைச் செய்தல் மாபெரும் இரக்கத்தின் நேரமாகிய பிற்பகல் மூன்று மணி வேளையை நினைவு கூருதல் (சிலுவைப்பாதை செய்தல், திவ்விய நற்கருணையில் எழுந்தருளியிருக்கின்ற இயேசுவின் திவ்விய இருதயத்தை ஆராதித்தல்) சொல்லாலும், செயலாலும், மன்றாட்டுக்களாலும் இரக்கத்தைச் செயலாக்குதல், நல்ல பாவ சங்கீர்த்தனம் செய்து விழாத் தினப் பலிப்பூசையில் தேவ நற்கருணை பெறுதல், விழாத் தினத்தன்று பகிரங்கமாக இறையிரக்கப் படத்துக்கு வழிபாடு செலுத்துதல் (குருவானவர் துாபங்காட்டி படத்தை ஆசீர்வதித்துப் பின்னர் பங்கு மக்கள் அனைவரும் அந்தந்த ஆலயப் பங்குத் தந்தையின் ஆலோசனைப் பிரகாரம் முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்ட திருப்பலி ஒழுங்கு முறைப்படி திருப்பலி வேளையிலோ அல்லது திருப்பலி முடிந்த பிற்பாடோ இறையிரக்கப் படத்தை முத்திசெய்து, ''இயேசுவே நாம் உம்மில் நம்பிக்கை வைக்கிறேன்'' என்று தனிப்பட்ட முறையில் வாக்குறுதி அளிக்கலாம்)

– புனித பவுஸ்தினாவின் வழியாக சிறப்பான முறையில் வெளிப்படுத்தப்பட்ட இறையிரக்கச் செய்தியை இயன்றவரை முழுமையாகப் புரிந்து கொள்ள முயற்சி செய்து பிறருக்கும் எடுத்துரைத்தல் போன்ற வழிமுறைகளினூடாக அனைவரும் நம் ஆண்டவர் இந்த விழாத்தினத்துக்கென்று வாக்களித்துள்ள விசேட பலாபலன்களை அடையலாம்.

**இறை இரக்கப் பக்தி இன்னல்கள் தீர்க்கும் சக்தி**
**கறை படிந்த நம் மனதை கழுவித் தரும் நல் முக்தி**

*அருள் மா. இராசேந்திரன்*
*செயலாளர்*
*இறை இரக்கப் பக்திக்குழு*
*கொழும்பு – 13*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண சமூகத்திற்கு புனித பத்திரிசியார் கல்லூரியின் கல்விப் பணி

**புனித பத்திரிசியார் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலரில் புனித பத்திரிசியார் கல்லூரி யாழ். குடாநாட்டு சமூகத்துக்குச் செய்த கல்விப்பணியை ஆராயும் நோக்கில் திரு த.இ.றங்கநாயகம் (ஆசிரியர், யாழ். திருக்குடும்ப மடம்) எழுதிய கட்டுரை இங்கு மறுபிரசுரம் செய்யப்படுகிறது. (ஆர்)**

கல்வி என்பது மனித சமூகத்தை முழுமையடையச் செய்யும் ஒரு சாதனமாகும். அத்துடன் இது பல்துறைச் சாதனமாகவும் விளங்குகின்றது. ஒருவன் கற்கும் கல்வியானது தனிமனித ஆளுமையை வளர்ப்பதுடன் தனக்கும் நாட்டிற்கும் நலம் பயக்கும் குடிமகனாக அவனை உருவாக்குவதற்கும் உதவவேண்டும் என்பது பல அறிஞர்களது ஒருமித்த கருத்தாகும். உலகில் கல்வி ஒளியைப் பரப்புவதன் மூலம் சமுதாயத்தின் அறிவின்மையை ஒழித்து கற்கும் சமுதாயத்தை உருவாக்கி மக்களை விடுதலை அடையச் செய்ய முடியும் என பேட்டன் ரசல் என்னும் அறிஞர் கூறியுள்ளார்.

கல்வியானது ஒரு சமூகத்தில் வளர்ச்சியடையும் போது அச்சமூகத்திலுள்ள சாதி, மத, பேதங்கள் மறைந்து விடுகின்றன. மேலும் மனிதனின் உடல், உள்ளம், ஆன்மா என்பவற்றை ஒருமித்த வகையில் விருத்தி செய்து ஆளுமை அடையச் செய்வதே கல்வியின் பயனாகும் என காந்தியடிகள் கூறியுள்ளார். இவ்வாறான கருத்து விளக்கங்களின் அடிப்படையில் புனித பத்திரிசியார் கல்லூரியின் கல்விப் பணியை நோக்கும்போது மனித சமூகத்திற்கு முழுமையான கல்வியை வழங்கிய ஒரு நிறுவனமாகவே விளங்கியுள்ளது.

இலங்கையின் கல்வி வரலாற்றை நோக்குகின்ற போது அது பல்வேறு சமய நிறுவனங்களினூடாக வழங்கப்பட்ட ஓர் கல்வியாகவே காணப்பட்டுள்ளது. இலங்கையில் ஆரம்பத்தில் பௌத்த, இந்து, முஸ்லிம் என்ற மூன்று பெரும் மதங்களே காணப்பட்டன. இந்த மதங்களினூடாகவே ஆரம்பத்தில் கல்வியானது உருவாக்கி வளர்க்கப்பட்டது. யாழ் குடாநாட்டைப் பொறுத்த வரையில் ஆரம்பத்தில் அது இந்துக்கள் வாழும் பிரதேசமாகவே காணப்பட்டது. எனவே குருகுலக் கல்வி திண்ணைப்பள்ளி எனும் கல்வி முறைகளே இங்கு காணப்பட்டன.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் வருகையோடு இலங்கைக் கல்வி மரபில் பாரிய மாற்றம் ஏற்படுகின்றது. குறிப்பாக யாழ் குடாநாட்டுக் கல்வி மரபிலும் மாற்றம் ஏற்படுகின்றது. போர்த்துக்கேயரும், ஒல்லாந்தர்களும் சமயம் பரப்பும் நோக்கோடு மேலைத்தேயக் கல்வி மரபை இங்கு அறிமுகம் செய்தார்கள். எனவே ஆலயங்களோடு இணைந்த வகையில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுக் கல்விப் பணியும், சமயப் பணியும் ஒருங்கே நிறைவேற்றப்பட்டன. எனினும் இவர்களுக்குப் பின்வந்த பிரித்தானியர் கல்விக் கொள்கைகளும், நடவடிக்கைகளுமே யாழ் குடாநாட்டுக் கல்விப் பாரம்பரியத்தில் பாரிய தாக்கத்தையும் மாற்றங்களையும் ஏற்படுத்தின.

ஆயர் பெற்றக்கினி அவர்களின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியில் ஆரம்பத்தில் அதிபர் உட்பட இரண்டு ஆசிரியர்களும் ஐம்பது மாணவர்களுமே இருந்தனர். இன்று இக்கல்லூரி 150 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து 75க்கும் அதிகமான ஆசிரியர்களையும் 2000க்கு மேற்பட்ட மாணவர்களையும் தன்னகத்தே கொண்டு பெரும் விருட்சமாக வளர்ந்து நிற்கின்றது. இவ்வாறு வளர்ந்து நிற்கும் இக் கல்லூரி யாழ் குடா நாட்டில் மட்டுமல்ல, இலங்கை முழுவதிலும் உள்ள முக்கியமான பாடசாலைகளில் ஒன்றாகவும் உயர்ந்து நிற்கின்றது. இக்கல்லூரியின் வளர்ச்சியில் பல தடைகள், எதிர்ப்புக்கள், இன்னல்கள் எற்பட்ட பொழுதிலும் அவற்றையெல்லாம் எதிர்த்து நின்று சாதனைகள் படைத்து வருகின்றது. குறிப்பாக இன்று யாழ் குடாநாட்டில் காணப்படும் ஒரேயொரு தனியார் கத்தோலிக்க பாடசாலையாக இது விளங்குகிறது. இந்த வகையில் இக்கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துப் பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெருமைக்குரியவர்களும் போற்றப்பட வேண்டியவாகளுமே. வரலாற்றில் இக்கல்லூரியின் பெயரைப் பதியச் செய்தவர்களில் வெளிநாட்டு அதிபர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அந்த வகையில் அருள்தந்தை மத்தியூஸ், அருள்தந்தை லோங், அருள்தந்தை பற்றிக் டன் போன்றவர்களைக் குறிப்பிடலாம். அவர்கள் வழிநின்று சுதேச அதிபர்களான அருள்தந்தை அருள்நேசன், அருள்தந்தை மதுரநாயகம், அருள்தந்தை ஜீவரட்ணம், அருள்தந்தை யோன் பிரான்சிஸ், அருள்தந்தை பிரான்சிஸ் ஜோசப் போன்றவர்களும் பணியாற்றியுள்ளனர். இவர்களின் வரிசையில் இன்று இக்கல்லூரியின் அதிபராக விளங்கும் அருள்தந்தை பேனாட் அடிகள் மூன்றாம் மிலேனியத்தின் புதிய போக்குகளுக்கும், கல்விச் சிந்தனைகளுக்கும், புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கும் ஏற்ப கல்லூரியை வழிநடத்திச் செல்கின்றமை பாராட்டப்பட வேண்டியதே.

## சமூகத்தில் பத்திரிசிய பழைய மாணவர்கள்

கல்வி ஒருவனை நல்ல மனிதப் பண்புடையவனாகவும், நற்குடிமகனாகவும் ஆக்க வேண்டும் என்பதும் அவர்களின் ஊடாக நல்ல சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும் என்பதும் ஜீன் லொக், ரூசோ போன்ற தத்துவவியலாளர்களின் கருத்தாகும். அக்கருத்துக்கு அமைவாக புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள் இலங்கைச் சமூகத்திற்கு மட்டும் அன்றி உலக சமூகத்திற்குமே சேவையாற்றியுள்ளதை, சேவையாற்றி வருவதை இக் கல்லூரியால் உருவாக்கப்பட்ட கல்விமான்கள் ஊடாகவும், ஆயர்கள், குருக்கள், அரசியலாளர்கள், சமூக சேவையாளர்கள் ஊடாகவும் நாம் அறிந்துகொள்ள முடிவதோடு பெருமையும் அடைகின்றோம்.

மனிதனின் உடல், உளம், ஆன்மா என்பவற்றை ஒருமித்த வுகையில் விருத்தி செய்து ஆளுமை அடையச் செய்வதே கல்வியின் ஒரு பண்பாகும். எனவே கல்வி ஆன்மீகத் துறை சார்ந்ததாகவும் காணப்படுகின்றது. புனித பத்திரிசியார் கல்லூரியைப் பொறுத்தவரையில் அதன் அடிப்படை நோக்கம் இது எனக் கூறிவிடலாம். இன்று இலங்கையில் குறிப்பாக யாழ் குடாநாட்டில் சமயப் பணியாற்றும் பெரும்பாலான கத்தோலிக்க குருமார் தமது கல்வியைப் பெற்றுக்கொண்ட இடமாக இது காணப்படுகிறது. யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற மறை மாவட்டங்களுக்கு ஆயராகப் பணியாற்றியவர்களும் பணியாற்றி வருகின்றவர்களும் முன்னைய கண்டி ஆயரும் இக் கல்லூரியினால் உருவாக்கப்பட்டவர்களே.

இக்கல்லூரியானது பல கல்விமான்களையும் தொண்டர்களையும் உருவாக்கி நிற்கின்றது. சமயப் பணியை ஆற்ற விளைந்து தமிழுக்கு அளவிடற்கரிய பணியாற்றியவர்களில் தனிநாயகம் அடிகளை மிஞ்சிய வகையில் எவரும் காணப்படவில்லை என்பது பேரறிஞர் குலேந்திரன் அடிகளின் கருத்து. இவ்வாறு புகழ் பெற்று விளங்கும் தனிநாயகம் அடிகளும், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரும் தமிழ் உலகம் புகழும் சுவாமி விபுலானந்தரும், அருட்திரு எச். எஸ் டேவிற் போன்றவர்களும் இக்கல்லூரியினால் உருவாக்கப்பட்டவர்களே இன்னும் பலர் பல்கலைக்கழகங்களில் துணைவேந்தராகவும், துறைத் தலைவர்களாகவும் பணியாற்றியமையும் தொடர்ந்தும் பணியாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

எமது நாட்டிற்கு மேலைத்தேச கிறிஸ்தவ மறை போதகர்கள் வந்து சமயத்தைப் பரப்பியது அன்றைய காலம். ஆனால் இன்று எம் நாட்டிலுள்ள குருக்கள் வெளிநாடுகளுக்குச் சென்று மறையைப் பரப்பி வருகின்றனர். அந்த வகையிலே இக்கல்லூரியினால் உருவாக்கப்பட்ட பல குருக்களும் ஆயர்களும் மேலை நாடுகளிலே கிறிஸ்தவ சமயத்தை எடுத்துரைக்கின்றவர்களாகக் காணப்படுகின்றனர். மலேசியாவின் கோலாலம்பூர் முன்னாள் ஆயர் வெண்டர்கோன், தற்போதைய பெனாங் மறைமாவட்ட ஆயர் அன்ரனி செல்வநாயகம், ஆகியோர் இக்கல்லூரியினால் உருவாக்கப்பட்டவர்களே. மேலும் இன்று அமலமரித் தியாகிகள் சபையின் ஆசியப் பிராந்தியத்திற்கு ஆலோசகராக இருக்கின்ற அருட்தந்தை பி. இயேசுநேசன் அடிகளார் இக்கல்லூரியின் உப அதிபராகப் பணியாற்றி கல்லூரியை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக் கல்லூாயில் படிப்பை முடித்த பின் அரசியலில் நுழைந்தவர்களாகவும் நாம் பலரைக் காணமுடிகின்றது. இந்த வகையில் வீடமைப்பு சமூக சேவை அமைச்சராகவிருந்த சேர் கந்தையா வைத்திய நாதன், மீன்பிடித் துறை விஞ்ஞான தொழிற்துறை அமைச்சராகவிருந்த திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், கல்வி அமைச்சராகவிருந்த திரு. ஈ. எல். பி. குருளே, தபால் தந்தி தொலைத்தொடர்புகள் துறையின் அமைச்சராகவிருந்த திரு. செ. குமாரசூரியர் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இன்னும் பாராளுமன்ற உறுப்பினர்களாகவிருந்து சேவை செய்த திருவாளர்கள் ஏ. எஸ் தம்பி ஐயா, வி. தர்மலிங்கம், வி. ஏ. அழகக்கேரன், சி. ஏக்ஸ். மாட்டீன், எம். சி. சுப்பிரமணியம், வீ. யோகேஸ்வரன், இரா சம்பந்தன் போன்றவர்களும் இக்கல்லூரியின் மைந்தர்களே. இன்னும் நீதித்துறை, பாதுகாப்புத்துறை, வைத்தியத் துறை, நிர்வாகத்துறை போன்ற பல்வேறு துறைகளிலும் இக்கல்லூரியின் மைந்தர்கள் பணியாற்றியுள்ளமையும் தொடர்ந்தும் பணியாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக கல்லூரியின் பழைய மாணவர்கள் இலங்கைச் சமூகத்திலும், உலக நாடுகளிலும் சிறந்த பணியாற்றி கல்லூரியின் புகழை உலகறியச் செய்கின்றனர்.

## யாழ் குடா நாட்டுக் கல்வி வளர்ச்சியில் பத்திரிசிய பங்களிப்பு

யாழ் குடாநாட்டுக் கல்வி வளர்ச்சியைப் பொறுத்த வரையில் கணிசமான பங்காளிப்பை வழங்கிவரும் ஓர் கல்வி நிறுவனமாக பத்திரிசியார் கல்லூரி காணப்படுகின்றது. கல்வி என்பது வெறும் ஏட்டுக் கல்வியை மட்டும் குறித்து நிற்கவில்லை என்பதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். அந்த வகையில் கல்வி சார் அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கி வருகின்ற ஓர் கல்லூரியாகவே பத்திரிசிய கல்லூரி திகழ்கின்றது. மாணவர்களின் கல்வித் தரத்தை ஜி.சி.ஈ (சா.த) (உ.த) பரீட்சைப் பெறுபேறுகளைக் கொண்டு மதிப்பிடுகின்றபோது 8D, 4A இன்னும் இதற்கு கிட்டியதான பெறுபேறுகள் ஒவ்வொரு வருடமும் மாணவர்கள் பெற்று வருவதென்பது இக்கல்லூரியின் கல்வி வளர்ச்சியைத் தெளிவாகக் காட்டி நிற்கின்றது.

மேலும் ஒவ்வொரு வருடமும் பல்கலைக் கழகங்களில் இணையும் மாணவர்களின் எண்ணிக்கையும் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இங்கு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விடயம் என்னவென்றால் ஒவ்வொரு வருடமும் நடைபெறுகின்ற ஜி.சி.ஈ (சா.த) (உ.த) பரீட்சையில் தோற்றும் மாணவர்களில் 90 வீதமான மாணவர்கள் சித்தி அடைந்து விடுகின்றனர். இதனூடாகக் கல்லூரியில் முழுமையான கல்வி வளர்ச்சி நிலையை தெளிவாக இனம் காண முடிகிறது. கல்வியினுடைய அடிப்படை நோக்கம் சமூகத்திற்குரிய நற்பிரஜைகளை உருவாக்கிக் கொடுப்பதாகும் அந்தப் பணியைச் செவ்வனே நிறைவேற்றி வருகின்ற தனித்துவமான கல்லூரி பத்திரிசியார் கல்லூரியாக காணப்படுகிறது. ஒரு மாணவன் எவ்வளவிற்குச் சிறந்த ஆற்றல்களைக் கொண்டிருந்தாலும் அவன் ஆன்மீக ஒழுக்க சீலனாகத் திகழாவிட்டால் அவை அர்த்தமில்லாதவையே. எனவே மாணவர்களை நல் ஒழுக்கத்தவராய் கிறிஸ்தவ விழுமியங்களின் அடிப்படையில் உருவாக்கிக் கொடுப்பதோடு சமுதாயத்தின் தலைவர்களாகவும் உருவாக்கிவிடுகின்ற சிறந்த பணியை கல்லூரி ஆற்றிவருகின்றது.

ஒரு மனிதனை முழுமையடையச் செய்வதில் விளையாட்டுத்துறை முக்கிய பங்கை வகித்து வருகின்றது. புனித பத்திரிசியார் கல்லூரியின் வளர்ச்சியிலே அதிக பங்களிப்பை செய்து வரும் ஒரு துறையென இதைக் குறிப்பிடலாம். இன்று இலங்கையிலும் உலகிலும் கல்லூரியின் பெயர் பேசப்படுவதற்கு முக்கிய ஆதாரம் விளையாட்டுத் துறையின் வளர்ச்சியாகும். ஆரம்பத்தில் இருந்து குத்துச்சண்டை, செஸ், கரம், டாம், ரெனிஸ், மேசைப்பந்து, கிரிக்கெட், உதைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் எனப் பல விளையாட்டுக்கள் இடம் பெற்றுவந்த போதிலும் அவற்றின் சில இன்று அருகியும் போய்விட்டன.

எனவே யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க பிள்ளைகளுக்கு கல்வி வழங்கும் நோக்கோடு ஆயர் பெற்றக்கினீ அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி இன்று பல ஆயர்களின் வழிநடத்தலினாலும், பல அதிபர்களின் அயராத உழைப்பினாலும் ஓர் உன்னதமான நிலையை அடைந்துள்ளது. "இறைபற்றும் உழைப்பும்" என்னும் விருதுவாக்கிற்கு ஏற்ப சமூகத்திற்கு நற்பணியாற்றி இன்று 150வது ஆண்டு நிறைவை கொண்டாடி மகிழ்ந்து நிற்கும் இக்கல்லூரி தொடர்ந்தும் தான் கொண்ட இலட்சியத்தை புதிய சிந்தனை மாற்றங்களுக்கும் வளர்ச்சிக்கும் ஏற்ற வகையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதே இக்கல்லூரிச் சமூகத்தினரின் எதிர்பார்ப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகைவரை நேசித்த புனித பத்திரிசியார்

அருள்திரு எஸ்.ஈ.என். குணசீலன்

சூறையரின் கப்பலின் அடித்தளம் இருண்டு கிடந்தது. நெருக்கமாகக் கிடந்த பிற கைதிகளுடன் பதினாறு வயது நிரம்பிய பற்றிக் சுருண்டு கிடந்தான். பசியும் உடல்வலியும் அவனை வாட்டின. கப்பலோடு அலைகள் வந்து மோதுகிற சத்தம் அவன் காதுகளுக்குக் கேட்டது. அலைகளூடே ஆடி ஆடிச் செல்லும் கப்பலின் அசைவை அவன் உணர்ந்தான். மீண்டும் தன் குடும்பத்தினரைக் காண முடியுமா? தன் பெற்றோர் உயிருடன் இருக்கிறார்களா, இறந்துவிட்டார்களா? தன்னை இம்மனிதர்கள் எங்கே கொண்டுபோகிறார்கள்? தன்னை அயர்லாந்துக்குக் கொண்டுபோய் அடிமையாக விற்கப்போகிறார்களா?

''ஆண்டவரே, என்னோடு இருந்தருளும் என்னைப் பாதுகாத்தருளும்'' பற்றிக் மௌனமாக செபித்தான்.

அடிமைச் சந்தையில் சரியான சனநெரிசல். புதிய கைதிகள் அமைதியாக நிற்க அடிமை வியாபாரிகளும் ஐரிஷ் பிரபுக்களும் அவர்களின் விலை குறித்து வாதிட்டுக் கொண்டிருந்தனர். ஒருவாறு பேரம் பேசி முடித்தாயிற்று. பற்றிக் மில்ச்சி என்னும் தனவானுக்கு விற்கப்பட்டான் பின் தன் எசமானுடன் அயர்லாந்தின் வட பகுதியை நோக்கிப் புறப்பட்டான்.

மலைகளும் சதுப்பு நிலங்களும் நிறைந்த பிரதேசத்தினூடாக அவர்கள் பிரயாணம் செய்தனர். இரவு வேளைகளில் ஓநாய்கள் ஊளையிடும். பற்றிக்கின் தாய் நாடான பிரித்தானியாவைப் போலல்லாமல் இது பண்படுத்தப்படாத பிரதேசமாக இருந்தது. ஆயினும் இந்தக் கரடுமுரடான இயற்கைத் தோற்றம் அவனுக்குப் பிடித்திருந்தது. என்றாவது ஒருநாள் தப்பியோடி இம்மலைகளில் ஒளித்திருந்து, ஒரு கப்பலைக் கண்டுபிடித்து தாய் நாடு திரும்பலாம் எனக் கனவு கண்டான்.

மில்ச்சியின் நிலபுலன்கள் காட்டுப் பிரதேசத்தில் தான் இருந்தன. ஓநாய்கள், கள்வர்களின் தாக்குதலுக்குக்கெதிராக அவரது இருப்பிடம் நன்கு அரண் செய்யப்பட்டிருந்தது. ஆனால் பற்றிக்கிற்கு அந்தப் பாதுகாப்பு கிடைக்கவில்லை. புல்வெளியிலுள்ள ஆடுகளையும். தரிசு நிலங்களிலுள்ள பன்றிகளையும் பார்த்துக்கொள்வதுதான் அவனது வேலை. ஓநாய்களிடமிருந்து அவற்றைப் பாதுகாப்பதுடன் அவை பயிர்ப் பச்சைகளை அழிக்காமலும் பார்த்துக் கொள்ளவேண்டும். அவனுக்கு உதவியாக நன்கு பழக்கப்பட்ட நாய்களும் இருந்தன. இரவில் அவன் தங்குவது ஒரு சிறு குடிசை, வாயிலில் வனவிலங்குகளைத் தடுப்பதற்காக ஒரு புற்கரி நெருப்பு எரிந்து கொண்டிருக்கும் நாய்கள்தான் அவனுடைய தோழர்கள். ஆறு ஆண்டுகள் இவ்வாறு கழிந்தன.

தனிமையில் வாடிய வேளைகளில் பற்றிக் தனது இளமைப் பருவத்தை நினைப்பதுண்டு. அவன் ஒரு அசட்டையான பையனாகத்தான் இருந்தான். பல்லாண்டுகளுக்குப் பின் எழுதப்பட்ட தனது ''பாவ சங்கீர்த்தனத்தில்'' தன்னை ஓர் ஏறுமாறான ஓர் இளைஞனாக இறைவனை அறியாத மூடரின் கூட்டத்தில் ஒருவனாக, திருச்சபையின் கட்டளைகளுக்கோ குருக்களுக்கோ பணியாதவனாக தன்னை இழித்துரைக்கின்றான். ஆயினும் அந்த ஏகாந்த வேளைகளில் தான் அவனது பெற்றோரினதும் குருக்களினதும் போதனைகள் அவனுக்கு மீள உறைத்தன. பற்றிக் மீண்டும் செபதபங்களில் ஈடுபட்டான். தனது அடிமைத்தனத்தைப் பற்றி பத்திரிசியார் எழதி வைத்துள்ளதாவது: ''நான் அயர்லாந்துக்கு வந்தபின் ஆடு மேய்த்தேன். பகலில் அநேக தடவை செபித்தேன். இறையன்பும் இறையச்சமும் அதிகரித்தன. என் விசுவாசம் வளர்ந்தது. என் ஆன்மா எழுச்சிபெற்றது. ஒரு நாளில் நூறு தடவை செபித்தேன், இரவிலும் அப்படியே. காட்டிலும் மலையிலும் இருந்தபோதும் செபித்தேன் விடியுமுன் பனியிலும், மழையிலும் எழுந்து செபித்தேன்''.

தனது கடின வாழ்க்கையால் அவரது உடல் உரம்பெற்றது. வெயில், குளிரைத் தாங்கும் சக்தி பெற்றது. அதே வேளையில் ஐரிஷ் மக்களை அவர் நேசிக்கத் தொடங்கினார். சில விதங்களில் அவர்கள் நாகரீகமற்றவர்களாக இருந்தார்கள். ஆயினும் சில வேளைகளில் அவர்கள் மென்மையானவர்களாகவும் அன்பானவர்களாகவும் இருந்தார்கள். அவர்களுக்காகவும் அவர் மன்றாடினார்: ''யேசுவே, அவர்கள் வணங்கும் பொருள்கள் தெய்வங்களல்ல,, அனைத்தையும் படைத்த ஒரு கடவுள் இருக்கிறார் என்பதை அவர்கள் உணரச் செய்யும் இந்த மறைபொருளை ஒரு நாள் நான் அவர்களுக்கு விளக்கக்கூடியதாக, நான் உம்மைப் பற்றிய அறிவைப் பெற எனக்கு ஒரு சந்தர்ப்பம் தாரும். எனது அறியாமையால் அதை நான் இப்போது செய்ய முடியாதுள்ளது. நான் தப்பிச் செல்ல ஒரு சந்தர்ப்பம் தாரும்.'' இறைவன் அவரது செபத்தைக் கேட்டார். ஒரு நாள் அவர் நித்திரையில் இருந்தபோது அவரது காவற் சம்மனசின் குரல் அவருக்குக் கேட்டது. ''உனது கப்பல் ஆயத்தமாயிருக்கிறது'' பத்திரிசியார் எழுந்து இருநூறு மைல் நடந்து ஒரு துறையை அடைந்தார். அங்கு ஒரு கப்பல் நங்கூரமிட்டிருந்தது. பத்திரிசியார் கப்பல் தலைவனிடம் சென்று தன்னை மாலுமியாகச் சேர்த்துக்கொள்ளும்படி கேட்டார். ''நடக்காது'' தப்பியோடிய அடிமை போல் தோற்றமளித்த இந்த இளைஞனை அவன் சேர்த்துக்கொள்ள விரும்பவில்லை. பத்திரிசியார் துக்கத்துடன் திரும்பி நடந்தார். செபித்துக் கொண்டே சென்றார். இருந்தாற் போல் பின்னாலிருந்து யாரோ அழைப்பது கேட்டது ''விரைவாக வா மாலுமி உன்னை அழைக்கிறார்'' தலைவனும் மாலுமிகளும் அவரை வரவேற்று சேர்த்துக் கொண்டனர். கப்பல் புறப்பட்டது.

பல கஷ்ட துன்பங்களின் பின் பத்திரிசியார் மீண்டும் பிரித்தானியாவுக்குத் திரும்பி வந்து உயிரோடிருந்த தனது குடும்ப அங்கத்தினர்களுடன் சேர்ந்து கொண்டார். அங்கு இருக்கும்போதுதான் அயர்லாந்தில் மறைப்பணியுரிய அவருக்குத் திட்டவட்டமான ஓர் அழைத்தல் கிடைத்தது.

''நான் இரவில் ஒரு காட்சி கண்டேன். விக்டோறிக்கஸ் என்னும் மனிதன் அயர் லாந்திலிருந்த எண்ணற்ற கடிதங்களைக் கொண்டுவந்தான். எனக்கு ஒன்றைத் தந்தான் ''ஐரிஷ் மக்களின் குரல்'' என்று தலைப்பிடப்பட்டிருந்த அக்கடிதத்தை வாசிக்க ஆரம்பித்தேன் அதே வேளையில் போக்கல்ட் வனத்தினருகில் வாழ்ந்தவர்கள் ஒரே குரலாக ''புனித இளைஞரே! நீர் இங்கு வந்து எங்கள் மத்தியில் மீண்டும் நடமாடும்படி இரந்து கேட்கின்றோம்'' என்று கூவி அழைப்பது போல் இருந்தது. எனக்கு மிகுந்த கவலையாக இருந்தது. தொடர்ந்து வாசிக்க முடியவில்லை உடனே விழிப்புற்றேன்''

இந்தக் காட்சி பத்திரிசியாருக்கு உணர்த்தியது ஒன்றுதான், அதாவது அஞ்ஞானிகளான ஐரிஷ் மக்களுக்கு மறைபோதகம் செய்ய இறைவன் தன்னை அழைக்கிறார். ஆனால் அவர் அவசரப்படுபவரல்ல. செபம், கல்வி மூலம் அவர் தன்னை ஆயத்தம் செய்ய வேண்டும். அவரது உறவினர் தடுத்தபோதும். அவர் புனித மாட்டீன், புனித ஜேர்மானுஸ் ஆகியோரிடம் குருத்துவக் கல்வி கற்க கோல் நாட்டிற்கு (பிரான்ஸ்) சென்றார். இதன்பின் அவர் மீண்டும் தாய்நாட்டில் காலடி வைக்கவேயில்லை. தன்னை முன்னர் அடிமைப்படுத்திய மக்களுக்காக அவர் தன் நாட்டையே துறந்தார்.

இறையடியார்கள் துன்பங்களாலும் அவ மதிப்புகளாலும் பெரும்பாலும் சோதிக்கப்படுகின்றனர். பத்திரிசியாரும் அவ்வாறே சோதிக்கப்பட்டார். புனித ஜேர்மானுஸ் அவரை அயர்லாந்தின் முதல் ஆயராக திருநிலைப்படுத்த எண்ணியபோது பத்திரிசியாரின் ''நண்பர்களில்'' ஒருவர் தனக்கு அவர் பல வருடங்களின் முன் கூறியிருந்த ஒரு இரகசியத்தை வெளியிட்டார். பத்திரிசியார் தனது ''பாவசங்கீர்த்தனத்தில்'' கவலையோடு எழுதுகிறார்! ''அவர் நல்லோர் தீயோர் ஆகிய எல்லோர் முன்னிலையிலும் நான் அவமானமடையச் செய்தார்'' அவரது முன்னாள் நண்பர் தெரிவித்த விடயம் காரணமாக பத்திரிசியார் பெரியவர்களால் ஒதுக்கப்பட்டார். இருபது ஆண்டுகளாக அவர் கட்டிக் காத்த நம்பிக்கைகளும் திட்டங்களும் தவிடுபொடியாகின. அவருக்கு உலகமே இருண்டது. மனம் சோர்ந்த பத்திரிசியார் அவநம்பிக்கைக்கு ஆளாகியிருக்கலாம். ஆனால் அவர் விசுவாசமுள்ள மனிதர். அன்று இரவே ஒரு காட்சியில் இறைவன் தனக்கு ஆறுதலளித்து, வலுவூட்டி நம்பிக்கையளித்ததாக அவர் எழுதியுள்ளார். பத்திரிசியார் இறைவனுக்கு நன்றிகூறி, தன்னை ஒதுக்கியவர்களுக்காகவும், தனக்கு நம்பிக்கைத் துரோகம் செய்த வருக்காகவும் மன்றாடினார்.

தாழ்ச்சியிலும் பணிவிலும் இன்னொரு வருடம் கழிந்தது. இதை அவதானித்த, முன்னரே அவரில் நம்பிக்கை கொண்டிருந்த புனித ஜேர்மானுஸ் அவரை ஆயராக, அயர்லாந்தின் முதல் ஆயராக திருநிலைப்படுத்தி அதற்கு வேண்டிய அதிகாரங்களையும் அளித்தார். பாப்பு புனித செலஸ்தீன், புனித ஜேர்மானுஸ் ஆகியோரின் ஆசியுடன் பத்திரிசியார் அயர்லாந்துக்குப் புறப்பட்டார்.

அயர்லாந்து மக்களை மனந்திருப்புவது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. மீண்டும் மீண்டும் பல தடவைகள் பத்திரிசியாரும் அவரது சீடர்களும் துன்புறுத்தல், தப்பபிப்பிராயம், பொய்யான குற்றச்சாட்டுக்களுக்கெதிரில் தமது மனதை இரும்புபோல் உறுதியாக வைத்துக்கொள்ள வேண்டியிருந்தது.

*இன்னும் கொடிய ஆபத்துகளும் இருந்தன. தமது மதச் சடங்குகளில் விடாப் பிடியாயிருந்த ''றூயிட்'' என்னும் பூர்வீக மதக் குருக்களின் எதிர்ப்பு, சிறைவாசம், மரணாபத்து ஆகியவையே இவை. இவையெல்லாவற்றையும் மனவலிமை மிகுந்த செபம், மிகுந்த அன்பு, மிகுந்த தவம் ஆகியவற்றால் எதிர்கொண்டார். பத்திரிசியார் அஞ்ஞான அயர்லாந்துக்கு வந்தார். ஆனால் அவர் இறக்கும்போது ஏறக்குறைய அயர்லாந்து மக்கள் முழுவதுமே கிறிஸ்தவர்களாக, ஆழ்ந்த மத நம்பிக்கை உடையவர்களாக மாறியிருந்தனர்.*

## மறைக்கல்வி பயிற்சி

12ம் பக்கத் தொடர்ச்சி

கப்பட வேண்டும். பொது உண்மைகளிலிருந்து தனி உண்மைகளைப் பிரித்தெடுத்துக் கற்றுக்கொடுத்தல் ஒரு கல்விமுறை, ஆனால் அதைவிட செயலறிவு முறையில் தனி உண்மைகளில் இருந்து பொது உண்மைகளுக்கு இட்டுச்செல்வது அதிக நன்மை பயக்கும். இயேசுவைப் பொறுத்த வரையில் போதனையென்பது இறைவாக்குரைக்கும் பணியாகும். எடுத்துரைப்பது, இடித்துரைப்பது, கட்டும் முயற்சி – தகர்க்கும் முயற்சி என்ற இருவேறுபட்ட பரிமாணங்களைக் கொண்டது இப்பணி. இயேசு தந்த போதனை கடவுளையும், மனிதனையும் அவன் வாழும் சமுதாயத்தையும் இணைத்து அவர் தந்த மறைக்கல்வியாகும்.

இந்தவகையில் அருள்தந்தையர்கள் மறைப்பயிற்சியாளருக்கு ஆற்றும்பணி அளப்பரியது, மறைக்கல்விப்போதனை விசுவாசத்தை ஒளிர்வித்து, உறுதிப்படுத்துவதுடன் அவர்களின் வாழ்வை கிறிஸ்துவின் மனநிலைக்கு உகந்த விதத்தில் வளர்த்து, திருவழிபாட்டு மறைபொருளில் உள்ளார்ந்த விதத்திலும், செயல்முறையிலும் மறைப்பயிற்சியாளரை முழுமையாக பங்கேற்க இட்டுச்செல்வதிலும் பெரும் பங்காற்றுகிறார்களென்றால் அது மிகையாகாது. மேலும் இவர்களின் பயிற்றுவிப்பில் தரமான இறையியல் கல்வியும், உளவியல் போன்ற பாடங்கள் அடங்கிய அறிவியல் கல்வியும், போதனைமுறை பற்றிய சிந்தனைகளும் எமக்கு ஊட்டப்படுவதுடன் பலதரப்பட்ட தியானங்களும், உறுதிபூசுதலெனும் அருட்சாதனம் பெறும் இளையோருக்கான பாசறைப்பயிற்சியும், அகவொளி நிலையத்தில் நடைபெறும் திருமணப்பயிற்சிகளிலும் எமது செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

மறைக்கல்வி கிறிஸ்துவை மையமாகக் கொண்டுள்ளது. அவர் வழியாக ஆவியில் தந்தையிடம் இட்டுச்செல்கிறது. மறைக்கல்வியின் மையமாக இருக்கும் கிறிஸ்து தம்மையே வெளிப்படுத்தும் போதகராகவும் இருக்கிறார். எனவே உண்மையான மறைக்கல்வி கிறிஸ்துவின் போதனையை கிறிஸ்துவை வாங்கி வழங்குவதாக அமைகின்றது. கிறிஸ்துவின் வாழ்வனைத்துமே போதகமாயிருந்தது. அவ்வாழ்வோடு மறைக்கல்வி புகட்டுவோரின் வாழ்வு இரண்டறக் கலக்கும்போது அவர்கள் போதிக்கும் மறைக்கல்வியால் உண்மையான மறுமலர்ச்சி உண்டாகும்.

எனவே திருச்சபையின் பிள்ளைகள் எல்லோரும் உலகின்பால் தாங்கள் கொண்டுள்ள பொறுப்பைப்பற்றிய உயிரூட்டமான உணர்வைப் பெற்றிருக்க வேண்டும். உண்மையிலேயே பொதுமையான உணர்வைத் தங்களில் வளர்க்க வேண்டும். நற்செய்தியை அறிவிக்கும் பணியில் எங்கள் ஆற்றல் முழுவதையும் செலவிட வேண்டும். ஆயினும், கிறிஸ்தவ வாழ்வை ஆழமாக வாழ்வதே விசுவாசத்தைப் பரப்புவதற்கு நாங்கள் செய்யும் முதன்மையான, முக்கியமான கடமையென்பதை நாங்கள் அறிந்துகொள்ள வேண்டும். உண்மையில் கடவுளின் சேவையில் நாங்கள் காட்டும் ஆர்வமும், பிறர்பால் நாங்கள் கொள்ளும் அன்பும் திருச்சபை முழுவதற்கும் ஒரு புதிய ஆன்மீக உணர்வைக் கொண்டுவரவேண்டும். இதனால் திருச்சபை நாடுகளின் நடுவே உயர்த்தப்பட்டிருக்கும் ஓர் அடையாளமாகவும் ''உலகின் ஒளியாகவும் பூமியின் உப்பாகவும்'' சிறந்து விளங்கும் என்பது கண்கூடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதவார வழிபாடுகள் பற்றிய விளக்கம்

6ம் பக்கத் தொடர்ச்சி

சகோதரர் எவ். றஞ்சிற் ரூஸ்வோல்ட் (அ.ம.தி.)

இந்த நற்கருணை பவனியானது இயேசு தன் சீடர்களுடன் ஜெருசலேம் நகரிலிருந்து ஜெத்சமனித் தோட்டத்திற்கு போனதை எமக்கு நினைவுப்படுத்தி நிற்கின்றது. ஆனால் அவரின் அன்புச் சீடர்கள் அவரை தனியே விட்டு உறங்கி விடுகின்றார்கள். தனித்த இயேசு தன் துன்பத்தில் துணை நிற்க நட்புடன் கூடிய உறவைத் தேடுகின்றார். எனவே ஆண்டவர் இயேசுவின் துன்பமும் வேதனையும் எம் உள்ளங்களையும் தொட்டு நாமும் அவரோடு ஜெத்சமனிக்கு பயணித்து எம் வாழ்வை சீராக்கி எம் ஆன்மீக இலட்சிய பயணத்தில் அவரோடு சேர்ந்து பயணிப்போம்.

### பெரிய வியாழன் வழிபாட்டுக்கு ஆயத்தம் செய்ய வேண்டியவை

திருப்பலிக்கு

குரு வெண்ணிற திருவுடை அணிந்திருப்பார். வழமைபோல திருப்பலிக்கு தேவையான அனைத்துப் பொருட்களும் வைக்கப்பட்டிருக்கும். இரண்டு நாட்களுக்கு தேவையான அப்பங்கள், கிறிச்சான், பாதங்கழுவும் சடங்கிற்கென தேர்ந்தெடுத்த 12 பேருடன் குருவானவர் கோயில் வாயிலிலிருந்து பவனியாக வருதல்.

## புனித பெரிய வெள்ளி

### திருப்பலிக்கு முன்னுரை

இன்று ஆண்டவர் இயேசு எமக்காக தன் உயிரைக் கொடுத்த அந்த புனிதநாள். பூமி எங்கும் ஒளி பிரகாசிக்க தன் வாழ்வை தீபமாக்கிய தியாகத் திருநாள். பல மனிதர்களுக்கு பல்வேறு வடிவங்களில் வாழ்வழித்த வள்ளலுக்கு ஒரு சாட்சிகூட இவர் குற்றமற்றவர் என்று சொல்லத்துணியாத பரிதாபக் காட்சியோடு இயேசு இரு கள்வர்களுக்கு நடுவில் சிலுவையில் அறையப்படுகின்றார். இயேசுவின் மரணத்தோடு அவமானத்தின் சின்னமான சிலுவை அபிமானத்தின வடிவமாக உருமாற்றம் பெறுவதைக் காணலாம். ஒருவனின் இன்பத்தில் பலரைக் காணலாம். ஆனால் அவனின் துன்பத்தில் அவன் அழுகின்ற போது அந்த அழுகையைத் துடைக்க மனிதருக்கு தட்டுப்பாடு வருவதை அன்று மட்டுமல்ல இன்றும்கூட எம் சமூகத்தில் நாம் காண்கின்றோம்.

எம் சமூகத்தில் பல்வேறு சிலுவைச் சாவுகளை நாம் நாளாந்தம் பார்க்கின்றோம். அப்பாவி மக்கள் அனாதைகள் ஆக்கப்பட்டு சிலுவையில் அறையப்படுகின்றார்கள். நாமும் எம் சொல் ஆணிகளால் எம் சகோதரங்களை நாளாந்தம் அறைகின்றோம். அறையப்படக் காரணமாக இருக்கின்றோம். எனவே இன்றைய நாளிலே பிறரின் சிலுவையை குறைக்கின்ற மக்களாக தூய சிந்தனைகளோடு எம்மில் பல புதிய மாற்றங்களைக் கண்டு எம் வாழ்வு மிளிர இத் திருப்பலியில் வரம் கேட்டு மன்றாடுவோம்.

இன்றைய வழிபாடு நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றது. 1. இறைவாக்கு வழிபாடு 2. விசுவாசிகளின் மன்றாட்டு 3. திருச்சிலுவை ஆராதனை 4. திருவிருந்து

### குருவானவர் முகம் குப்புற விழுந்து வணங்கும் முன் விளக்கவுரை

கிறிஸ்துவின் பாடுகள், மரணம் என்பவற்றை நினைவுகூர்ந்து இன்று அன்னையாம் திருச்சபையானது மிகுந்த துயரத்தில் அமிழ்ந்து காணப்படுகின்றது. மனிதர்களாகிய நாங்கள் கட்டிக்கொண்ட பாவமே இதற்கு காரணம். இதை திருச்சபையானது ஒப்புக்கொண்டு தாழ்நது பணிந்திருக்கின்றது. இறைவனின் இரக்கத்தையும் மன்னிப்பையும் வேண்டி அபயக்குரல் எழுப்புகின்றது. எனவே இவை அனைத்தையும் வெளிக்காட்டும் விதமாக இப்போது குருவானவர் பீடம் நோக்கிச் சென்று பீடமுற்றத்தில் தாழ்நீட்டி தரையில் சிரம்பதித்து இறைவனை வேண்டுவார். நாமும் குருவுடன் சேர்ந்து இறைவனை வேண்டுவோம்.

### முதல் பகுதி இறைவாக்கு வழிபாடு

**முதலாம் வாசகம் - (எசாயா 52:13-53:12)**

இன்றைய முதலாம் வாசகத்திலே துன்புறும் ஊழியனாகிய இயேசுக்கிறிஸ்து பற்றி எசாயா இறைவாக்கினர் பேசுகின்றார். நம் அனைவரின் பாவங்களையும் தானே சுமந்த கொண்டு எமக்காக தன்னையே இயேசு பரிகாரப் பலியாக கையளித்தார்.

**இரண்டாம் வாசகம் - (எபிரேயர் 4:14-16 5:7-9)**


எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய இரண்டாம் வாசகம் மாபெரும் தலைமைக் குருவாகிய இயேசுக் கிறிஸ்து பாவம் செய்யாதவர் இவர் பாவம் தவிர எல்லா வகையிலும் நம்மைப் போல சோதிக்கப்பட்டவர் என்று கூறி இவர் சாவை ஏற்கும் அளவுக்கு கீழ்படிந்து நம் அனைவருக்கும் மீட்பை பெற்றுத்தந்தார் என்று கூறுகின்றது.

**நற்செய்தி வாசகம் - (யோவான் 18:1-19,42)**

புனித யோவான் நற்செய்தியிலிருந்த எடுக்கப்பட்ட இயேசுவின் திருப்பாடுகள் ஊடாக உலகத்தை முழுமையாக அன்பு செய்தவருக்கு சிலுவை மரணமே பரிசாக அளிக்கப்படுவதைக் காணலாம். நாம் ஒவ்வொருவரும் எவ்வாறு வாழ வேண்டும். மற்றவரை எவ்வாறு வாழ்விக்க வேண்டும் என இயேசுவின் திருப்பாடுகள் எடுத்துக்காட்டுகின்றன.

### இரண்டாம் பகுதி - விசுவாசிகளின் மன்றாட்டு விளக்கவுரை

எல்லாம் நிறைவேறியது என்று கூறி இயேசு தன் ஆவியை தன் தந்தையிடம் கையளித்து மரணமடைந்ததன் ஊடாக நம் அனைவரையும் தன்பக்கம் ஈர்த்துக் கொண்டார். அவர் எமக்காக எப்போதும் தந்தையிடம் வேண்டியவாறே இருக்கின்றார். இறையருள் வாழ்வை நிறைவாகப் பெற்று ஆன்மீ வாழ்வு வாழ தேவையான வரங்களுக்காக மன்றாடுவோம். சிலுவையில் தொங்குகின்ற நம் ஆண்டவர் இயேசு நம் வேதனையனைத்தையும் அறிந்தவராய் தன் தந்தையிடம் எமக்காக பரிந்து பேசி பெற்றுத்தருவார் என்ற உறுதிப்பாட்டோடு ஒரே உள்ளமும் மனமும் கொண்டவர்களாய் அனைத்துலக திருச்சபையுடன் நாமும் ஒன்றிணைந்து உலக மாந்தர் அனைவருக்காகவும் மன்றாடுவோம்.



### மூன்றாம் பகுதி - திருச்சிலுவை ஆராதனை: விளக்கவுரை

ஒரு சிலுவை மரணமானது ஒருவனுக்கு கிடைக்கின்ற அவமான அவலத் தீர்ப்பாக அமைந்துவிடுகின்றது. ஏனென்றால் பல்வேறு விதமான கொலைகாரர்களையும் துரோகிகளையும் இந்த அவமான சிலுவையிலேதான் தூக்கிலிட்டு கொலை செய்வர். ஆனால் இயேசு மனுக்குலம் ஈடேற்றம் பெற அதனை தன் தோளில் தூக்கி சுமந்த அதிலே தொங்கி இறந்து எமக்கு மீட்பை பெற்றுத்தந்ததன் ஊடாக இந்த சிலுவை மீட்பின் கருவியாக மாறி வெற்றியின் சின்னமாக உருப்பெற்று மகிமை பெற்றதை நாம் காண்கின்றோம். இடறலாக இடுக்காக இருந்த இந்த சிலுவை வாழ்வின் ஊற்றாக உருப்பெறுகிறது. நாம் ஆன்ம வாழ்வு பெற இயேசு சிலுவையில் ஏற்றப்பட்டு தொங்கவிடப்பட்டார். எனவே ஆண்டவர் இயேசு அள்ளித்தந்த அருளிலும் மீட்பிலும் இரட்சணியத்திலும் முழுமையாக பங்குபெற இந்த திருச்சிலுவையை முத்தமிட்டு ஆராதிப்போம். ஆண்டவர் இயேசுவோடு ஒன்றாக இணைவோம்.

### நான்காம் பகுதி - நற்கருணை திருவிருந்து

நமக்காக தன்னைப் பிட்டு, உடைத்து, இரத்தம் சிந்தி பலியான ஆண்டவர் இயேசுவின் ஈடு இணையற்ற தியாகப் பலியானது ஒருமுறை மட்டும்தான் இடம்பெறும் என்பதை நமக்கு நினைவூட்ட இன்று உலகில் எத்திசையிலும் திருப்பலி இடம்பெற மாட்டாது. நற்கருணை விருந்து மட்டுமே இடம்பெறும். எனவே இந்த தியாகப்பலி உணவை உட்கொண்டு ஆன்மீக ஊட்டம் பெற்று இறையருள் நிறைவாகப் பெற்று தூய தியாக வாழ்வு வாழ்வோம்.

### பெரிய வெள்ளி வழிபாட்டுக்கு ஆயத்தம் செய்ய வேண்டியவை

ஆலய முற்றத்தில் செந்நிற திருவுடைகள், கிறிச்சான் (மரமணி), திருப்பலிப் பீடம் முற்றிலும் வெறுமையாக இருக்கும். பூசைப் புத்தகம் வைக்கப்பட்டிருக்கும் பட்டுத்திரையின்றி தேவநற்கருணைப் பேழை திறந்திருக்கும் வாசக மேடை மீது திருப்பாடுகளை வாசிப்போருக்கு மூன்று வேதாகம புத்தகங்களும் சிறிய மேசையின் மீது திருமேனித்துகில், நற்கருணைத்தட்டு என்பன வைக்கப்பட்டிருக்கும். பீடத்திற்கு முன்னால் சிறிய விரிப்பு விரிக்கப்பட்டு தலைய்ணையும் வைக்கப்பட்டிருக்கும். திருப்பண்ட அறையில் பெரிய சிலுவை எளிதாக அகற்றக்கூடிய வகையில் வெள்ளை அல்லாத ஊதா துணியால் மூடப்பட்டிருக்கும். முத்தி செய்வதற்கு தேவையான திருச் சிலுவைகள், உண்டியல், துடைக்க வெள்ளைத் துணிகள் என்பன வைக்கப்பட்டிருக்கும்.

## ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு விழா

### பாஸ்கா திருவிழிப்பு

### திருப்பலிக்கு முன்னுரை

உலகில் உண்மையும் நீதியும் உயர்ந்து நிலைபெறும் என்பதை நிரூபித்து சாவினை வென்று வெற்றி வீரனாய் ஆண்டவர் இயேசு உயிர்த்த திருநாளை பெருநாளாக இன்று நாம் கொண்டாடுகின்றோம். இந்த உயிர்ப்பு விழா ஒரு மகிழ்ச்சியின் விழாவாக அகிலம் முழுவதும் அக்களிப்புடன் கொண்டாடப்படுகின்றது. சாவின் கொடுக்கு முறிந்திட மானிட வாழ்க்கைக்கு பொருள் சொன்ன இந்த வெற்றிவிழாவில் மறையுடலாம் திருச்சபை மகிழ்ச்சியால் நிரம்பி வழிகின்றது. பகைமையை அழித்து மாநிலத்திற்கு மன அமைதியை சமாதானத்தை கொணர்ந்த இயேசு இன்று எம் பிளவுபட்ட பகைமை நிறைந்த நம் நாட்டிற்கு சமாதானத்தின் தூதுவர்களாக எம்மை மாறும்படி அழைத்து நிற்கின்றார். இயேசு எமக்கு அளித்த விடுதலைக் கீதத்தை வீதியெங்கும் பறைசாற்றி எம் உறவு விரிசல்களை நெருக்கமாக அழைத்து நிற்கின்றார். இயேசுவின் உயிரப்பை நம் வாழ்வனுபவமாக்கி நம் உள்ளங்களிலும் இல்லங்களிலும் விசேடமாக எம் நாட்டிலும் இருள் அகற்றி ஒளியேற்றும் மக்களாக மாறுவோம்.

இன்றைய வழிபாடானது நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 1. ஒளி வழிபாடு 2. இறைவாக்கு வழிபாடு 3. திருமுழுக்கு வழிபாடு 4. நற்கருணை வழிபாடு

### முதல் பகுதி - ஒளி வழிபாடு

இந்த தூய இரா வழிபாட்டில் முதல் வழிபாடாக ஒளி வழிபாடு அமைகின்றது. நானே உலகின் ஒளி என்று கூறி தன்னை பின்செல்லும் படி கூறிய ஆண்டவர் இயேசு சாவை வென்று உயிர் பெற்றதை நினைவுகூருமுகமாக பாஸ்கா திரியானது புதிய நெருப்பிலிருந்து ஏற்றப்படுகின்றது. பாஸ்கா திரி இயேசுவின் திரு உடலையும் சுடர்விடும் இந்த ஒளி அவரின் உயிரையும் சுட்டிக்காட்டுகின்றது. இயேசுவின் அன்பு ஒளி புதிய அன்புறவுகளை நம் மத்தியில் மலரவிட அந்த ஒளியாம் நம் ஆண்டவர் இயேசுவிடம் வேண்டுவோம். இதனைத் தொடர்ந்து குருவானவர் பாஸ்கா திரியை புதிய நெருப்பிலிருந்து ஏற்றி கிறிஸ்துநாதர் முதலும் முடிவுமாக அகரமும் நகரமுமாக இருக்கின்றார். காலங்களை எல்லாம் கடந்தவர் என்பதையும் எடுத்துக்காட்டும் முகமாக பாஸ்காத் திரியில் அல்பா, ஒமேகா என்ற கிரேக்க எழுத்தையும் நிகழும் ஆண்டையும் எழுதுவார். பாஸ்கா திரியில் பதிக்கப்படும் ஐந்து சாம்பிராணி மணிகள் கிறிஸ்துவின் ஐந்து மகிமையான காயங்களைக் குறிக்கின்றன.

இதனைத் தொடர்ந்து பாஸ்கா பவனி இடம்பெறும். இறைஒளி தொடர்ந்துவரும் நாட்களில் நம்மை நிரப்ப மன்றாடி குருவானவர் பாஸ்கா திரியை கையிலேந்தி கிறிஸ்துவின் ஒளி இதோ என மும்முறை பாட நாம் அனைவரும் இறைவா உமக்கே நன்றி என்று பாடியவாறு பாஸ்கா திரியிலிருந்து பற்றவைக்கப்பட்ட திரிகளுடன் குருவைத் தொடர்ந்து ஆலயத்திற்குள் நுழைவோம். இந்த ஒளியானது நம் உள்ளங்களையும் இல்லங்களையும் நிரப்பி வழிகாட்டுவதாக. *(தொடர்ச்சி 12ம் பக்கம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதவார வழிபாடுகள் பற்றிய விளக்கம்

11ம் பக்கத் தொடர்ச்சி

**பாஸ்கா புகழுரை**

செங்கடல் வழியாக இறைவன் இஸ்ராயேல் மக்களை மீட்டெடுத்ததன் ஊடாக மனிதனின் மீட்பு உறுதிப்படுத்தப்பட்டது. மனிதனின் பாவ இருள்நீக்கி அவனுக்கு ஒளிவாழ்வு அளிக்க வந்தவர்தான் ஆண்டவர் இயேசு. இந்த மெழுகுவர்த்தி அந்த ஒளியான இறைவனை குறித்துக் காட்டுகின்றது. இனிமேல் மனிதன் பாவ இருளில் தத்தளிக்கத் தேவையில்லை. மாறாக கிறிஸ்துவின் மீட்பின் ஒளியிலே அவனுடைய மீட்பு உறுதிப்படுத்தப்படுகின்றது. இந்த வெற்றிகரமான கருத்தை உள்ளத்தே கொண்டு ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவை புகழ்ந்து போற்றுகிறான். இதை நாங்கள் பாஸ்கா புகழுரையிலே காணுகின்றோம் நம் கைகளிலே எரியும் திரிகளை ஏந்தியவாறு இதற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் பகுதி: இறைவாக்கு வழிபாடு**

அன்று இஸ்ராயேல் மக்களின் வாழ்க்கை வரலாற்றில் செயற்பட்டு அவர்களின் மீட்பு வாழ்வுக்கு செயல்வ்டிவம் கொடுத்த இறைவன் இன்றும் நம் ஆண்டவர் இயேசுவின் மூலமாக தொடர்ந்து செயற்படுகின்றார் என்ற விசுவாசத்துடன் வாசகங்களுக்கு செவிமடுக்க நம் கைகளில் காணப்படும் எரிகின்ற திரிகளை அணைத்து விடுவோம். ஒவ்வொரு வாசக முடிவிலும் பாடலின் பின்பு அனைவரும் எழுந்து நின்று குருவுடன் சேர்ந்து செபிப்போம். பழைய ஏற்பாட்டு வாசகங்களைத் தொடர்ந்து ஒளியின் வரலாற்றை இறைவார்த்தையூடாக கேட்போம். ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு மகிழ்ச்சியால் நிரப்பப்பெற்று உன்னதங்களிலே என்ற பாடலை ஆலய மணிகள் ஒலிக்க உள்ளம் மகிழ்ச்சியால் மலர பாடுவோம்.

(இன்று பழைய ஏற்பாட்டிலிருந்து 7 வாசகங்களும் புதிய ஏற்பாட்டிலிருந்து இரண்டு வாசகங்களுமாக 9 வாசகங்கள் வாசிக்கப்படும். ஆனால் தேவை ஏற்படின் பழைய ஏற்பாட்டில் இரண்டு வாசகங்கள் குறைக்கப்படலாம். ஆனால் *செங்கடலைக் கடத்தல் இன்றைய வழிபாட்டின் முக்கியம் என்பதால் அந்த வாசகம் கட்டாயம் வாசிக்கப்பட வேண்டும்.*)

1ம் வாசகம் – தொ.நூ . 1:1–2:2 அல்லது 1:1, 26–31, படைப்பின் வரலாறு
2ம் வாசகம் – தொ.நூ . 22:1–18 அல்லது 22:1,2,9,10–13,15–18, ஆபிரகாம் ஈசாக்கை பலியிடுதல்
3ம் வாசகம் – விடு. பயணம். 14:15–15:1 செங்கடலைக் கடந்த வரலாறு
4ம் வாசகம்– எசாயா. 54:5–14, புதிய ஜெருசலேம்
5ம் வாசகம் – எசாயா. 55:1–11 , அனைவருக்கும் மீட்பு அருளப்படுகின்றது
6ம் வாசகம் – பாரூக். 3:9–15 32:4,4, ஞானத்தின் ஊற்று
7ம் வாசகம் – எசேக்கியேல். 36:16–28, புதிய உள்ளம் புதிய மனப்பாங்கு
8ம் வாசகம் – உரோமர். 6:3–11, நாம் கிறிஸ்தவர்கள் என்பதால் கிறிஸ்துவின் மரணத்திலும் உயிர்ப்பிலும் உரிமையுடன் பங்கு பெறுகின்றோம்.
9ம் வாசகம் : நற்செய்தி – லூக்கா. 24:1–12, சிலுவையில் அறையுண்டு அடக்கம் செய்யப்பட்ட இயேசு தாம் முன்னறிவித்த படியே மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.

**மூன்றாம் பகுதி - திருமுழுக்கு வழிபாடு**

இப்போது புனிதர்களின் பிரார்த்தனை பாடப்படுகின்றது. குருவானவர் புதிய நீரை மந்திரிக்கின்றார் குரு பாஸ்கா திரியை நீர்த்தொட்டியினுள் வைத்து ஞானஸ நானத்தால் கிறிஸ்துவுக்குள் அடக்கம் செய்யப்பட்ட அனைவரும் அவரோடு வாழ்விற்கு உயிர்த்தெழ வேண்டுமென்று செபிப்பார். இந்த தூய இரவில்தான் ஆதிக் கிறிஸ்தவ மக்கள் திருமுழுக்கு பெற்றனர். ஆதியிலே ஆலயத்தில் நடுவில் காணப்பட்ட தொட்டிக்குள் இறங்கி அந்த நீரில் மூழ்கி எழுந்து வருவதன் ஊடாக அவர்கள் இயேசுவோடு மரணித்து புதைக்கப்பட்டு உயிர்க்கின்றார்கள் என்பதை நினைவுபடுத்தினர். எனவே நாங்களும் அதே மரணம் உயிர்ப்பில் பங்காளி களாகின்றோம் என்ற உறுதிப்பாட்டுடன் எங்கள் திருமுழுக்கு வாக்குறுதிகளை புதுப்பிக்க எம் கைகளில் எரியும் திரிகளை ஏந்துவோம்.

**நான்காம் பகுதி: நற்கருணை வழிபாடு**

காணிக்கை ஈன்றாட்டிலிருந்து நற்கருணை வழிபாடு ஆரம்பமாகின்றது. இறை மக்களாகிய நாம் அனைவரும் அண்டவர் இயேசுவின் மரணத்திலும் உயிர்ப்பிலும் மெய்யாகவே பங்கு பெறுகின்றோம் என்ற ஆழ்ந்த விசவாச நம்பிக்கையுடன் தொடர்ந்தும் திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

பாஸ்கா திருவிழிப்புக்கு ஆயத்தம் செய்ய வேண்டியவை :

கோயில் முற்றத்தில் எரியும் நெருப்பு, அலங்கரிக்கப்பட்ட பாஸ்கா திரி, சிறிய வாசக மேடை. திருப்பலித் திருவுடைகள் வெள்ளை அல்லது பொன்நிறம், பவனிச் சிலுவை, தூபக் கலசம், சாம்பிராணித் தட்டு, ஐந்து சாம்பிராணி காய்கள், பூசைப் புத்தகம், எழுத்தாணி, பவனியாளர் பயன்படுத்த மெழுகுதிரிகள். பீடம் வழக்கம் போல அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்கும். திரிகள் ஏற்றப்படாமல் தயாராக பீடத்தில் வைக் கப்பட்டிருக்கும். பீட முற்றத்தில் பாஸ்காத் திரியை வைப்பதற்கென அலங்கரிக்கப்பட்ட தண்டு வைக்கப்பட்டிருக்கும். அத்தடன் அலங்கரிக்கப்பட்ட பெரிய பாத்திரத்தில் தண்ணீர் வைக்கப்பட்டிருக்கும். வாசக மேடை வழக்கம் போல அலங்கரிக்கப் பட்டிருக்கும். வசதியான இடத்தில் உயிர்த்த இயேசுவின் திருச்சொரூபம் அலங்கரிக்கப்பட்டு திரையிடப்பட்டிருக்கும். சிறிய மேசையில் வழக்கம் போல திருப்பலிக்குத் தேவையான எல்லாப் பொருட்களும், திரு எண்ணெய்கள், கை கழுவத் தண்ணீர்ப் பாத்திரம், திருமுழுக்குத் திருச்சடங்கு நூல், சோப்பு, துவாய், தீர்த்தச் செம்பு போன்றனவும் வைக்கப்பட்டிருக்கும்.

## உயிர்ப்பு ஞாயிறு

ஆண்டவர் இயேசு வெற்றி வீரனாய் உயிர்த்தெழுந்ததை பெருவிழாவாக இன்றைய காலை வழிபாட்டில் நினைவுகூர்ந்து கொண்டாடுகின்றோம். உயிர்த்த ஆண்டவர் இயேசுவைக் குறிக்கும் அடையாளமாகிய பாஸ்கா திரியானது இன்று முதல் பாஸ்கா காலம் முழுவதும் முக்கிய வழிபாடுகளின் போது ஏற்றிவைக்கப்படும். அல்லேலூயா கீதம் இன்றுமுதல் பாடப்படும்.

**முதல் வாசகம் - தி.தூ.ப 10:34[a], 37-43**

திருத்தூதர் பணியில் இருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதலாம் வாசகத்திலே இராயப்பர் (பேதுரு) கொர்னேலியவின் இல்லத்தில் ஆற்றிய உரையிலே கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு சாட்சியம் பகர்கின்றார்.

**இரண்டாம் வாசகம் - கொலோ 3:1-4, அல்லது கொரி. 5:6-8**

இரண்டாம் வாசகம் உயிர்த் இயேசுக்கிறிஸ்துவே நம் அனைவருக்கம் வாழ்வு அளிப்பவர் என்று கூறுகின்றது.

**நற்செய்தி வாசகம் - யோவான் 20:1-9 அல்லது லூக்கா 24:1-12**

மதலேன் மரியாள் சீமோன் பேதுருவிடமும் மற்ற சீடரிடமும் இயேசு உயிர்த் தெழுந்தார் என அறிவித்தல்.

# மறைக்கல்வி பயிற்சி

**செல்வி. இ. சில்வியா,** *மறையாசிரியர் பயிற்சியாளர் , சங்கானை*

"உலகெல்லாம் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்" என்ற கிறிஸ்துவின் அழைப்பை எதிரொலிக்கும் எந்தக் குரலும், அக்குரல் எழும்ப மேற்கொள்ளும், செய்யும் எம்முயற்சியும் மறைக்கல்வியே, வெறும் ஆன்மீக, தத்துவ கருத்துக்களை வலியுறுத்துவதோடு மட்டும் நின்றுவிடாது, மனித வாழ்க்கை முழுவதிலுமே நீக்கமற நினைந்து, கிறிஸ்தவ வாழ்வின் பல்வேறு பரிமாணங்களை, மாதிரிகளை உருவாக்கும் கல்வியே மறைக்கல்வி. இறைவன் திருவருள் நமக்கென அளித்ததும் திருச்சபை அளிக்க நாடுவதுமான நிலையான உண்மையின் பொருளடக்கத்தையும் அதன் அறிவுரைகளையும் பிறருக்கு எடுத்துக் கூறும் பணி மறைக்கல்விப் பணியாகும். இப்பணி காலத்திற்கும், இடத்திற்கும், மனித வாழ்விற்கும் அப்பாற்பட்டு அந்தரத்திலே, அறிவுலகிலே நின்றாடும் கல்வியாக இல்லாமல் மனிதனோடும், அவன் வாழும் சமுதாயத்தோடும் ஒட்டி உறவாடுவதாக அமையவேண்டும்.

இதற்கேற்ப இவ்விசுவாச விருட்சம் இலங்கையில் வாழும் சிறப்பாக யாழ். மறைமாவட்ட மக்களின் தற்போதைய போர்க்காலச் சூழலிலும், புலர்ந்துவரும் புதிய மனிதயியல் கண்ணோட்டத்தின் மத்தியிலும், இயேசுவின் மனநிலையோடு அவர் கண்ட இறையரசின் மதிப்பீடுகளுக்கு சான்று பகரும் விசுவாச உறுதிப்பாட்டை உருவாக்கி நல்லதொரு கிறிஸ்தவ சமுதாயத்தை எம்மத்தியில் கட்டியெழுப்பும் நோக்குடனும் எமக்கு ஞானஸ்நானத்தால் ஊன்றப்பட்ட விசுவாசமென்னும் விதை முளைத்து, தளிர்த்து, வளர்ந்து, பூத்து, காய்த்து, கனிந்து பலருக்கு பலன் கொடுப்பதற்காக தங்களை பலவழிகளில் முழுமையாக அர்ப்பணித்த மறையாசிரியர்கள் பெரும் பேறுபெற்றவர்களே. அந்த வகையில் நாட்டின் பல்வேறுபட்ட தேக்க நிலையிலும் செயலற்ற சூழ்நிலையிலும் இவ்வாண்டின் மறைப்பயிற்சிக்கென பல்வேறு இடங்களிலிருந்தும் தம்மை முழுமையாக அர்ப்பணித்து நிறைவான மறையறிவைப் பெறவும் பெற்ற அறிவை தம் வாழ்வாலும், வார்த்தையாலும் சான்றுபகரவும் அழைக்கப்பட்டவர்கள் பெருமைக்குரியவர்களே, அதன் வரியில் இப் <u>*பாசறைப் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டவர்களின் விபரம் வருமாறு :*</u>

1) இரட்ணசிங்கம் பிறிக்சி சில்வியா, சில்லாலை (சங்கானை) 2) சிறிஸ்கந்தராஜா ஸ்ரீபிரியா சென். பெனடிக்ற், (அரியாலை) 3) யோகேஸ்வரன் மேரிறொசானி, ஊர் காவற்றுறை (நயினாதீவு) 4) மதியாபரணம் லூட்ஸ்மேரா, நெடுந்தீவு 5) ஜோண் தர்சினி, பண்டத்தரிப்பு (மாகியப்பிட்டி) 6) அருள்நாயகம் அமலராஜேஸ்வரி, நெடுந்தீவு 7) சேவியர் மேரியூட்ஸ், ஊர்காவற்றுறை 8) நந்தகுமார் கோல்டின் திரேசா, மணற்காடு 9) நீக்கிலாப்பிள்ளை யூஜின் யூக்கரெஸ்ரா, அச்சுவேலி 10) அலோசியஸ் ஜக்குலின் நந்தா, அச்சுவேலி (சிற்றம்பலபுரம்) 11) பேதுருப்பிள்ளை மேரி அன்ரனிற்றா, ஊர்கா வற்றுறை (எழுவைதீவு) 12) சுவாம்பிள்ளை ஜெயவதி,உரும்பிராய் (பரிசயப்புலம்) 13) மரியதாஸ் ஜெஸ்மின், நாரந்தனை (அல்லைப்பிட்டி) 14) மருசலீன் மரிய ஜெஸ்ரினா, முகமாலை (மேற்குப்பளை) 15) ஜோசப் புவிராஜசிங்கம் மரியலோஜினி, கரவெட்டி 16) அகஸ்ரின் ரின்சா, சில்லாலை (பண்டத்தரிப்பு) 117) மரியதாஸ் கெலன் தர்சினி , பருத்தித்துறை 18) சில்வெஸ்ரர் வனஜா, மணற்காடு (குடத்தனை) 19) மரியநாயகம் மரிந்தா மீனா, சில்லாலை (பண்டத்தரிப்பு) 20) சிங்கராயர் ஜொய்சி அருள்வதனி, பருத்தித்துறை 21) குருசுமுத்து தேவபிரபா, திருநெல்வேலி (கொக்கு வில்) 22) அ. எ. எனிஸ்ரன் பர்னாண்டோ பிரமிளா, கார்மேல் கன்னியர்மடம் (பருத்தித்துறை) 23) அருமைநாதன் கிருஷாந்தினி, யாழ்ப்பாணம் (சுண்டிக்குளி 24) பதுவைநாயகம் அன்ரன் கிருபைநாயகம், நவாலி.

*மேற்படி பயிற்சியாளர்கள் யாழ். மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் ஆர். சி. எக்ஸ். நேசராஜா அடிகளின் தலைமையிலும், மறையாசிரியர் எஸ். எவ். சவுந்தரம் அவர்களின் வழிகாட்டலின் போரிலும் 14.02.2001 அன்று பயிற்சியாளர்கள் வரவேற்கப்பட்டு குருமுதல்வர் ஜே. பி.ஈ. செல்வராஜா அடிகளால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.* ஆரம்ப நாளாகிய அன்று றெக்ஸ் கொன்ஸ்ரைன் அடிகளின் வழிகாட்டலில் குழு ஆய்வு நடத்தலுடன் மறைப்பயிற்சி ஆரம்பமானது. அன்றிலிருந்து இன்றுவரை <u>*கற்பிக்கப்படும் பாடநெறிகள் விபரம் வருமாறு.*</u>

1) மறையாசிரியர் அழைப்பு 2) மறைக்கொள்கை 3) மறையாசிரியர்களுக்கான மறைக்கல்வி 4) மறைப்போதனா முறை 5) மறைக்கல்வி 6) அருட்சாதனம் 7) வேதாகமம் (பஞ்சாகமம்) 8) வேதாகமம் (திருப்பாடல்கள்) 9) உளவியல் 10) திருமுகம் 11) ஒத்தமை நற்செய்தி 12)ஆன்மீகம் 13) கிறிஸ்தவ நன்னெறி 14) திருவழிபாடு 15) திருமணச்சட்டம் 16) புகுமுக அருட்சாதனம் 17) வத்திக்கான் சங்கத்தில் பொதுநிலையினர் பணி 18) திருத்தூதர் பணி 19) மறைக்கல்வி பாடல்கள் 20) தலைமைத்துவம் 21) உலக திருச்சபை வரலாறு 22) மறைவாழ்வுக் கல்வி 23) இலங்கைத் திருச்சபை வரலாறு 24) வயதிற்கேற்ற மறைக்கல்வி

விசுவாசத்தைப் போதிக்கும்முறை தனித்தன்மையுடையது. அத்தனித்தன்மை காக்

*(தொடர்ச்சி 10ம் பக்க்ம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வது நானல்ல!

4ம்பக்க தொடர்ச்சி..

## உங்கள் வாழ்வில் உயிர்த்த கிறிஸ்து...



ஆண்டவரின் உயிர்ப்பை நான் கருதி வந்தேன். வீறுகொண்டெழும் ஆண்மைக்கு ஒரு சவால்தான் கிறிஸ்துவின் உயிர்ப்பு. ''உன் ஆசைகளையும், இவ்வுலகையும் வென்றுவா! அப்பொழுதுதான் நீ என்னோடு மரித்து, உயிர்ப்பாய்'' என அறைகூவல் விடுக்கின்றார், ஆண்டவர். இருபதாம் நூற்றாண்டு இளைஞர்கள் ஆற்றவேண்டிய பணிகள் ஏராளம்! ஏராளம்! யான் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறுக என்ற பரந்த நோக்கோடு இயேசுவைப் பின்பற்றி அதிகம் அறிந்த மாணவரும், மாணவியரும் அவர்கள் அறிந்த அளவிற்கு மற்றவர்களும் அறிய செயல்படவேண்டும்.

இடையே புகுந்தேன். ''ஏது, ஏது! ஒரு குருவாகியிருந்தால் ஒரே மறையுரையில் பொதுமக்களையெல்லாம் அப்படியே மகுடியின் வயப்பட்ட பாம்பைப்போல் நிற்கச் செய்துவிடுவாய் போலிருக்கே'' என்றேன். அதற்கு அவர் ஒன்றும் பதில் கொடாமல் மீண்டும் உற்சாகத்தோடு தொடர்ந்தார். நான் ஏன் இளைஞர்களைப் பற்றிச் சொல்கிறேன் என்றால், என் தங்கை என்னிடம் ஒருநாள் ஒரு சுபசெய்தியைக் கூறினாள்: நான் கன்னியராகப் போகிறேன் என்று, பின் அவளை நான் கன்னியர் நிலையில் கண்டபோது என் கண்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தன! என் அன்புத் தங்கையே! உன்னை இந்த வெண்ணிற ஆடையில் காண்பது பற்றி பெருமைப்ப டுகின்றேன். நித்திய வாழ்வை நீ அடைய மேற்கொண்டுள்ள உன் பணியை நான் பெரிதும் பாராட்டுகின்றேன். ஆனால் ஒன்றே ஒன்று. உன்னால் கன்னியர் என்ற நிலையில் கடைசிவரை நிலைத்திருக்க முடியுமா! என்பதை மீண்டும் ஒருமுறை சிந்தனை செய். ஏனெனில் கன்னியரின் உடையில் நீ களங்கமாய் இருப்பதைவிட இல்லறத்தில் நீ இறைவனின் மகளாக இருப்பதையே நான் பெரிதும் விரும்புகிறேன்! என்றேன். என் எண்ணங்களைப் புரிந்துகொண்ட என் ''தங்கை கவலைப்படாதீர்கள் அண்ணா! நான் தனியாகச் செல்லவில்லை, உயிர்த்த இயேசுவும் என்னோடு வருகிறார்'' என்றாள்.

ஆம்! எத்தனையோ மாணவ மாணவியரின் இளமைக் கனவுகளெல்லாம் நாமும் ஒருநாள் குருவாக கன்னியராக மாட்டோமா என்பதே. அந்த ஏக்கத்திற்கு கருப்பொருள்தான் கிறிஸ்துவின் உயிர்ப்பு. நாமும் அவரோடு வாழவேண்டும் அவரோடு ஒன்றிக்க வேண்டும் என்ற எண்ணம் எத்தனையோ இளைஞர்களின் இதயங்களில் பதிந்துகிடக்கின்றது. நான் என் வாழ்வில் தாழ்ந்த நிலையிலும், ஓரளவு உயர்ந்த நிலையிலும் கிறிஸ்துவின் உயிர்ப்பை நினைத்துக் கொள்கிறேன். அந்த நினைவுதான் நான் இன்றைய ''நானாக'' இருப்பதற்குக் காரணம்'' என்று விதத்தில் முக்கிய இடத்தை பெறுகின்றது என்று விளக்கிய அவரிடம் நன்றி கூறிவிட்டுப் புறப்பட்டேன்.

அன்றிரவு எனக்குத் தூக்கம் வரவில்லை. இது என்ன கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையைப்போல் ஆகிவிட்டதே. அலட்சியமாக மனிதர்களை நான் எண்ணப் போக அவர்கள் ஒவ்வொருவரும் இயேசுவையே கரைத்துக்குடித்து விட்டவர் போலப் பேசுகின்றார்களே! ஒருகால் இயேசுவே அவர்களுக்குள் புகுந்து இத்தகைய அரும்பெரும் கருத்துக்களை வாரி வழங்கினாரோ என்று பலவாறாக எண்ணினேன். ''நான் நானாக இருப்பதற்கு இயேசுவின் உயிர்ப்பே காரணம்''.. எத்தனை இரத்தி னமாகச் சுருக்கமாகக் கூறிவிட்டார். எனினும் என்னுள் இன்னுமொரு ஆவல். இன்னு மொரு கன்னியரையும் தேடிப்பிடித்துச் சோதித்து விடுவோமா! என்ன எல்லோரும் ஒரே மாதிரியாகவா இருக்கப் போகிறார்கள்!, எனவே அடுத்தநாள் மற்றொரு கன் னியர் மடம் நோக்கிச் சென்றேன். அந்த கன்னியரைக் கண்டதும் வணக்கம் சொல்லும்போதே அவர்களது கூர்ந்த பார்வை எனக்குக் காவேரிக் கரையிலே நின்ற கவிஞனை நினைவூட்டியது. அதற்கேற்றபடியே ஆவலோடு நான் கேட்ட கேள்விக்கு மடைதிறந்த வெள்ளம்போல பதில் வந்தது.

''கண்ணைக்கவரும் வண்ணமலர்கள் மலர்கின்றன, எத்திக்கும் மணம் வீசி வனப்புடன் மிளிர்கின்றன. ஒருநாள் காய்ந்துபோனால் அவை மீண்டும் மலர்வதில்லை. அதோடு அதன் வாழ்க்கை முடிந்துபோகின்றது. விண்ணை எட்டும் அளவிற்குப் பறந்து திரியும் வண்ணப் பறவைகள் ஒருநாள் தன் சிறகை ஒடுக்கி இறந்துவிட்டால் அவை மீண்டும் எழுந்து பறப்பதில்லை. ஆறறிவு படைத்த மனிதன் பிறக்கின்றான், வளர்கின்றான், வாழ்ந்து மண்ணோடு மண்ணாகின்றான். அவன் மீண்டும் பிறப்பதில்லை. ஆற்றல் மிக்கவன் அலெக்சாண்டர், வல்லமை நிறைந்தவன் நெப்போலியன், பக்தியின் முக்தியை அடைந்தவர் மகாவீரர் என்னும் தத்துவஞானி சாக்ரடீஸ், விண்வெளி சென்று திரும்பிய வீரர்கள், அறிவியல், நிலவியல், வானவியல், கணிதவியல் போன்ற அனைத்திலும் சிறந்துவிளங்கிய மாமேதைகள் அனைவரும் மாண்டனர். மீண்ட னரா?'' இல்லை. மாண்டவர் மாண்டவரே. மீண்டும் எழ அவர்களிடம் ஆற்றல் இல்லை. உலகில் வாழும்போது தங்கள் ஆற்றலினால் மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட இவர்கள், இன்னும் கடவுள் இல்லையென்று சவால்விட்ட ஈ.வே.ரா. பெரியார் போன்றவர்களின் ஆற்றலும் சக்தியும் இப்பொழுது எங்கே? மீண்டும் அவர்களால் செயலாற்ற முடிந்ததா?''.. முடியவில்லை. இது இயற்கை நியதி. இந்த இயற்கை நியதிக்கும் அப்பாற்பட்ட சக்தியைக் கொண்ட இறைமகன் இயேசு இதைப் பொய்யாக்கிவிட்டார்.

கிறிஸ்து உயிர்த்தார். ஒளி இழந்து, களை இழந்து, அழகிழந்து, ஆற்றலற்று அடக் கம் செய்யப்பட்ட அவர் உடல் செகசோதியாய், மீண்டும் உயிர்பெற்று எழுந்தது. அவர் உயிர்த்தது உண்மை. நீங்களும், நானும் இந்நேரத்தில் உயிருடன் வாழ்வது எத்தனை உண்மையோ அத்தனை உண்மை கிறிஸ்து உயிர்த்தார் என்பதும், இதைத்தான் புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் ''நான் பெற்றுக்கொண்ட தும் முதன்மையானதானதாக உங்களுக்குக் கையளித்ததும் எதுவெனில், மறைநூலில் உள்ளபடி, கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக இறந்தார். அடக்கம் செய்யப்பட்டு, மறைநூலில் உள்ளபடியே, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்'' ( கொரி. 15:3–4) என்று எழுதியிருக்கின்றார்.

அவர்களது வீராவேசத்தைப் பார்த்து நானே ஒருகணம் பயந்துவிட்டேன். இவர்கள் என்ன வேதசாட்சிகளின் வாரிசாக இருப்பார்களோ என்று எண்ணிய நான் அவர்களிடம் ''சிஸ்டர்! உங்கள் வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி ஏதாவது சொல்லுங்க ளேன்'' என்றேன். ''ஓ! என் வாழ்வில் உயிர்த்த இயேசு, என்றல்லவா என்னிடம் கேள்வி கேட்டீர்கள்,'' என்று கூறி மீண்டும் சொல்மாரி பொழிய ஆரம்பித்தார். ''உயிர்த்த இயேசுவின் உடல் ஒரு தனிப் பொலிவுடனும் ஒளியுடனும் காணப்பட்டது. அவர் எங்கு வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் செல்லமுடியும், அவரைத் தடுத்து நிறுத்தக்கூடியது ஒன்றுமே இல்லை. சாவின் பிடியிலிருந்து வெற்றிபெற்ற கிறிஸ்துவைப்போல் நானும் இவ்வுலகப் பற்றுதல்களிடமிருந்து வெற்றி பெற்றால் அவரோடு எங்குவேண்டுமானாலும் செல்லலாம் என்பதை அவருடைய உயிர்ப்பு எனக்கு உணர்த்துகின்றது. என் வழியில் குறுக்கிடும் ஒவ்வொரு தடையும், என்னை இறைவன்பால் உந்தித்தள்ளும் கருவியாக அமைகின்றது. எனக்குத் துன்பம் வந்தால் அதை எனது பாவங்களுக்குப் பரிகாரம் ஒப்புக் கொடுக்க இயேசுவின் பாடுகள் எனக்குக் கற்பிக் கின்றன. சோதனைகள் வந்தால் நான் இயேசுவுக்குத்தக்க அன்பு செய்ய எனக்களிக்கப்பட்ட வாய்ப்பாகக் கருதி, அவைகளை ஏற்றுக்கொள்ளவும், அவைகளோடு போராடி வெற்றிபெறவும் கிறிஸ்துவின் இறப்பும்,உயிர்ப்பும் எனக்குக் கற்பிக்கின்றன.

அவருடைய எண்ணம் அனைத்தும் தந்தையைப் பற்றியதாகவே இருந்தது. அவர் மரிய மதலேனம்மாளுக்குக் காட்சியளித்த போது, ''என்னை இப்படிப் பற்றிக் கொள்ளாதே, ஏனெனில் நான் மேலெழும்பி என் தந்தையிடம் இன்னும் செல்ல வில்லை'' (அரு. 20:17) என்றார். அவ்வாறே நாமும் இவ்வுலகில் வாழ்ந்தாலும் கூட, நமது எண்ணங்கள் அனைத்தும் நமது நல்ல தந்தையைப் பற்றியதாகவே இருக்க வேண்டும். கிறிஸ்துவின் உடல் அவரது உயிர்ப்புக்குப் பின் ஒளிபெற்று விளங்கியது போல் அவரது சாயலைத் தாங்கியவர்களாக அவரது சாயலைத் தாங்கிய நாம், மற்ற சகோதரர்களுக்கு முன் ஒளியுள்ளவர்களாக வாழ வேண்டும். கிறிஸ்து தமது உயிர்ப்புக்குப்பின் தமது சீடர்களுக்குத் தோன்றியதெல்லாம் ''உங்களுக்குச் சமா தானம்'' என்றுரைத்தார். அதுபோல நாமும் எல்லோருக்கும் சமாதானத்தின் கருவியாக விளங்கவேண்டும்.

நாம் அனைவரும் கடவுளின் பிள்ளைகள். இயேசுவின் உடன் பிறந்தவர்கள், நமது வீடு வான் வீடு. எனவே நம்முடைய விருப்பு வெறுப்புக்களை எல்லாம் பொருட்படுத்தாது ''நானே வழி'' என்று கூறி நமக்கு நல்லதொரு முன்மாதிரிகை தந்த கிறிஸ்துவை நமது குடும்ப வாழ்விலும் பின்பற்ற முயலவேண்டும். உயிர்த்த இயேசு திவ்விய நற்கருணை மூலம் ஒவ்வொரு நாளும் என்னுடன் இணையும்பேது, என்னையறியாமலேயே என் துன்பங்களை மறந்து ஒருவித அமைதியை அடைகின்றேன். எனது வாழ்வைத் தொடர்ந்து ஒருவித சக்தியைப் பெறுகின்றேன். எனது தனிமையை மறந்து ஒருவித இணைப்பை, உறவைப் பெறுகின்றேன்.

என்ன அருமையாகக் கிறிஸ்துவக் குடும்பத்தின் உயிர் நாடியே உயிர்த்த இயேசுதான் என்று கூறிவிட்டார்கள்! ''அண்ணல் இயேசுவின் பாதையில் செல்ல அனைவரும் வாரீர்'' என்ற அவர்களது அறைகூவலை அசைபோட்டுக்கொண்டே நடந்துகொண்டிருந்தேன். எதிரே ஓர் அக்காள் வந்தார்கள். அவர்களிடமும் என் கேள்வியைத் தொடுக்க விரும்பினேன். எனவே அவர்களையும் தடுத்து நிறுத்தினேன். ''ஏனக்கா! நேற்று நாம் கொண்டாடிய ஈஸ்டர் விழாவைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ஏன் வழக்கம் போல மிக நன்றாகத்தானே கொண்டாடினோம்'' என்று பதில் வந்தது. ''ஆம் அதனால்தான் கேட்கிறேன். வருடாவருடம் இப்படிக் கொண்டாடுகிறோமே ஏன்? பணம் செலவழிகிறது தானே மிச்சம். நமக்கும், இயேசுவின் உயிர்ப்புக்கும் என்ன சம்பந்தம்? அதாவது உங்கள் வாழ்க்கையை அது பாதிக்கின்றதா?'' என்று என் மனதில் இருந்ததையெல்லாம் கொட்டிவிட்டேன்.

அவர்களும் சிரித்துக்கொண்டே எனக்கு விளக்க ஆரம்பித்தார். ''கிறிஸ்துவின் உயிர்ப்பு நம் வாழ்க்கையில் பலவித பொருட்களை விளக்குகின்றது. உதாரணமாக என் வாழ்க்கையில் இறந்து மூன்று நாட்களுக்குப்பின் உயிர்த்த கிறிஸ்து, தன்னலத்தினால் இறைவனிடமிருந்து பிரிந்து, அலகையின் அடிமையாக வாழ்ந்த மக்களுக்கு இறைவாழ்வை, அதாவது மறுவாழ்வைக் கொடுத்தார் என்பதை நான் நன்கு உணர்கிறேன். தனது உயிர்ப்போடு மக்களுக்கு உயிர் கொடுக்க விரும்பிய கிறிஸ்து தம்மை ஏற்றுக் கொண்ட மக்களுக்குச் சமாதானத்தை அளித்தார். இறைவனோடு ஒன்றித்து வாழ விரும்புவார்க்கு, அவரைப் பின்தொடர விழைவோர்க்கு அவூர் அரசை அடைய விரும்புவோர்க்கு மட்டுமே இறைவனின் சமாதானம் அருளப்பட்டது, அருளப்படும் என்பதை இந்த உயிர்ப்பு எனக்கு உணர்த்துகின்றது.

இவ்வாறு, அமைதியை அருளும் சமாதானத்தைக் கொடுக்கும் கிறிஸ்துவின் உயிர்ப்பு நம்வாழ்க்கைக்கு வழி காட்டுகின்றதா என்ற கேள்வியும் சிலநேரங்களில் என்னுள் எழும். இன்னும் சில சமயங்களில் வாழ்க்கையில் வெறுப்பும் ஏற்படும். ஏன் மனதைக் கட்டுப்படுத்தி வாழ வேண்டும்? நம் விருப்பம்போல் வாழ்ந்தால் என்ன? மரணத்திற்குப்பின் வாழ்வு உண்டா? போன்ற வினாக்கள் என் உள்ளத்தில் பெரும் புரட்சியை ஏற்படுத்தும்போது கிறிஸ்துவின் உயிர்ப்பு எனக்கு புத்துணர்ச்சியையும், புதுமகிழ்ச்சியையும் தருவதோடு மட்டுமல்லாது என் வாழ்க்கையின் உண்மைப் பொருளையும் உணரச் செய்கின்றது. இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதனுக்கு உயிர்ப்பு உண்டு அதன் பின் அமையும் வாழ்வு நித்தியமானது என்பதனை உணர்த்தி என்னை நல்வழிப்படுத்துகின்றது இந்த கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா''.

*இன்னமும் எனக்கு நிம்மதி ஏற்படவில்லை. எனவே மேலும் கேட்டேன். ''என்னக்கா இது சுண்ணாம்பில் இருக்கு சுருக்கு'' என்பது போல ஒரேயடியாக நம் வாழ்வே அந்த உயிர்ப்பிலே தான் அடங்கியிருக்கென்று சொல்றீங்களே! என்றேன். அவர்கள் என்னைப் பார்த்து சிரித்துக்கொண்டே சென்றுவிட்டார்கள்.* ''தெரியாதவனுக்கு சொன்னாலும் புரியாது'' என்று நினைத்தார்களா! மீண்டும் சிந்திக்க ஆரம்பித்தேன். நான் முட்டாளா? இல்லை அந்த நால்வரும் முட்டாள்களா?'' ஒரேயடியாக இயேசுவைத் தூக்கி வைத்துப் பேசுகிறார்களே, அவர் அப்படி என்னதான் செய்துவிட்டார்?

அந்தோனியாரைப் போல அவர் என்ன காணாமல்போன பொருட்களைக் கண்டெடுத்துத் தருகின்றாரா? அல்லது செபஸ்தியாரைப்போல் அம்மை நோய் வராமல் தடுக்கின்றாரா? அல்லது மாதாவைப் போல்தான் புதுமைகள் பலபுரிகின்றாரா? என்னமோ அவர் வாழ்ந்தபோது புதுமைகள் பல செய்தாராம். இப்போது இயேசு ஒன்றும் காணோமே? எந்த ஊரிலும் இப்போது இயேசு புதுமைசெய்ததாக கூறப்படவில்லையே? பிறகு எப்படி அவர் உயிர்த்து நம்மோடு வாழ்கின்றார் என்று கூறமுடியும்? எந்தக் கோவிலிலாவது மாதாவைத் தொட்டு முத்திசெய்யும் மக்கள் உயிர்த்த இயேசு இருப்பதாகக் கூறப்படும் திவ்விய நற்கருணைப் பேழைக்கு ஒரு கும்பிடாவது போடுகின்றார்களா! எப்படிப் போடுவார்கள்? அவர்தான் புதுமை செய்வதில்லையே! இவ்வாறு என்னுடைய அறியாமைக்கு நானேசமாதானம் கூறிக்கொண் டேன்.

எனக்கு நானே கூறிக்கொண்ட சமாதானத்திற்குச் சவுக்கடி கொடுக்கும் நாள் ஒன்று வரும் என்று நான் கனவில்கூட நினைக்கவில்லை. நாட்கள் சில கடந்தன. இயேசுவின் திவ்விய இருதயத்தின் திருநாளும் வந்தது. வழக்கம்போல் காலையில் பூசைக்குச் செய்ய வேண்டிய பணிகளை செவ்வனே முடித்தேன். அன்று மாலை திருமணி ஆராதனை. திரு இருதயத்தின் பக்தர்கள் கோவிலில் கூடினர்.

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வது நானல்ல!

13ம் பக்க தொடர்ச்சி...

## உயிர்த்த இயேசுவே அனைத்திற்கும் அனைத்துமாய்...

திருமணி ஆராதனை. திரு இருதயத்தின் பக்தர்கள் கோவிலில் கூடினர்.

குருவானவரும் திருமணி ஆராதனையை துவக்கினார். இடையில் ''இயேசுவின் திரு இருதயத்திற்கு மனுக்குலத்தை ஒப்புக் கொடுக்கும் செபம்'' என்ற செபம் சொல்ல வேண்டிய நேரம் வந்தது. குருவானவர் அருகிலிருந்த பீடப் பணியாளரிடம் கையை நீட்டுகிறார். அவரும் அருகிலிருந்த புத்தகத்தை எடுத்து அவர் கையில் கொடுக்கின்றார். அப்பொழுதுதான் நான் உணர்ந்தேன் அந்த செபம் அந்தப் புத்தகத்தில் இல்லையென்று. எனக்குத் தெரிந்த வரையில் குருவானவரின் கையிலுள்ள புத்தகத்தில் தமிழில் தான் அந்தச் செபம் இருந்தது. ஆனால் வழிபாடு நடப்பது ஆங்கி லத்தில். எனவே ஆங்கிலத்தில் எழுதி வைக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்த நான் மறந்தே போய்விட்டேன். குருவானவரும் புரட்டிப்புரட்டிப் பார்த்து விட்டு இதில் தமிழில்தானே இருக்கின்றது என்று கூறித் திருப்பிக் கொடுத்து விட்டார். கோவிலில் இருந்த கண்கள் எல்லாம் என்னை நோக்கித் திரும்பின. என் கண்களோ நிலம் நோக்கித் தாழ்ந்துவிட்டன. அமைதி என் பயத்தை அதிகரித்தது. இடத்தை விட்டு எழுந்திருக்கவும் துணிவு இல்லை. குருவும் நான் வருகின்றேனா என்று எதிர்பார்க்கவும் தொடங்கிவிட்டார்.

உடனே மின்னல் வெட்டுப்போன்று ஒரு எண்ணம் பளிச்சிட்டது. ''உயிர்த்த இயேசு உண்மையிலே இந்த திவ்விய நற்கருணையில் இருந்தால் இந்த அவமானத்திலிருந்து என்னைக் காப்பாற்றட்டுமே!'' என்ன ஆச்சரியம்! பீடப் பரிசாரகர் மீண்டும் அதே புத்தகத்தை நீட்டுகின்றார். குருவானவர் வாங்கி ஆங்கிலத்தில் வாசிக்கின்றார். அதனை ஏறிட்டுப் பார்த்த என் கண்களை என்னால் நம்ப முடியவில்லை. நான் ஆண்டவருக்குச் சோதனை வைத்தேனா? ஒரு வினாடி நேரத்தில் நான் ஏன் இப்படி நினைத்தேன்? நினைத்த மறுகணத்திலேயே தன் வல்லமையை நிரூபித்துவிட்டாரே!

இப்பொழுது கூட சிலசமயங்களில் அது புதுமையா என்ற கேள்வி என்னுள்ளத்தில் எழும். உங்களுக்கும் இதுபோல எழலாம். புதுமைக்கு என்ன அளவுகோல் என்று எனக்குத் தெரியாது, பக்தனின் நிலையிலிருந்து கூறவேண்டு மானால் அது புதுமை! அங்கே திடீரென்று அந்த செபம் குதித்து வந்துவிடவில்லை. ஆனால் பீடப் பரிசாரகரும் குருவைப்போல அந்தப் புத்தகத்தை மூடிவைத்துவிட்டு என்னைத் திரும்பிப் பார்த்திருப்பாரானால் என்னுடைய மானம் அங்கேயே போயிருக்கும். மேலும் பல மாதங்கள் அந்தப் புத்தகத்தோடு பழகிய எனக்கே தெரியாத அந்த செபம், அதை முன்பின் புரட்டியிராத ஒருவருடைய கண்ணுக்கு ஒருநிமிடத்தில் பட்டது என்றால் அது புதுமையில்லையா? குருவானவரும் தேடிப்பார்த்து கைவிட்ட பிறகும் அதை இவர் முயற்சி எடுத்துத் தேட எத்தனித்தாரே அது புதுமையில்லையா? எனவே இயேசு புதுமையும் செய்கிறார்.

நான் ஏன் ''புதுமையும்'' செய்கின்றார் என்று கூறுகின்றேன் என்றால் மேலே கூறியுள்ள நால்வரின் கருத்துக்களையும் நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டி யுள்ளது. அவர்களுடைய கருத்துக்களிலிருந்து உயிர்த்த இயேசுவே அனைத்திற்கும் அனைத்துமாய் இருக்கின்றார் என்பது வெள்ளிடைமலை. உயிர்ப்பின் மூலமாக அவர் இறைவன் என்று நிரூபித்தது மட்டுமல்ல, என்றென்றும் நம்மோடு வாழக் கூடியவருமாய் இருக்கிறார். அந்த இறைவனே நமக்கு அனைத்தையும் அளிக் கின்றார் என்றால் நாம் கூறும் இந்தச் சுண்டைக்காய்ப் புதுமைகள் எல்லாம் அவரிடமிருந்துதானே வருகின்றன. பெயரளவில் மட்டும்தானே இந்தப்புதுமை, அந்தப் புதுமை என்று வேறுபடுத்திக் கொள்கின்றோம்! எல்லாம் அவருடைய கொடைகள்தானே! பின் அவர் புதுமை செய்யவில்லை என்று கூறமுடியுமா? நாம் மாதாவிடமும், அந்தோனியாரிடமும் கண்ணை மூடிக்கொண்டு ஓடுகின்றோமே அவர்களா இந்த புதுமைகளையெல்லாம் செய்கின்றார்கள்? புதுமைகள் செய்ய கிறிஸ்து புனிதர்களைக் கருவிகளாகப் பயன்படுத்திக் கொள்கின்றார். ஆனால் நாம் இதை உணராது, ஆதி பரம்பொருளாகிய இறைவனை விட்டுவிட்டு அவர் உபயோகப்படுத்திய கருவிகளை மட்டும் கொண்டாடுதல் முறையா? *நான் புதுமையும் செய்கின்றார் என்று கூறியதற்கு மற்றொரு காரணமும் உண்டு.*

என்னைப் பொறுத்தமட்டில் உயிர்த்த இயேசுவின் முக்கிய அலுவல் நாம் கருதும் ''புதுமை'' களைச் செய்வதுமட்டும் அல்ல. அதனால்தான் அவர் இத்தகைய புதுமைகள் மூலமாகத் தமது புகழைப் பரப்பிக்கொள்வதில்லை.

மாறாக நற்கருணையில் நிறைந்திருந்து என்னுள் ஒருவனாக மாறி என் னையே நடத்திச் செல்லும் மகத்தானச் செயலை புதுமைகளுக்கெல்லாம் பெரிய புதுமையாக ஒவ்வொரு நாளும் தொடர்ந்து நடத்தி வருகின்றார். அவர் என்னோடு இருக்கும் போது வேறு என்ன புதுமை எனக்கு வேண்டும். அவற்றின் முன் புதுமைகள் மிக மிகச்சாதாரணமானவையே. அவை உலக நன்மைகளை மட்டுமே மையமாகக் கொண்டவை. ஆனால் என்னுள் வாழும் உயிர்த்த இயேசு என்னை விண்ணுலகப் பாதைக்கு வழிநடத்திச்செல்கின்றார். இவற்றை நான் ஏன் கூறுகின்றேன் என்றால், ''நமது வாழ்விற்கும் கிறிஸ்துவின் உயிர்ப்புக்கும் என்ன தொடர்பு?'' என்று இன்னும் சிலரைக் கேட்டபோது அவர்களிடமிருந்து பெரும்பாலும் வந்த பதில் ''இருதய ஆண்டவர் கோவிலில்கூட நிறைய புதுமைகள் நடக்கின்றனவாம்'' என்பது. அப்படி இன்றைய உலகம் புதுமையின் மோகத்தில் சென்று கொண்டிருக்கின்றது.

எனவே இவ்வாறு புதுமைப் பித்தர்களாக நாம் இராது, இறைவனின் உதவியை நம் ஆன்ம வாழ்விற்காகவும் நாடவேண்டும். அவ்வாறு நாடும் ஒவ்வொருவருக்கும் உயிர்த்த இயேசு நிச்சயம் அருள் புரிகின்றார். உலகப் புதுமைகளைச் செய்யத் தவறினாலும், ஆன்மீக நன்மைகளை நமக்கு தவராது அள்ளித் தருகின்றார். நான் ஒவ்வொரு மனிதனையும் பார்க்கும்போதும், அவர்களின் உள்மனத்தை ஆராய முயற் சிக்கின்றேன். அவர்கள் அழுகின்றார்களா? சிரிக்கின்றார்களா? அவர்கள் என் னிடம் என்ன எதிர்பார்க்கின்றார்கள்? நான் கிறிஸ்துவின் பிரதிநிதியாகப் போகின் றவன் என்பதை அவர்களுக்கு உணர்த்து கின்றேனா? அவர்கள் குறைகளை என்னால் போக்கமுடியுமா? போன்ற எண்ணங்களே என்னுள் எழுகின்றன. என்னுடைய ஒவ்வொரு சொல்லும் செயலும் கிறிஸ்து என்னுள் இருக்கின்றார் என்பதை எடுத்தியம்பி அதற்கேற்ப செய்யப் பணிக்கின்றன. அவரை பிரதிபலிப்பது எனது தலையாய கடமை, என்பதை உணர்த்துகின்றன. *சுருங்கச் சொன்னால், வாழ்வது நானல்ல என்னில் கிறிஸ்துவே வாழ்கின்றார் (கலா.2:20) என்ற புனித சின்னப்பரின் வார்த்தைகளின் உண்மைப்பொருளை முழுமையாக உணர்கின்றேன். உயிர்த்த இயேசு இத்தனை மகத்தான மாற்றங்களை எங்கள் வாழ்க்கையில் செய்துகொண்டிருக் கின்றாரே! உங்கள் வாழ்க்கையில் கிறிஸ்துவின் உயிர்ப்பு என்ன மாற்றத்தை கொண்டுவந்திருக்கின்றது? பாதுகாவலன் பத்திரிகையை மூடி வைத்துவிட்டு ஐந்து நிமிடம் சிந் தித்துப் பாருங்களேன்!*

*சகோதரர். ச. செல்வராஜர்*  *நன்றி – உயிர்ப்பின் ஒளியில்*

# தென்னிலங்கை பவனி வரும் மருதமடுத் தாயே! அன்பினால் கருணைகாட்டி ஆறுதல் அளிப்பாய் அம்மா!

இளவாலை அமுது என்னு அழைக்கப்படும் சொல்லின் செல்வர் புலவர் மணி அடைக்கலமுத்து மாஸ்டரின் மடுமாதா காவி யம் எனும் நூல் 99ம் ஆண்டு லண்டன் நல்லியதய் ஆலய மண்டபத்தில் வெளியி டப்பட்டது.

அண்மையில் இந்நூலின் பிறிதொரு வெளியீட்டு விழாவினை மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் சேவியர் குரூஸ் அடிகளார் நிகழ்த்தி வைத்தார். மன்னார் புனித சவேரியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் முதற்பிரதியை மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை பெற்றுக் கொண்டார்.

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் ஒழுங்கில் சமாதான தேசிய நிகழ்வான மடு அன்னையின் தென்னிலங்கைக்கான பவனி நடைபெறும் இவ்வேளையில் அமுது அவர்களின் மடு மாதா காவியத்தின் 48ம் 49ம் அத்தியாயங்களின் ஒரு பகுதியை பாதுகாவலன் அன்று நெஞ்சங்கள் சார்பாக மடு அன்னையின் பாதத்தில் எம் மண்ணுக்கு சமாதானம் வேண்டி விண்ணப் பமாக சமர்ப்பிக்கின்றோம்.



மருதமடு மாதாவே என்று சொல்லி
மனமுருக மண்ணுருகப் பக்தர் வெள்ளம்
கருணைப் பெறக் கனிவுடனே பாடக் கேட்டு
கத்துகின்ற தேரைகளால் வாயை மூடி
இருளினிலே கண் பிதுங்கஎழுந்து துள்ளி
என்றுமில்லா குயில் கூட்டம் பாடுதென்று
குரலினிமை பழகிடவே வந்துபோயிற்
குளக்கரையில் தாலாட்டு பாடுமன்றோ

மடுவிலே வாழும் மங்கையர் மணியை
மனதிலே நினைந்தழும் வேளை
திடுமென வானம் திறந்தது போலத்
திக்கெலாம் பெருமழை கொட்டி
அடவியின் மரங்கள் மழையிலே முழுக
ஆறுகள், குளங்களும் பெருகக்
கொடையிலே சிறந்த குமணனும் ஏங்கும்
கோமகள் [illegible] வந்தோம்

### விண்ணப்பம்

*அமைதியின் கேணி*

நாட்டினைப் பிரிந்தோர் போரின்
நடுவிலே கொதித்து வெந்தோர்
தேட்டத்தை இழந்தோர் சின்னஞ்
சிறுவர்கள் துடித்து சாக
வீட்டிலே குண்டு வீழ
வீரிட்டு அலறி வந்தோர்
கேட்டிடு அமைதி ஊற்றின்
கேணியைக் காட்டு வீரே!

*அமைதி என்ற திருப்பால*

சிரித்திடும் நிலவுப் பூவில்
திருவடி வைத்த தாயே!
விரிந்திடும் துயரம் என்னும்
விரிகடல் நீந்தி வந்தோம்
எரிந்திடும் ஈழ நாட்டை
இயேசுவின் கண்ணில் காட்டி,
பிரிந்திடும் அமைதி என்ற
பாலை நீ வார்ப்பாய் அம்மா!

*ஈழம் நனைந்தது*

கண்ணீரின் துளிகளாலே
காலமாய்த் தமிழர் சிந்தும்
எண்ணரும் இரத்தத் தாலே
இழமும் நனைந்த தம்மா!
உண்மையில் உள்ளம் வெந்து
உடலும் விறகாய்ப் போனோம்
நண்ணினோம் இரக்கம் என்ற
நதியினில் முழுக வந்தோம்

*ஆறுதல் அருள்வாய்*

துன்பத்தைச் சுமந்து, கோடி
துயரத்தில் அமிழ்ந்தி ஓடி
இன்பத்தின் வீடு வாசல்
இனசனர் ஆடு மாடு
பொன்பொருள் எல்லாம் விட்டுப்
புயலினில் சருகாய் வந்தோம்
அன்பினால் கருணை காட்டி
ஆறுதல் அளிப்பாய் அம்மா!

*பேரிரக்கமுள்ள பிரிய தாயே*

பேரிரக்கம் மிகவுமுள்ள பிரிய தாயே!
பிள்ளைகளின் தெள்ளமுதே! ஓடி வந்தோம்
ஊரினிலே உம்மிடத்தில் உதவி கேட்டே
ஒருவனை நீர் கைவிட்டீர் என்ற சேதி
பாரினிலே எத்திசையும் கேட்டதில்லை!
பரிசுத்த கன்னிகையே! தயவின் தாயே!
நீர் சொரிந்தோம் மூச்செறிந்தோம் திருமுன் நின்றோம்
நேயமுடன் நாம் கேட்கும்வரம் தாராயோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மாவின் ஈராண்டு நினைவலைகள்

ஆண்டவருக்குள் இறப்பவர் பேறுபெற்றோர்

அன்னையுடன் 17 - 05 - 1917



ஆண்டவருடன் 25 - 03 - 1999

### திருமதி அன்னமுத்து அன்னம்மா ஜோர்ச்

அம்மா ஈராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுதான் வந்த போதிலும் உங்களின் இனிய நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலாதம்மா உங்கள் பிரிவினால் எம்மவர் ஈரவிழிகள் என்றும் காயாதம்மா இவரின் ஆத்ம சாந்தித் திருப்பலி ஏழாலை புனித இசிதோர் ஆலயத்தில் 23- 03- 2001 அன்று மாலை 5. 30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது

*உங்கள் நினைவுகளுடன்*

ஏழாலை தெற்கு
களபாவோடை

மக்கள்,மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

## நினைவஞ்சலி

20ம் ஆண்டு — 6ம் ஆண்டு





**யோ. சத்தியநாதன்**
மண்ணில் 15-9-1927
விண்ணில் 23-6-1981

**ச.அந்தோனியாப்பிள்ளை**
2-6-1936
13-4-1995

மரணத்துள் மறைந்தாலும் எம்மனங்களில் மறையாது என்றும் வாழும் உங்களை நினைவு கூருகிறோம் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ். புனித மரியாள் பேராலயத்திலும் அருள் ஆச்சிரமத்திலும் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்


*இவரின் பிரிவால் துயருறும்*

*21, டேவிற் வீதி,*
*யாழ்ப்பாணம்*

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்

## நினைவகலா 31ம் நாள்

பிறப்பு 05 - 03 - 1949



இறப்பு 01 - 03 - 2001

### அல்பிரட் பெனடிற் (யோகம்)

மன்னவனே உன் வதனம் காண
மனைவி மக்கள் ஏங்கித் தவித்திருக்க – உம்
மறைவுச் செய்தி கேட்டு – தம்
மனதை உருக்கிய நாட்களிப்போ
மாதமொன்றாய் கரைந்ததையா
மாறாத நினைவலைகளோடு – உம்
ஆன்மா சாந்திபெற இறைவனை இறைஞ்சுகிறோம் நிதம்

**01.03.2001 அன்று Swissல் காலமான எமது குடும்ப விளக்கின் மரண செய்திகேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களிற்கும் எமது துக்கத்தில் பங்கெடுத்து கண்ணீர் அஞ்சலியை பத்திரிகையில் பிரசுரித்த யாழ். மரியன்னை பேராலய இயக்கத்தினரிற்கும் குருமட மாணவர்களிற்கும் மற்றும் அருள்தந்தையர்கள் மாணவர்களிற்கும் எம்மோடு பல்வேறு வழிகளில் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்களிற்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.**

*இல. 115 சென் பற்றிக்ஸ் வீதி*
*யாழப்பாணம்.*

*நினைகலா உள்ளங்கள்*
*மனைவி, பிள்ளைகள்*

## 31ம் நாள் நினைவலைகள்

பிறப்பு 20 . 01 . 1936



இறப்பு 19 . 03 . 2001

### அமரர் சவிரிமுத்து செபஸ்தியாம்பிள்ளை

"ஐயா" என்றழைப்பதற்கு ஆர்தான் உண்டு
அன்புக்கு யாரிடம் நாம் பிச்சை கேட்போம்?
காலனவன் வாகனமாய் வந்தானோ!
தந்தை உம்மை நாம் பிரிந்திட்டோமே!

**எம் துயரில் பங்குகொண்ட உங்களுக்கு எம் நன்றிகள்.**

***பிரிவால் வாடும்***

*10, புதுக்குளம்,*
*கன்னாட்டி,*
*வவுனியா.*

**அருட்சகோதரி சில்வியா (தி.ச.) (மகள்),**
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

# மரண அறிவித்தல்







### திருமதி வரோணிக்கம்மா லில்லி சூசைப்பிள்ளை

வீமன்காமம் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வரோணிக்கம்மா லில்லி சூசைப்பிள்ளை 12-02- 2001ல் இறைபதம் அடைந்தார். இவர் காலஞ்சென்ற திரு திருமதி அறுக்காஞ்சிப்பிள்ளை சவிரிமுத்து (வீமன்காமம் தெல்லிப்பளை, ஆயுள்வேத வைத்தியர்) அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற வஸ்தியாம்பிள்ளை சூசைப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் மரியதாஸ் (இத்தாலி), இயேசுதாசன் (இலண்டன்), அன்னமேரி, அன்ரனிதாஸ், அனற் லூக்கரீஸ்ற்றா, மேரி லூர்து தேவதாசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகம், றஞ்சிதம் (இலண்டன்), பார்வதி, ஜெயமணி, யோசவ் அன்ரன், றாஜேஸ்வரன், மரியதாஸ் அகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற கிளாறம்மா அருளம்மா, அந்தோனிப்பிள்ளை (சுப்பிறின்டன், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை), யோண்பிள்ளை (கோவில் மூப்பர்) காலஞ்சென்ற சீமாம்பிள்ளை (Brown group பொறியியலாளர்), மரியாம்பிள்ளை (P.W.D. பொறியியலாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் றாஜன், அமலன், றொகான் (இலண்டன்), டயான் (இலண்டன்), நிமாலினி, யூலியன், றேகன், நேமியன், டேமியன் நிலாணி, றேமியன், சாளினி, சுரேன், கஜேன், ஜெனோஜன், சோபியா, நிரோஜன், சர்மிளா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.


அன்னாரின் ஈமைக்கிரியைகள் உருத்திரபுரத்தில் நடைபெற்றது. இத் தகவலை உற்றார், உறவினர் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல் :
யேசுதாசன்
(மகன், இலண்டன்)

## குருத்துவ திருநிலைப்படுத்தலில் வெள்ளி விழாக் காணும்






### கிளமென்ற் ஞானப்பிரகாசம் அடிகளார் O.S.P.

நித்திய குருவாகிய இயேசுவே! உமது ஊழியர்களாகிய கிளமென்ற் ஞானப்பிரகாசம் அடிகளாரை உமது அடைக்கலத்தில் வைத்து அவர்களுக்கு எவ்வித இடையூறும் நேரிடா வண்ணம் காப்பாற்றியருளும்.

நாள்தோறும் உமது திருச்சரீரத்தைத் தொடுகின்ற அவர்களது அர்ச்சிக்கப்பட்ட கரங்களும் உமது திரு இரத்தத்தால் சிவந்த அவர்களது உதடுகளும் மாசடையாதபடி காப்பாற்றியருளும். குருத்துவ திருமுத்திரையிடப்பட்ட அவர்களது இருதயத்தை உமது புனித நேசத்தால் நிரப்பிப் பரலோகத்திற்குரியதாகச் செய்து, உலக ஆசாபாசங்களில் நின்றும் காத்தருளும். அவர்களின் உழைப்பின் பயனைப் பெருக்கியருளும். அவர்கள் பணிபுரியும் ஆன்மாக்கள் இவ்வுலகில் அவர்களது ஆறுதலும், ஆனந்தமாகவும் பரலோகத்தில் அவர்களது அழகான வெற்றி முடியாகவும் விளங்குவார்களாக. ஆமென்.

வாழ்த்துக்களும் வணக்கங்களும் கூறும் அன்பு நெஞ்சங்கள்

*அருட்சகோதரன் றெஜி*
*சின்னையா யோசவ் செ.தாச*
*குடும்பத்தினர்*

இறைவன் இவருக்கு செய்த அருள்கொடைகளுக்காக 10.04.2001 காலை 6.00மணிக்கு அருள் ஆச்சிரமத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அன்பர்கள் நண்பர்கள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## மீண்டும் ஞாயிறு திருப்பலி

ஞாயிறு தினங்களில் காலை ரியூசன் வகுப்புகளுக்கு செல்பவர்களுக்கு வசதியாக யாழ்-O.L.R. ஆலயத்தில் மதியம் 12மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

சித்திரை மாதம் 22ம் ஞாயிறு முதல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

அருள்திரு A.C. கிறிஸதோபர்
யாழ். மறைக்கோட்ட முதல்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அழைக்கின்றோம் ஓடிவந்து எமைக் காப்பாய்!

சோதனையில் ஒரு சாதனை நீ செய்ய
வேதனையில் ஒரு சாதனை நாம் செய்து
நாதனே உனை இங்கு முறியடித்தோம்
நல்ல பரிசெமக்கு என்ன தருவாய்?

பொன்னோடு பொருள் பண்டம் நாமிழந்தோம்
மண்ணோடு மனை மனித உயிரிழந்தோம்
இவையெல்லாம் திருப்பி நாம் கேட்கவில்லை
இழந்த உரிமையே திருப்பி கேட்டோம்

இழப்பதற்கு இனி எமக்கு ஒன்றுமில்லை
இறப்பதற்கே நாம் பிறந்தோம் என்னும் அந்த
அளப்பரிய தத்துவங்கள் எங்கள் நாட்டில்
அழுதழுதோ அனுதினமும் காணுகிறோம்

களைக்காமல் கல்வாரிப் பாடு ஏற்றாய்
சளைக்காமல் சவால் ஏற்று சாவை வென்றாய்
அழைக்காமல் வந்து எம்மை மீட்ட தேவா
அழைக்கின்றோம் ஓடிவந்து எம்மைக் காப்பாய்

*நவாலியூர் நாயகி*

## பாதுகாவலன் ஆசிரியரின் ஈஸ்டர் வாழ்த்து

எமது மண்ணில் அமைதியின் ஒளிக்கீற்றுக்கள் மீண்டும் ஒரு தடவை தென்படுகின்ற வேளையில் உங்களுக்கு அமைதி உரித்தாகுக! என்று இயேசு உயிர்த்த பின்னர் தம் சீடர்களை வாழ்த்திய அதே வாழ்த்தை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்.

எமது நீண்டகால துன்ப துயரங்கள் நீங்கி, அமைதியும் சமாதானமும் மிக விரைவிலே தோன்றிட உயிர்த்த இயேசு எமக்கு வழிவகுப்பாராக. இயேசுவின் பாஸ்காப் பயணத்தின் துன்ப, துயர அனுபவங்கள் எப்படி தவிர்க்கப்பட முடியாதவையாய் இருந்தனவோ அதேபோல் எமது விடுதலைப் பயணத்திலும் நாம் அனுபவித்த துன்ப துயர அனுபவங்கள் தவிர்க்கப்பட முடியாதவையே.

இனியும் இவை தொடர வேண்டாம். இந்த இறுதி சந்தர்ப்பத்தை சம்பந்தப்பட்ட அனைவரும் உறுதியாகப் பற்றிக்கொண்டு, அமைதிக்கும் சமாதானத்துக்கும் வழி வகுக்க வேண்டுகிறோம்.

**அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை**
பாதுகாவலன், ஆசிரியர்

## அமைதியின் தூதனாய் மீண்டும் உயிர்த்தெழுவாயே!

ஷெல்களும் சொல்லடிகளும்
மலிந்தே நடைப் பிணங்களாய்
அலைந்திடும் எம் துயர்
அகற்றிட உயிர்த்தெழுந்திடுவாயே!

மானிடம் விலைபேசப்படும்
சிறைச்சாலை கதவுகளில்
மனித மாண்பு புத்துயிர் பெறவே
உன்னதனே உயிர்த்து வாருமே!

எஸ்.ஜீ. ரூபா
கோப்பாய்

## சமாதானத்தின் தாயே



நெருப்பாற்றில் விழி கலங்க நீந்து கின்றோம்
நிலவுலகில் அமைதி நாடி ஓடு கின்றோம்.
வருந்துயரைச் சொல்லவொரு வார்த்தை யில்லை
வசந்தத்தைக் காணாது வாடி மொட்டிட்
கருகிவிட்ட நினைவோடிந் கோயில் தேடிக்
களை மறைந்து நடந்துவந்தோம் கருணையாலே
உருகாதோ அம்மாவுன் தாய்மை நெஞ்சு
அரவணைக்க மாட்டாயோ அவலம் தீர்த்து

மண்ணிலென்று சமாதானம் மலரும் ஏங்கும்
மனிதவுயிர் விலையற்று மலிந்தா போகும்
பெண்ணிதயம் மெழுகென்பார் பிழிந்தே அன்பைப்
பூமழையாய்ச் சொரிபவளே! புவியை மீட்க
விண்ணரசு துறந்துவிடி வெள்ளி போல
வந்தவனை பெற்றவளே! அருளின் வெள்ளம்
கண்ணில் ஆடுந் தாய் மரியே! கைகளேந்திக்
கூப்பியழும் எளியோரைக் காப்பாய் நீயே!

**மு. சிங்கராயர்**

## திருவுளப்பணியோர் சபை வருடாந்த ஞானவொடுக்கம்

சமூகத்தில் வாழும்போது துன்ப துயர்களை கடவுளின் சித்தப்படி ஏற்று நம்பிக்கையுடன் வாழுங்கள் அன்னை மரியாள் ஆகட்டும் என்ற வார்த்தையால் தன்னை முழுமையாக அர்ப்பணித்து இறை சித்தத்தை ஏற்று சிலுவை வரை தம் மகனுடன் சென்றாள். அன்னை வழி தொடர அவர் மகன் யேசுவும் தந்தையின் சித்தத்தின் படி ஆகட்டும் என தம்மை தியாகப் பலியாக்கி விடுதலை வாழ்வை பெற்றுத்தந்தார்.

இவ்வாறு 18-03-2001 அன்று யாழ். புனித திரேசம்மாள் ஆலயத்தில் இடம்பெற்ற திருவுளப்பணியோர் சபை வருடாந்த ஞான ஒடுக்கத்தில் வழிநடத்திய மைக்கல் சவுந்தரநாயகம் அடிகள் தெரிவித்தார். அவர் தமது வழிபாட்டில் சிறுவயதில் இருந்து ஏற்பட்ட தாக்கங்களிலிருந்து விடுபட்டு புதிய மனிதனாக சமூகத்தில் வாழ்ந்திட பயனுள்ள முறையில் ஆன்மீக வலுவூட்டினார். யேசுவின் பாஸ்கா நிகழ்வுகளில் நாம் பங்குபற்றி புதிய மனிதராக வாழ வழிகாட்டிய மேற்படி நிகழ்வில் இலங்கையின் திருவுளப் பணியோர் சபை பொறுப்பாளர் அருள்திரு சாந்திகுமார் அவர்கள் வருகைதந்து உற்சாக மூட்டினார்.

யாழ். மாவட்ட பொறுப்பாளர் யேம்ஸ் டன்ஸ்ரன் அடிகளாரின் நெறிப்படுத்தலுடன் 25 குடும்பங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் கலந்து பயன்பெற்றனர்.

இச் சபையைச் சேர்ந்த அங்கத்தவர்கள் அனைவரும் இணைந்து 25-03-2001 அன்று ஆனைக்கோட்டை அன்னை இல்லத்தில் மங்கள வார்த்தை திருநாளை சிறப்பாக கொண்டாடியமை குறிப்பிடத்தக்கது.

*S. G. ரூபவசந்தினி*

## புனிதவாழ்வு வாழ்ந்து உலகில்சாட்சியம் பகருங்கள் திருவுள சபையினரின் மாவட்ட அதிபர் சாந்திக்குமார் அடிகள்

மார்ச் மாதம் 25ம் திகதி திருவுள சபையினரின் பெருவிழாவான மங்கள வார்த்தைத் திருநாளன்று தமது தற்காலிக வதிவிடமான மானிப்பாய் அன்னை இல்லத்தில் யாழ். மறைமாவட்ட திருவுளச் சபையினரின் மாவட்ட அதிபர் சாந்திக்குமார் அடிகள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமது சபையினரின் பணிகளையும் வாழ்க்கை முறையினையும் நேரடியாக கண்டு அவர்களுக்கு உற்சாகமும் உறுதியும் கொடுக்கும் நோக்கோடு தமது உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு அண்மையில் யாழ். நகருக்கு வந்த சாந்திக்குமார் அடிகள் ஆரம்பநிலை, ஆக்கநிலை, அர்ப்பணநிலை, நிரந்தரநிலை ஆகிய நிலைகளிலுள்ள தமது சபையினரின் வாக்குத்தத்தங்களை உறுதிப்படுத்தினார்.

## குருத்துவ பணியில் 60 ஆண்டுகள்

ஜே.ஏ. கருணாகரன் அடிகள் அண்மையில் தமது குருத்துவத்தின் 60ஆண்டு நிறைவினை நன்றியோடு கொண்டாடினார்.

யாழ். மறைமாவட்டத்தில் பணியாற்றிய இவர் சாவகச்சேரிப் பங்கிலிருந்து ஒய்வு பெற்று கனடாவில் தற்போது தங்கி தம் குருத்துவப் பணிகளை மேற்கொண்டு வருகின்றார். நல்ல சுகமும் இறையாசீரைப் பெற்று பணியினைத் தொடர வாழ்த்துகிறோம்.

# சிறப்புமிக்க வரலாற்றுப் பதிவுகள் ஆவணப்படுத்தப்பட்டு பாரம்பரியம் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்

**பேராசிரியர் வ. ஆறுமுகம்**

2001 ஆம் ஆண்டு புனித பத்திரிசியார் தினமான மார்ச் 17ம் திகதி 150வது ஆண்டு சிறப்பு மலர் வெளியீடு கல்லூரியின் மத்தியூஸ் மண்டபத்தில் கல்லூரி அதிபர் அருள்திரு A.I. பேணாட் தலைமையில் நடைபெற்றது.

சிறப்புமலரின் முதற் பிரதியைக் கல்லூரி அதிபரிடமிருந்து கல்லூரியின் முகாமையாளரான யாழ். ஆயர் அதிவணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பெற்றுக்கொண்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் பத்திரிசிய மாணவர் அனைவரும் தத்தம் தரத்திற்கேற்ப பயிலும் வகையில் கணணிப் பொறியை பயன்படுத்துவதற்கு கணணிக்கூடம் ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

பேராசிரியர் வ. ஆறுமுகம் மதிப்பீட்டுரை வழங்குகையில் சிறப்பு மிக்க வரலாற்றுப் பதிவுகள் ஆவணப்படுத்தப்பட்டு கல்லூரியின் பாரம்பரியம் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்றும், அந்த வகையில் கல்லூரி வரலாற்றைப் பிரதிபலிக்கும் சிறந்ததொரு ஆவணமாக இந்த மலர் திகழ்கின்றது என்றார். மேலும் மாணவ சமூகம் கால மாற்றங்களாலும் சமூக தாக்கங்களாலும் நடத்தைக் கோலங்களின் மாற்றத்திற்கு உள்ளாகும் போது புரிந்துணர்வின் அடிப்படையில் மாணவர்களை நவீன சமூகத்தின் மாணவ தலைமுறை உருவாக்கப்பட வேண்டும் என்றார்.

விழாவின் நிறைவில் நன்றி உரை நிகழ்த்திய மலர் ஆசிரியர் அருட்திரு ம. ஜெறோ செல்வநாயகம் உரையாற்றுகையில் கண்டிப்பும் ஒழுக்கமும் நீண்டகாலம் நிலைபெறும் இக்கல்லூரி நவீன கல்வித்தத்துவங்களுக்கேற்ப மாறிவரும் புதிய மாணவ தலைமுறையை உருவாக்கும் பாங்கில் செயற்படுவதால் உயிர்த்துடிப்பான எதிர்கால சமூகத்தை உருவாக்க முடியம் என்று கூறினார்.

மற்றும் சிறப்பு விருந்தினர்கள் சிறப்புப் பிரதிகளைப் பெற்றார்கள். சுமார் 50 ஆக்கங்களைக் கொண்ட இம்மலரில் கல்லூரியின் கடந்தகால வரலாறு பல்வேறு கண்ணோட்டங்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

கல்லூரியை வழிப்படுத்திய ஆயர்கள், நிர்வகித்த அதிபர்கள், நீண்டகாலப் பணிபுரிந்த அசிரியர் பெருந்தகைகள் கல்வி சாரா பணியாளர்கள் பறறிய தகவல்களும் கல்வித்துறையிலும், விளையாட்டுத்துறையிலும் கல்லூரி மாணவர்களின் சாதனைப் பெறுபேறுகளும் தரப்பட்டுள்ளன.

இப்பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளர் யாழ்ப்பாணம் பிரதான வீதி 360 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் ஓவ்செற் முறையில் 2001ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. P.197

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org